காஞ்சனை
"லக்ஷ்மி"
எழுதிய இந்தக்கதையை
ஏற்கனவே பல லக்ஷக்-
கணக்கான வாசகர்கள்
ஆனந்த விகடனில்
வாசித்து மகிழ்ந்ததற்கிணங்க
இப்போது பொறுத்தமான
நடிக நக்ஷத்திரங்களுடன்
திரைப்படமாகத் தயாரிக்கப்
பெற்றுள்ளது...
டைரக்ஷன்:
எஸ். எம். ஸ்ரீராமுலு நாயுடு
பக்ஷிராஜா ஸ்டூடியோஸ்
தயாரிப்பு...
விரைவில் வெளிவருகிறது

THE

INDUSTRIAL & PRUDENTIAL ASSURANCE Co. Ltd.

(H. O. Bombay—Estd. 1913)

Renowned for its Service, Security & Strength.

PROGRESSIVE FEATURES:

New Business Completed in 1951	over	Rs. 230 lakhs.
Total Business in force	about	Rs. 20 Crores.
Total Assets	over	Rs. 545 lakhs.

Variety of schemes at low premiums
Controlled by wellknown Directors.

REPUTED

for its LOW EXPENSE RATIO and PROMPT settlement of claims.

Applications are invited for agencies.

Managing Director: **V. C. Setalvad Esq.** B.A., L.L.B.

INDUSTRIAL ASSURANCE BUILDING,—BOMBAY 1.

MADRAS BRANCH:
10, Linghi Chetty Street,
G. T. MADRAS 1.

MADURA SUB-BRANCH:
Room No. 20, Y.M.C.A. Building,
MADURA.

"கேசரியின்" மூன்று பிரசித்த மருந்துகள்

★ லோத்ரா ★

கர்ப்பாசய ரோக நிவாரணி

சங்காதோஷம், கீல் வாயு, தூக்கமின்மை, அஜீரணம், மலச்சிக்கல், இருமல், காசம், தலைவலி, முதுகுவலி, முதலியவற்றைக் குணப்படுத்தும்.

அம்ருதா

ரத்த சுத்தி டானிக்

ரத்தசோகை, அஜீரணம், மலச்சிக்கல், மந்தமான மூளை, பலவீனம், படபடப்பு, ஞாபகமின்மை, தெளிவற்ற கண்பார்வை, தலை சுற்றல், சரும ரோகங்கள் முதலியவற்றைக் குணப்படுத்தும்.

★ அர்க்கா ★

சிறந்த ஜ்வர நிவாரணி

இன்புளுயன்ஸா, டைபாய்ட், மலேரியா முதலான ஜ்வரங்கள் குணமாகும்.
ஈரல் குலைக்கட்டிகளும் குணமாகும்.

விவரங்களுக்கு எழுதுங்கள்:

கேசரி குடீரம் லிமிடெட்

ராயப்பேட்டை - மதராஸ்-14

SISTA'S - KM (S) - 54

199333

இந்தியாவின் தொழில்
அபிவிருத்தி திட்டங்களுக்கு



தி அஸோஸியேடட் சிமெண்டு கம்பெனீஸ் லிமிடெட்
இவர்களின் வியாபார மானேஜர்கள்
தி சிமெண்டு மார்க்கெட்டிங் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்

SISTA'S. CMI. 70 A TAMIL

மாரிஸ் மைனர் எந்த வகையைச் சேர்ந்த கார்?



கடினமான பேரம் செய்தாலும் மதிப்பின் தராதரத்தையும் அறிந்தவர்களானால் மாரிஸை பெருமையுடன் வாங்குவர். இந்தக் கார்களை அவர்கள் தமது வியாபார ஆஸ்திகளாகவே கருதுகின்றனர்—தாரதம்யங்களை யறிந்தவர் என்பதை ருசுப்பிக்கும் ஆஸ்திகள் இவை. இம்மாதிரி மனிதர்கள் கூடுமிடங்களில் மாரிஸ் மைனர்களையும் எப்போதும் காணலாம்.

படத்தில் காணப்படும் நவீன “மாரிஸ் மைனர் 50 வருட காலமாக என்ஜின் வேலைப்பாடு மேன்மைக்கும், சேவைச் சிறப்பிற்கும் கிடைத்த மாரிஸ் பரம்பரைப் புகழை மேலும் அதிகரிக்கச் செய்பவை.

இந்தக் காரில் ஒருமுறை ஏறி ஓட்டிப்பார்த்து அதன் உண்மைச் சிறப்பை அறியுங்கள்.



“தரமே முதன்மையாகக் கொண்ட”

மாரிஸ் மைனர்

4 கதவுள்ள ஸலூன்

அடிஸன் & கம்பெனி லிமிடெட்,

மதராஸ் – பெங்களூர் – கோயமுத்தூர்

மற்றும் விற்பனை & ஸர்வீஸ் வசதியுள்ள ஜில்லா வியாபாரிகள்.

ADZ 50

ஜண்டு பாலாமிருதம்

வலுவற்ற குழந்தைகளுக்கும், மெலிந்த தேகிகட்கும் மேலான ஔஷதம். தேகத்திற்குப் புஷ்டியைத் தரும். தளர்ந்த நரம்புகளுக்கு வலுவைத் தரும். 4 அவுன்ஸ் புட்டி 1-4-0

கீழ்க் கண்ட ஏஜண்டுகளிடம் கிடைக்கும்.

கோயம்புத்தூர்: டி. எஸ். வி. அண்டு சன்ஸ், மில்ரோட்.
சேலம்: தி. ஸிடிமெடிகல் ஸ்டோர்ஸ், கடைத்தெருவு.
உதகமண்டலம்: ஸேட் சிவலால் நாத்மல் அண்டு கோ.
திருப்பூர்: ஆர். எஸ். வாஸன் அண்டு கோ.
ஈரோடு: மெடிகல் எம்போரியம்.
கரூர்: மோஹன் ஸ்டோர்ஸ், திண்டுக்கல் ரோடு.
ராமநாதபுரம்: ராஜன் மெடிகல் ஹால் | திருநெல்வேலி ஜங்ஷன்; ஜயலக்ஷ்மி மெடிகல் ஸ்டோர்ஸ்.

வியாபார நிபந்தனைகளுக்கும், மற்ற விபரங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

சென்னை ராஜதானி ஏஜண்டுகள்:

தாமோதர் அண்டு கோ,

113, நயனியப்பநாயக்கன் தெரு சென்னை, 3.

தாமத மாதவிடாயா?

''சக்தி பில்ஸ்'' எக்காரணத்தாலும், எவ்விதத்திலும் தாமதமானதோ அல்லது வேறு கோளாறினாலோ சிரமப்படும் மாதவிடாய்க்கு நிச்சயமானதும், விசேஷ குணமும் அமைந்த நிவாரணி. இது விரைவில் குணமளிக்கின்றது. நெடுநாள் தாமதப்பட்டதும், முறை தவறி ஏற்படுதலுமான எல்லா வியாதிகளையும் சொஸ்தமாக்குகிறது. கியாரண்டியான ரிஸல்ட்கள். விலை ரூ. 7--0--0 (சாதாரணம்) ஸ்பெஷல் விலை ரூ. 9--0--0 (இணங்காத கேஸ்களுக்கு) [வி. பி. சார்ஜ் தனி]

கர்ப்பத்தடை

''கௌரி பில்ஸ்'' மிகவும் சக்திவாய்ந்த யுனானி மருந்து. 12 தின உபயோகத்தில் நிரந்தரமாகக் கர்ப்பம் ஏற்படுவதைத் தடுத்து விடுகிறது. எந்தச் சீதோஷ்ண நிலைமைக்கும் குணமானதும் ஒருவித அபாயமுமில்லாதது என்று நிரூபிக்கின்றது. மாதவிடாய் சரியாவதோடு தேகத்திற்கு எவ்விதத்திலும் பாதிக்காது. நம்பிக்கையான முறை. ஆறு வருஷ கியாரண்டியான ரிஸல்ட்கள். விலை ரூ. 10/- (வி. பி. சார்ஜ் தனி)

JANATA & Co. (3) :: 205, MINT ST., MADRAS-1

தென் பாகம் முழுவதிலும், ஸிலோனிலும் ஏஜண்ட்கள் தேவை.



TWO FURROW PLOUGH : A general purpose implement for ploughing

More Food at Less Cost

WITH

The *Ferguson* System

இலவசம் பெர்கூஸன் வசதிகள் :

● உங்கள் நிலங்களிலேயே வேலை செய்து காட்டப்படும். ● உங்கள் நிலங்களிலேயே ஆப்ரேட்டர் பயிற்சி அளிக்கப்படும். ● இயந்திரங்கள் அமைத்ததிலிருந்து உங்கள் நிலங்களில் ஆறு மாதாந்தர ஸர்வீஸ்கள். ● இத்துடன் வருடம் பூராவும் உங்கள் நிலங்களில் சகல வேலைகளையும் செய்ய உபகரணங்கள். ● ஸ்பேர் சாமான்கள் உங்கள் அருகாமையிலேயே கிடைக்கிறது. ● உங்கள் நிலங்களில் வேலை செய்ய பூர்ண திறமை வாய்ந்தது, விலையில் மிகச் சிக்கனம்.

விலை ரூ. 7300/- இந்த விலை டீலர்கள் ஸ்டேஷன்வரை, இதில் விற்பனை வரி உள்ளூர் வரிகள் சேர்க்கவில்லை.



கெட்டியான வரம்பு கட்டி



க்ரெயின் டிரில் அதி-வேக விதைப்பு

டீலர்கள் :

கமானி இன்ஜினியரிங் கார்ப்பொரேஷன் லிட்., சாகர் மான்ஷன், ஜோன்ஸ் தெரு, பிராட்வே, மதராஸ் 1; ஸ்டாக்கிஸ்ட்ஸ்: காமினேனி பார்மிங் கார்ப்பொரேஷன், வாகப் பட்டணம்; S. பாப்பன்ன ஸெட்டி, ஹாஸ்பட்; சந்தரம் & ஸன்ஸ், 42, கிருஷ்ண ராவ் குளத் தெரு, மதுரை: ஸ்டேன்ஸ் மோட்டார்ஸ் (தெ. இ.) லிட், கோயமுத்தூர்-கள்ளிக்கோட்டை - உதகமண்டலம்-திருவனந்தபுரம்; வெப்ஸ் பார்ம் மெக்கானை சேஷன், 30, மகாத்மா காந்தி ரோட், பங்களூர் & மைசூர்; அருண் ஆட்டோமோபைலஸ், 103, அலெக்ஸாண்டரா ரோட், செகந்தராபாத்; பார்மிங் மெஷினரி & ஸர்வீஸ், பெஸண்ட் ரோடு, விஜயவாடா

KAMANI ENGINEERING CORPORATION LIMITED.

KAMANI CHAMBERS, NICOL ROAD, BALLARD ESTATE, BOMBAY.

குழந்தைப்பருவத்தில்
முக்கியமான சுகத்தைத் தரும்
வுட்வார்ட் வைத்தியனின்
"கிரைப் வாட்டர்"
என்னும் மருந்துத் திராவகம்
குழந்தைக்கு
ஆரோக்கியத்தைத் தரும்

WOODWARD'S
GRIPE WATER

W. WOODWARD LTD., LONDON. ENGLAND

Agent T. T. KRISHNAMACHARI & Co, 12 A, Linghi Chetty Street, G. T. MADRAS.

காவேரி

[stamp]

பொருளடக்கம்

நந்தன மலர் 11 | சித்திரை இதழ் 9

ராஜாஜி 11
எஸ். என். ராமஸ்வாமி

நாகரீகம் எங்கே?—(தொடர் கதை) 14
ஜி. எஸ். மணி

சினிமாப் பகுதி 21
கண்ணன்

மனம் போல் வாழ்வு 25
ஆர். சுப்பிரமணியன்

அகலாத இருள் 35
ரா. பாலாஜி

நீதி விலைத்தது 38
முகவை ஜி. எஸ். மணியம்

ஸிக்கிரீயா 43
சாமா

கண்ணின் பயன்...கண்ணீர்... 47
சுகி

பிரயாணக் குறிப்புகள் 53
சி. வி. ராமகிருஷ்ணன்

மனமும் மணமும்... 63
தி. சேஷாத்திரி

பணமும் குணமும் 69
எஸ். பி. ஹர்ஷன்

குறிப்பு:

'காவேரி'யில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும் அவற்றை எழுதியவர்களுடையனவே. அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்ல.

மேன்மையின்

பெருமை அநேக வருஷ

உழைப்பிற்குப் பின்னும் விளங்கும்



ஸைக்கிள்கள்

ஸைக்கிள் சாமான்கள்

பெராம்புலேட்டர்கள்

குழந்தை வண்டிகள்

இவைகளில்

உயரிய ரகத்திற்கு

நம்பி வாங்க

இங்கிலீஷ் சைக்கிள் & மோட்டர்

இம்போர்டிங் கம்பெனி லிமிடெட்

2/9 பிராட்வே :: :: மதராஸ் 1.

தந்தி :—"ஸைக்கிள்ஸ்" போன்: 3168

காவேரி

நந்தன ௵ மலர் 11	"சென்றிடுவீ ரெட்டுத்திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"—பாரதியார்	சித்திரை இதழ் 9

ராஜாஜி

எஸ். என். ராமஸ்வாமி

தமிழ் நாட்டில், ஏழு வருடமாகக் காங்கிரஸ் அதிகாரிகளின் போக்கு பண்பாடற்றிருந்தது. மக்கள் மனதில் வெறுப்பு மூண்டது. துயரம் ஓங்கியது. துவேஷப் பிரசாரம் உச்ச நிலையை அடைந்தது. விமோசனம் ஏதும் உண்டோ என்று மக்கள் கிலியில் மயங்கினார்கள். ஆனால் தேர்தல் ஒருவித வழி காட்டியது. காங்கிரஸ் நிறுத்திய நபர்களை மக்கள் மறுத்தனர். காங்கிரஸிற்கு நாற்பது சதவிகித வெற்றியே கிடைத்தது. மந்திரி சபை அமைப்பு மேலும் ஒரு பிரச்னையாக ஆயிற்று. கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போல், கம்யூனிஸம் முளைத்து, நிலவள ஜில்லாக்களைப் பயத்தில் முழுக்கியது. ஒப்பந்தங்கள் ஊசலாடின. தமிழர்களுக்குள்ளேயே, பிரிவினை—விருப்பு வெறுப்பு. மேலும் "உதிரி" பிரதிநிதிகள், பணக்காரர்கள் சூழ்ச்சி. தலைவர் மட்டும் காணோம்! ஏங்கி நின்றது, பொதுஜனம். [தேர்தல்] தோல்வி விசனத்தை, விமோசனமாக்கச் சில உண்மையான தேச பக்தர்களும், உழைப்பாளிகளும் முயன்றார்கள். "தஞ்சம் நீ கதியே" என்று காங்கிரஸ் பிரதிநிதிகள் ராஜாஜியைத் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுத்து, வேண்டினர். ராஜாஜி மறுத்து விடுவாரென்று ஒரு சிலர் நினைத்து, பழைய புராணம் புரட்ட ஆயத்தமானார்கள். பாவம் ஏமாற்றமடைந்தார்கள்!

தேச நலம் ஒன்றே பிரதானம், காங்கிரஸும் தாமும் அந்நலனுக்கு அர்ப்பணம் என்று வாழ்க்கை நடத்திய ராஜாஜி, பிரதிநிதிகளின் கோரிக்கையை நாடு சீர்கேடு அடைவதைக் காணச் சகியாது ஏற்றார்.

ஆத்ம சிந்தனைக்கும் இடம் உண்டு. ஆதாரம் காண்பது எளிது. தற்போதைய நம தலைவர்கள் பாக்கியவான்கள்—தாங்கள் எடுத்த தேச விடுதலைப் போராட்டத்தைச் செவ்வனே இயற்றி, தம் வாழ்நாட்களிலேயே விடுதலையடைந்தனர். ஆனால் ராஜாஜியின் வாழ்க்கை ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்தைந்து முதல் மாறிமாறி மேலும் மேலும் தூய்மை அடைந்து ஒளி வீசிற்று. இவ்வேழு வருடங்கள் ஒரு தனிப்பகுதி அல்ல.

1910 முதலே, இதே போராட்டம், வெற்றி, நெறி வழுவா உழைப்பு ஆரம்பமாயிற்று. பூசலுக்கும பாசாங்கிற்கும் இடமில்லை. தேச நலனே குறிக்கோள். ஆதி முதல் வைதிகத்தின்மேல் போர்புரிந்தார். முதலில் ஜாதி சம்பந்தமாக, சேலம் தண்ணீர்க் குழாயில் ஆரம்பமாயிற்று. பிறகு பெஸெண்ட் அம்மையாரின் முதல் மகாயுத்த ஒத்துழைப்புத் தீர்மானம். அடுத்தாற்போல் சட்டசபையில் நுழையும் பிரச்னையின் காலம். 1942, கிரிப்ஸ் திட்டம், பாகிஸ்தான் பிரச்னை. இவை எல்லாவற்றிலும், எதிர்த்து நின்று போராடி, வெற்றி கண்டவரைத் திருப்பரங்குன்றம் மகாநாடு விரட்டியது. இவ்வருடம் முதலே துவேஷப் பிரசாரமும் ஊழலும் மேலோங்கின. பண்பாட்டிற்கும் நேர்மைக்கும் அன்றே குழி வெட்டியாகிவிட்டது. இதன் பலனைத் தேர்தலில் கண்டோம்—தோல்வி மூலம்!

விபரீத எதிர்ப் பிரசாரத்திலும் கூட ராஜாஜி சஞ்சலமடையவில்லை. சினங்கொள்ளவில்லை, தம் கட்சியை எடுத்துரைப்பதில் சோர்வு அடையவில்லை. தன்னம்பிக்கையும் திடமும் நேர்மையும் இவரிடம் பிரதிபலித்தன. அந்நாளில் மஹாத்மாஜியிடமிருந்து அவரைப் புகழும் ஒரு கடிதம் துண்டுப் பிரசாரத்தின் மூலம் வெளியாக்க ஏற்பாடு ஆயிற்று. அன்னார் அதை அறிந்ததும் அப்பிரதிகளைக் கொளுத்தி, "காந்திஜி போதித்த வழியை நான் சரியாகக் கடைப்பிடித்து ஒழுகி இருந்தால், தமிழ் மக்களின் ஆதரவை நான் ஒரு நாளும் இழந்துவிட மாட்டேன்" என்று உரைத்தார். அன்னாரே அப்படி உரைத்தால் மற்றவர்களைச் சீர்தூக்

இப் பார்ப்பது மிகச் சுலபம். ஆனால் இன்னும் தலைவர்களாகக் காணப்படுகிறார்களே என்பதுதான் வியப்பு. ஒருவேளை காந்தீயம் ராஜ்காட்டில் சமாதியுற்றதோ!?

1942இல் ராஜாஜி தீர்க்க தரிசனத்துடன் காட்டிய வழி ஐந்து வருஷங்களுக்கு அப்பால் நிகழ்ந்தது. "முன்பே நடந்திருந்தால்" "ராஜாஜி சொற்படி கேட்டிருந்தால்" சரித்திராசிரியர்களின் சூசனை.

1947 முதல் பதவியும் புகழும் அவரைத் தழுவின. தமிழ்நாடு கூட அவரைப் போற்றியது. "கோவிலில் வைத்துக் கும்பிட" இன்று (1948) பலர் முன் வருகின்றனர். மூலவராக!! உத்ஸவராக மாறி விட்டால் என்னாகுமென்று சொல்வதற்கில்லை. "சபலம் அவருக்கில்லை, சஞ்சலம் பலருக்குண்டு" என்று ஆசிரியர் எழுதினார்.

நான்கு மாதத்திற்கு முன்பு கூட, தேர்தலில் அவர் ஈடுபடவில்லை. இன்று பதவி ஏற்பாடாகிவிட்டது, மூலவர் உத்ஸவராக மாறிவிட்டார்.

நொடிப் பொழுதில் நடந்தது போல், எல்லாம் மின்னல் வேகத்தில் செல்கின்றன. நாட்டிற்கு நல்ல காலம் பிறந்து விட்டது. தூய வாழ்க்கை, கடைந்தெடுத்த ஆத்ம ஞானம், நெறி வழி, திடசித்தம், ஆழ்ந்த அனுபவம், — இவைதான் அஸ்திவாரம். ஆலோசித்து அலசி முடிவிற்கு வருமுன், எப்பணியையும் கையாள மாட்டார். கையாளும் முறையையும் உடனடியாக வகுப்பார். பிறகு அவரை யாரும் எந்த அவச்சொல்லும் பாதிக்காது. இதற்கு ஓர் உதாரணம் உண்டு. 1921இல் சத்யாக்ரஹம் சில நாள் தள்ளிப்போட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. பலர் அவரை ஏளனம் செய்தனர். அப்பொழுது அதைப் பற்றித் தம் நண்பர் ஒருவருக்கு, [10—12—21] பின் வருமாறு எழுதினார்:—

"நண்பர்கள் என்னைக் குறை கூறித் தூஷிக்க முற்படுவார்களாயின் அவர் தம் பொறுமைக்கு ஈடு கொடுத்து என்னை ரக்ஷித்துக் கொள்ள வேண்டுமென்கிற அவசியமில்லை. என் மனச்சாட்சி எனக்கு ஆணையிடுவதை அறிவேன்." 31 வருடங்களாக, இவ் வாணைப்படி, ஈசனே சாட்சி என்ற நம்பிக்கையுடன் வாழ்ந்து வந்தார். அப் பெரியாரைப் போற்றாமல் ஒரு சிலர் விரட்டினர்கள். ஆனால் ஏழு வருடத்திற்குள்ளாக, அவருடைய 'அஞ்சேல்' என்ற அபயத் தலைமையைப் பெற்றோம். இத் தலைமையைப் போன வருடமே அடைந்திருந்தால், தேர்தல் விஷயம் சிறப்பாக முடிந்திருக்கும்.

அவருடைய ஹாஸ்யம், நுண்ணறிவு, ஆற்றல், அடக்கம் பற்றி, பல வெளியீடுகள் உண்டு. அவருடைய தளர்ந்த வயதில் அமர்ந்த பதவி, காரியாம்சத்தில் வெற்றி பெற்று, நாடு நலங்காண, பொதுஜனம் ஊக்கமுற, ஒவ்வொருவரும் தம் தம் கடமையைச்செய்து, உரிமைகளை மறக்கவேண்டும். வீண் விவாதங்களிலும் சர்ச்சையிலும் இறங்கக்கூடாது. மந்திரிப் பதவிகள் யாருக்குப் போனால் என்ன? ஆசான் பொறுக்கியெடுத்த நபர்— வேறென்ன வேண்டும்?

அன்று அவர் சொன்னதை மனதிலிருத்த வேண்டும், "நான் என் கடமையைச் செய்து முடிப்பேன். எனக்கு இடையூறுரும் காரணம் இரு பகுதி. ஒன்று அறிவற்ற பொருள்கள். இரண்டாவது அறிவுள்ள மனிதர்களில் வழி தப்பியவர்களும், நெறி அறியாதவர்களும்" இவ்விரு பகுதிகளும் ராஜீயத்தில் எப்பொழுதும் விலக்கப்பட வேண்டியவை.

தீர்க்கதரிசியாதலாலும், புராண உண்மைகளை ஆராய்ந்தவராதலாலும், அவர் செய்யும் காரியங்களின் உட்கருத்து, உடனடியாகப் புலப்படுவது கடினம். நம் அறியாமையால், அகந்தைக்காரரென்று கூறவும் தோன்றும். என்றும் நெறி தவறாதவர். தேச நலனுக்காகவே ஜீவிப்பவரென்பதை அன்றுடம் ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும். கொள்கைக்கு மாறாகக் காணப்படுவதை மறுப்பவர். சிநேகிதனின் நட்பையும் மறப்பார். 1928இல், டாக்டர் ராஜன் தம் ஆஸ்பத்திரியில் எக்ஸ்-ரே பகுதியை ஏற்படுத்தி, அப்பொழுது தம்முடன் தங்கியிருந்த மஹாத்மாஜீயைத் திறப்புவிழா நடத்தும்படி கோரினார். எக்ஸ்—ரே பகுதி தனிப்பட்ட நபரின் லாபத்திற்காக ஏற்பட்டதாகையால், மஹாத்மாஜீ அதில் கலந்துகொள்ளக் கூடாதென்று இரவு முழுவதும் ராஜாஜி வாதாடினார். டாக்டர் ராஜன் சிநேகிதம் விவாதத்தில் மறைந்தது.

காங்கிரஸையே தேச நலனுக்குப் பணயம் வைப்பார். மனிதர் என்றால் குறைகள் இல்லாமல் இல்லை. அறிஞர் அவரைப்பற்றி எழுதியது— "அறிவை அளவு கோலாகக் கொண்டு அன்பை அலக்ஷியம் செய்தார். மனதிலே நிம்மதிகாணச் சற்றுச் சிரமப்பட்டது." நாமும் அறிவை வளர்த்து, அவருக்கும் அன்பை வளர்த்துப் போற்றும் லக்ஷியம் காண இறைவனைப் போற்றுவோமாக!

வரலக்ஷ்மிப் போட்டி — 26 Govt. Regd. No. 816

பரிசு ரூபாய் 10000

முதற் பரிசு ரூ 7000

மற்றபரிசுகள் ரூ 3000

(சரியான விடைக்கும், 1, 2, 3 தவறுள்ள விடைகளுக்கும் பரிசுகள் வழங்கப்படும்.)
சீல் விடை - சென்னை ப்ரீமியர் பாங்கில்

ஸ்பெஷல் பரிசு. சரியான விடை அனுப்பும் ஒவ்வொருவருக்கும் ஒரு அழகிய வெள்ளி தட்டம்.

★ பிரவேசக் கட்டணம்: கூப்பன் ஒவ்வொன்றுக்கும் அணா நான்கு மட்டுமே. ★

சலுகை: பத்து கூப்பன் அனுப்பும் ஒவ்வொருவரும் மேற்கொண்டு இரண்டு கூப்பன் இலவசமாக அனுப்பலாம்.

முடிவு தேதி 10—5—52

		விடைகள் 1	2
1	வேலைக்காரச் சிறுவனுக்கு .... ஆக ஒரு சட்டை கொடுத்தால் எவ்வளவு மகிழ்ச்சியடைவான் அவன்!	பரிசு	புதிசு
2	என்னதான் பொறுமைசாலியானாலும் பிறர் இப்படியாகப் பேசினால் கேட்டுக் கொண்டிருப்போமா?	ஏளனம்	கேவலம்
3	ஒரு வரனை நிச்சயிக்குமுன் பிள்ளைக்கு இது ஏதாவது உண்டா என அவசியம் அறிந்துகொள்வார்கள்.	சொத்து	வித்தை
4	சற்றும் எதிர்பாராத சம்பவம் ஒன்று நடந்தால் நமக்கு இது உண்டாவது இயற்கையே!	திகைப்பு	வியப்பு
5	இது சரியாகத் தெரியாதவர்கள் தனியே வெளியே செல்லலாமா?	வழி	விழி
6	அனுபவமில்லாத புது வேலையாளை வைத்துக்கொண்டு தொழில் நடத்தினால் இது உண்டாகக்கூடும்.	கஷ்டம்	நஷ்டம்
7	மனைவி இப்படியானவள் என்றால் கணவனுக்கு வாழ்க்கையில் அமைதியிருக்குமா?	வாயாடி	நோயாளி
8	மிகவும் .... புத்தகம் என்றால் நாம் அதை ஒரே மூச்சில் படித்து முடித்து விடக்கூடும்.	இனியது	சிறியது
9	மன உறுதியற்ற ஆண்மகனாயிருப்பின் ஒரு பெண்ணின் இதற்கு வசியப்பட்டு விடக்கூடும்.	கண்ணீர்	கண்ணடி
10	இது நடக்குமிடத்தில் ஜனக் கும்பல் இருக்கத்தானே செய்யும்? (விந்தை=வேடிக்கை)	சந்தை	விந்தை
11	சில நோய்களுக்கு டாக்டர் ஒரு இதை சிபார்சு செய்யக்கூடும்.	மாத்திரை	யாத்திரை
12	இளம் மனைவி ஒரு பண்டத்திற்காக .... ஆகக் கேட்கும்போது எந்தக் கணவனால்தான் மறுக்க முடியும்?	கெஞ்சல்	கொஞ்சல்
13	தவப் புதல்வரின் தலைமையில் புதிய மந்திரி சபை அமைந்துவிட்டது. இனி இது நாட்டைவிட்டு அடியுடன் அகலுமென எதிர்பார்க்கலாம்.	பஞ்சம்	லஞ்சம்

மேலே உள்ள கட்டத்தில் பதின்மூன்று குறிப்புகளும் அவை ஒவ்வொன்றுக்கும் இரண்டு இரண்டு விடைகளும் தரப்பட்டுள்ளன. அதில் குறிப்புக்கு மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதவும். விடைகளைச் சாதா காகிதத்திலும் எழுதலாம், அச்சுக் கூப்பன்களும் இலவசம். விடைகளை வார்த்தைகளாகவோ 1-2 எண்களை உபயோகித்தோ எழுதவும். இப் போட்டியின் சரியான விடை காவேரி வைகாசி இதழில் வெளிவரும். சகல விஷயங்களிலும் ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

விடைகளும் கட்டணமும் அனுப்பவேண்டிய விலாசம்:—

மானேஜர், வரலக்ஷ்மி கம்பெனி "ஸ்ரீவாஸ்" பலமநேர் P. O. (சித்தூர் ஜில்லா)

நமது அடுத்த போட்டி முதல் மாதமிருமுறை — எதிர்பாருங்கள்!

போட்டி 25-ன் சரியான விடை:-
(1) மாலை (2) விசம் (3) துச்சம் (4) கூர்மை (5) சபலம் (6) பொறுதி (7) சுமார் (8) வருத்தம் (9) தாரம் (10) பாடல் (11) சுத்தம் (12) விவாகம் (13) இலாபம் 1 1 1 1 1 2 2 2 2 2 1 1 1

போட்டி—24 ன் பரிசு விவரம் முதற் பரிசு தலைக்கு ரூ. 70—0—0 விதமும் 2வது பரிசு தலைக்கு ரூ. 10—0—0 விதமும் 3வது பரிசு தலைக்கு ரூ. 3—0—0 விதமும் 4வது பரிசு தலைக்கு ரூ. 0—8—0 விதமும் பகிர்ந்து வழங்கப்பட்டன. பரிசுத் தொகைகள் 5—4—52 தேதியன்று அனுப்பப்பட்டன, மற்ற விவரங்கள் வரலக்ஷ்மி ரொஸ்வர்ட்ஸ் நெ. 26ல் இதழ் இலவசம்.

எங்கும் கலக்டர்கள் தேவை. நல்ல கமிஷனும் மெரிட் பரிசும் உண்டு.

தொடர் கதை
ஜி.எஸ்.மணி
எழுதும்
நாகரீகம்
எங்கே?

வனப்புமிகுந்த வனஜா பெருமூச்செறிந்து கொண்டு நின்றாள். மதி வதனத்திலே விவரிக்கமுடியாத கிலேசம்; ஒளிச்சுடர் தெறிக்கும் விழிகளிலே சொல்லமுடியாத ஏமாற்றத்தின் நிழல்; யௌவனம் பொங்கி வழியும் தேகமாத்யந்தம் அர்த்தமற்ற ஒரு நிதானம்.

ஸ்னானம் செய்ததனால் ஈரமாகிவிட்டிருந்த நீண்ட கூந்தலைக் காற்றாடக் கோதிவிட்டுக் கொண்டபடியே வனஜா மேல்மாடியில் தனியாக நின்றுகொண்டிருந்தாள்.

வஸந்தகாலத்தின் அற்புத அழகின் ஒரு சிறு பகுதி அவ்விடமும் தலை நீட்டி எட்டிப் பார்த்தது.

ஜன்னலருகே வைக்கப்பட்டிருந்த ரோஜாத் தொட்டியிலே பூரணமாக மலர்ந்த இரு மலர்கள் மனத்தை மயக்கும்படி புன்னகை பூத்தன. அருகில் ஓங்கி வளர்ந்திருந்த ஒரு மரத்தின் உச்சாணிக் கிளையிலே ஆணும், பெண்ணுமாக ஒரு ஜோடிக் கிளிகள் கொஞ்சிக் குலாவின; தெருவிலே இளந் தம்பதிகளும், காதலர்களும் உல்லாஸமாகப் பேசிச் சிரித்தபடி ஜோடி ஜோடியாக உலாவப் போயினர்.

கண்ணில் பட்டதெல்லாம் ஜோடிகளே; மனமொத்து முறுவலிக்கும் ஜோடிகளே.

தனியாக இருந்த வனஜா மீண்டும் நெடுமூச்செறிந்தாள்.

இடிவிழுந்து பட்டுப்போன ஒரு தனி மரம் மட்டும் தனித்து நின்று ஏங்கிய வனஜாவை நோக்கி உயிரற்று விழித்தது.

அவள் வாழ்வும் அந்தமாதிரி சிதைந்து போனது தானோ?

நாலு வீடுகள் தள்ளி அப்பாலிருந்து யாரோ பாடகன் ஒருவன் மோஹன ராகத்தை அழகு பெற ஆலாபனை செய்துகொண்டிருந்தான்.

தன் நினைவிழந்தவளாய் வனஜா அந்த ஸங்கீதத்தை அனுபவித்துக்கொண்டு நின்றாள்.

"மாடி மேலே மாடி,
அது மேலே ஒரு லேடி,
அவளும், நானும் ஜோடி!"

என்ற கர்ணகடூரமான குரல் ஒன்று அமிருதத்தில் விஷமெனக் கலந்துவந்தது கேட்டுத் திடுக்கிட்டவளாய் சட்டென்று குனிந்து குரல்வந்த தெருப்பக்கம் பார்த்தாள்:

எவனோ காவாலி தெருவில் நின்றபடியே வனஜாவை நிமிர்ந்து நோக்கிப் பல்லைக் காட்டினான்.

'ஓ!' என்று முகத்தைச் சுளித்தபடியே சடேரென்று அந்த முரட்டு மனிதன் பார்வையிலிருந்து மறைந்து நின்று கொண்டாள்.

எட்டியிருந்த கருவண்டு ஒன்று அவள் முகத்திற்கெதிரே பறந்து வந்தது; அப்புறம் அப்பால்

விலகி அந்த ரோஜா மலர்களைச் சுற்றிச் சுற்றி ரீங்காரமிட்டபடியே வட்டமிட்டது; அப்புறம் ஒவ்வொன்றாக அவற்றின் மீது அமர்ந்து செவ்விதழ்களின் மூலம் தேனைப் பருகியது.

வனஜா தன் இதழ்களை நாவினால் தடவிக் கொண்டாள்.

குழந்தைகள் 'தடதட' வென்று மாடிப்படியேறிவரும் சத்தம் கேட்டது.

'காச்சு மூச்சு' என்று ஏதோ கத்திப் பேசிக் கொண்டே குழந்தைகள்—ஸரஸாவும், அவள் அண்ணன் பாலுவும் உத்ஸாகமாக ஓடிவந்தார்கள்.

அங்கு நின்ற வனஜாவைப் பார்த்து ஸரஸா, "அக்கா! அண்ணனும், நானும் அப்பா-அம்மா விளையாட்டு விளையாடப் போகிறோம்; நீயும் பாக்கறயா?" என்று சந்தோஷமாகக் கூவினாள்.



வனஜா சிரித்துக் கொண்டே தலையாட்டினாள்.

குழந்தைகளின் விளையாட்டுத் தொடங்கியது.

பெண் உடை தரித்திருந்த மரப்பாச்சியொன்றை ஸரஸா தூக்கி நிறுத்திக் கொண்டே பாலுவைப் பார்த்து, "ஏன்னா! நம்ம கொழந்தைக்கு கல்யாணம் பண்ணற வயசாச்சே; யாராவது மாப்பிள்ளையை பிடியுங்களேன்!" என்றாள்.

அதற்குப் பாலு வெகு அலக்ஷ்யமாக, "ஆ...மா! கல்யாணம் பண்ணிக் கண்ட பலன் என்ன? நம்ம வனஜா அக்கா மாதிரி இதுவும் புருஷன் வீடு போகாமல் இருக்கவா! கல்யாணமுமாச்சு; எழவுமாச்சு! சும்மாப் படிக்கட்டும்!" என்றான்.

அண்ணனுக்குத் தெரிந்திருந்த அளவு தங்கைக்குத் தெரியவில்லை; ஆகவே அவள் வனஜாவைப் பார்த்து, "பாரு, அக்கா! இவன் பேசறதை! இதுக்கு நான் என்ன பண்ணறது? ஸரியாக விளையாடும்படி சொல்லு அக்கா! என்று கூறிவிட்டு, மீண்டும் பாலுவின் பக்கம் திரும்பி, "ஸரி—வரன் பாக்கறேன்னு சொல்லிவிட்டுப் போடா வரன் பாக்க!" என்று விளையாடும் வழியையும் எடுத்துக் காட்டினாள்.

அதற்குப் பாலு சம்மதப்படவில்லை; 'கல்யாணம் கூடாது' என்றான்; ஸரஸாவும் விடவில்லை; 'கல்யாணம் வேண்டு'மென்றே வாதாடினாள்; தன் வாதத்திற்கு எடுத்துக்காட்டாகத் தங்கள் அப்பாவும்-அம்மாவும் கல்யாணம் செய்துகொண்டிருப்பதையும் சுட்டினாள்.

'கல்யாணம் செய்துகொண்டதனால்தான் சொந்தப் பெற்றோருக்குள் அடிக்கடி சச்சரவு ஏற்படுவதாகவும், கல்யாணமில்லாவிட்டால் சண்டையும் இருக்கா'தென்று பாலு எதிர்வாதம் புரிந்தான்.

"கல்யாணம் பண்ணிக்காட்டா குழந்தை எப்படிப் பிறக்கும்?" என்பது ஸரஸாவின் கடைசி அஸ்திரம்.

அதற்குப் பதில் சொல்ல வகை புரியாமல் பாலு திக்குமுக்காடிப் போனான்!

அந்த விளையாட்டைப் பார்த்துக்கொண்டிருந்த வனஜா பிரமித்துப்போனாள். அவளுக்கு ஒரு பக்கம் வேடிக்கையாகவும் இருந்தது; இன்னொரு பக்கம் தன்னையும் அறியாமல் அழுகையும் வந்துவிட்டது.

கண்கள் மாலை மாலையாக நீரைச் சொரிந்தன.

அந்தக் குழந்தைகள் அவளுடைய சொந்த வாழ்க்கையைத்தான் அந்தமாதிரி படம் பிடித்துக் காட்டுகின்றனவா?

வனஜாவின் ஹிருதயத் துடிப்பு வெகு நன்றாகத் தெரியும்படி அவள் மறுபடியும் பெருமூச்செறிந்தாள்.

"காரியம் தலைக்குமேலே கிடக்கு; இன்னும் பத்துப் பாத்திரம் ஒண்ணுமே விளக்கவில்லை; குலுக்கி மினுக்கிக்கொண்டு என்னடீ சினிமாக்காரி மாதிரி நிக்கறே?" என்று இடிக்குரல் ஒன்று கேட்டது.

திடுக்கிட்டுத் திரும்பினாள் வனஜா.

அவளுடைய சிறிய தாயார் சொர்ணம்பாள் பத்ரகாளியாக அங்கே காட்சி கொடுத்தாள்; விளையாடிக்கொண்டிருந்த குழந்தைகள்மீது அவள் கடாக்ஷம் வீழ்ந்தது.

பாய்ந்தோடிப்போய் அவற்றின் முதுகிலே பளீர்—பளீர்' என்று அறைந்தாள்; "குளிக்காமல் — முழுகாமல் — புழுதியிலே பெரண்டுண்டு என்ன விளையாட்டு டீ இது! தரித்திரப் பீடைகளா!" என்ற வார்த்தைகள் வெடித்துக்கொண்டு புறப்பட்டன.

குழந்தைகள் இரண்டும் ஒரே ஸமயத்தில் 'ஹோ' வென்று கூப்பாடு போட்டு அழலாயின.

"ஏன் சித்தி? தேமேன்னு பாவம்! அந்தக் குழந்தைகளை ஏன் அடிக்கணும்?" என்று கேட்டுக்கொண்டே அவ்விருவரையும் அன்போடு அணைத்துக்கொண்டாள் வனஜா.

"சீச்சி! மூடு வாயை! மூஞ்சியும், முகரக் கட்டையும்! எனக்கு உபதேசம் பண்ண வந்துாட்டையோ, உபதேசம்! போடி அந்தண்டை! இந்தச் சனியன்களை இழுத்துக்கொண்டுபோய் குளிப்பாட்டி, சோறு போடு! அந்தப் பத்துப் பாத்திரங்களையும் விளக்கிவச்சு, உள்ளேப்பெருக்கி மெழுகித்தொலை; ஒரு அம்பாரம் துணி கிடக்கு; என்னாலே தோய்த்து மாளலை; அதுகளையும் பிழிஞ்சி உலத்து; அப்புறம் அந்த உளுந்தை உடைச்சு, மாவை அறைச்சு, சமையலைக் கவனி! எல்லாத்தையும் அப்படியப்படியே போட்டுப்புட்டு இங்கே வந்து ஒய்யாரமா நிக்கறயே, சித்தெ ஒய்யாரமா!" என்ற ஆவேச வார்த்தைகள் சொர்ணத்தின் வாயிலிருந்து மிடுக்குடன் வெளிப்பட்டன.

குழந்தைகளை அழைத்துக்கொண்டு வனஜா தலை குனிந்தபடி அவ்விடம் விட்டு அகன்றாள்.

2

மேல் படிப்புக்காக மேல்நாடு சென்று திரும்பியவன் கோபாலன். நவநாகரிக வழிகளுக்கு ஈடு இணையற்ற சிறந்த எடுத்துக்காட்டாகத் தானே விளங்கவேண்டுமென்ற அளவு மீறிய ஆவல், ஓர் எல்லையின்றி, ஓங்கி வளர்ந்திருந்தது கோபாலனின் உள்ளத்திலே. அதன் பலனாக, அவன் சுய நிலையைப்பற்றிச் சற்றும் கருதாமல், கடமையை மறந்து, ஸ்வதர்மத்தை மீறி, சூழ்நிலையையும் உதறித் தள்ளிவிட்டு, நாகரிக மோகத்திலே கண் காது தெரியாமல் மூழ்கி மிதக்கலானான்.

மேல்நாட்டு பாணியில் உடை தரிப்பதிலே அவன் மேல் நாட்டாரையேகூட பிரமிக்கவைத்தான்: மறந்துபோன பழக்க வழக்கங்களையும், ஆங்கிலேயர்கூட அவனிடமிருந்தே கற்றுத்திருந்தவேண்டுமென்பது கோபாலனின் ஆசை; மேஜை யெதிரில் அமர்ந்து சாப்பிடுவதிலும்கூட அலாதியான புதுமை; 'ஸிகரட்' பிடிப்பதிலே ஒரு 'ஸ்டைல்'; பேப்பர் படிப்பதிலே ஒரு தோரணை; காப்பி குடிப்பதிலே ஒரு 'பாஷன்'; மிடுக்காக நடப்பதிலே ஒரு கவர்ச்சி; கைகுலுக்குவதிலே ஒரு அழகு; கோபாலன் சிரிப்பதுகூட ஒரு தினுசாகத்தானிருக்கும்!

அற்ப விஷயங்களென்று படுவதில்கூட கோபாலன் நாகரிகத்தை வெகு கவனமாக ஆராய்ந்தெடுப்பான்; சின்னஞ்சிறு விஷயங்களிலும் அவன் காட்டும் சிரத்தை வியக்கும்படிதானிருக்கும். அவ்வளவு நாகரிகம்!

அப்படிப்பட்ட கோபாலன் அன்று தன் நண்பர்கள் சிலருடன், தனி அறையில், அட்டகாசமாய், பேசிச் சிரித்துக்கொண்டிருந்தான். வாய்க்கு வந்ததைத் பேசிக்கொண்டும், மனதிற்குத் தோன்றியதைச் செய்துகொண்டும் அவர்கள் கும்மாளம் போட்டுக்கொண்டிருந்தார்கள்.

"நம்ம கோபாலனிடமிருந்து நாகரிகம் பிறந்ததா" அல்லது நாகரிகத்திலிருந்து கோபாலன் வந்தானா?" என்று கேட்டான் ஒரு பேர்வழி.

"நாகரிகம் தான் கோபாலன், கோபாலன் தான் நாகரிகம்!" என்றான் இன்னொரு நண்பன்.

"ரைட்! அதுதான் ஸரி" என்று ஆமோதித்தான் மூன்றாமவன்.

"எல்லாம் சரிதான்; 'கோபாலன்' என்கிற பெயர்மட்டும் அவ்வளவு நன்றாகப் படவில்லையே?"

"வாஸ்தவம்; ரொம்ப கர்நாடகமான பெயராய் இருக்கு!"

"ஏண்டா, கோபு! ஸகல விஷயத்திலும் மாறியிருக்கையே உன் பெயரையும் மாற்றிக்கொண்டு விடேன்!"

"'டி. ஜி. பால்'—என்று வைத்துக்கொள்ளேன்!"

"வெள்ளைக்காரன் பெயராகவே இருக்கு; நல்ல 'ஐடியா'!"

"ஆனால் — கூப்பிடும்போது என்னவென்று சொல்வது? 'பால்-பால்' என்றே அழைத்தாலும் அவ்வளவாக நன்றாய் இல்லையே!"

"தெருவில் நின்றுகொண்டு பாலை—நம்ம பாலை—அழைத்தால், யாராவது பால்காரி கூடையும், தலையுமாகத் திரும்பிப் பார்த்தால்?"—என்று ஒரு நண்பன் ஹாஸ்யம் பண்ணினதும் அனைவருமாகச் சேர்ந்து அட்டஹாஸமாய்ச் சிரித்தனர்.

"மிஸ்டர்! கொஞ்ச நேரம் தமாஷாகச் சீட்டு ஆடலாமே?" என்று அழைத்தான் ஒரு நண்பன்.

"ஸரி; ஐநூத்தி நாலு ஆடலாம்!" என்றான் கோபாலன்.

ஆட்டம் தொடங்கியது; கேலியும், சிரிப்பும், இடையே தப்பு ஆட்டம் ஆடிவிட்டதால் கோபமும், கூச்சலுமாக ஒரே அமர்க்களமாக நடந்தது.

"என்ன பிரதர்! துருப்பு கேட்காமலே மூணும் பந்தை இவ்வளவு தைரியமாய் கழித்துவிட்டீர்களே! எதிர் கட்சி வெட்டி எடுத்துக்கொண்டு போய்விட்டால்?"

"அதுதான் அவர்கள் வெட்டவில்லையே?,,

''இருந்தாலும் முட்டாள்தனமாக ஆடுவது ஒரு ஆட்டமா ஸார்!''

''போடா, ஸில்லி இடியட்! ஜாதியை வைத்துக் கொண்டு பேஸ்து பண்ணித் துலைத்துவிட்டாயே!''

''கவனிக்கவில்லையப்பா! கோவிச்சுக்காதே!''

''ஆமாம்; போ! இதெல்லாம் ஒரு பேச்சா! கவனிக்காமல் ஆட்டமென்ன வேண்டியிருக்கு!''

''சண்டை வேண்டாம்; ஸைலன்ஸ் ப்ளீஸ்!'' என்றான் கோபாலன்.

சப்தமின்றி ஆட்டம் நடந்து கொண்டிருந்தது.

அந்த நிசப்தத்தைக் கலைத்து அந்த அறைக் கதவு தட்டப்பட்டது.

தலை நிமிர்ந்து பார்த்த கோபாலன், ''யாரது?'' என்றான்.

''நான்தான் அண்ணா; உள்ளே வரலாமோ?'' என்று அறைக்கு வெளியிலிருந்து பெண் குரல் ஒன்று கேட்டது.

''ஓ, யெஸ்! தாராளமாய் வரலாம்!'' என்றான் கோபாலன்.

அவனுடைய தங்கை சுசிலா அறைக்கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தாள்; அவள் கையில் பிடித்திருந்த தட்டில் நான்கு கோப்பைகளில் சூடான டீ ஆவியடித்துக் கொண்டிருந்தது.

''ஓ! டீ கொண்டுவந்தாயா சுசி! தட் இஸ் வெரி குட்! ரொம்ப தாங்ஸ்!'' என்றான் புளகிதமடைந்த கோபாலன்.

''டீயும் கொண்டுவந்தேன்; அத்துடன் உனக்கு ஒரு கடிதமும் கொண்டுவந்திருக்கிறேன்! என்று புன்னகையுடன் பதில் சொன்னாள் சுசிலா.

''கடிதமா? யாரிடமிருந்து?''

உடனே அந்தக் கேள்விக்கு மறுமொழி சொல்லாமல் சுசிலா தான் கொண்டுவந்த 'டீ ட்ரே'யை மேஜையின் ஒருபுறமாக வைத்தாள். பிறகு ஒவ்வொருவருக்கும் எதிராக ஒவ்வொரு கோப்பையை வைத்தாள். கோபாலனுக்கு எதிரிலும் ஒரு கோப்பையை வைத்தாள்; அப்புறம் மடியிலிருந்து கவரை எடுத்துக் கோபாலனிடம் கொடுத்துக்கொண்டே, ''மன்னி எழுதியிருக்கிறாள் போலிருக்கு!'' என்று சொன்னாள்.

வெகு அலக்ஷ்யமாகச்சுள் கொட்டிக்கொண்டே, ''அந்த மூதேவியா! நீயே வைத்துக்கொண்டிரு சுசி! அப்புறம் வந்து பார்த்துக் கொள்கிறேன்'' என்றான் கோபாலன். கடிதத்தை விரலால் தொடவே மறுத்தான்.

''சே! அப்படிச் சொல்லாதே அண்ணா! பாவம்! மெனக்கட்டு எழுதி யிருக்கிறாள்! என்னதான் சொல்லுகிறாளோ, பாரேன்!'' என்று சொல்லி வலுக்கட்டாயமாகக் கடிதத்தை அவன் கையில் திணித்துவிட்டு அறையைவிட்டு அகன்றாள் சுசிலா.

உறையைக் கிழித்துக் கடிதத்தைப் படித்தான் கோபாலன். பின்னர் வெகு அகம்பாவத்துடன் அதைக் கசக்கிச் சுருட்டி எதிரே மேஜையின் மீது விட்டெறிந்தான்.

''ஒரே பேத்தல்! தூ!'' என்று அத்தாட்சி கொடுத்தது அவன் வாய்.

''அப்படி யென்னப்பா பேத்தியிருக்கிறாள் எழுத்திலே!'' என்று கிண்டினான் நண்பன் ஒருவன்.

''நீதான் எடுத்துப் பாரேன்!'' என்று சொன்னான் கோபாலன்.

''நான் பார்க்கலாமோ?'' என்று கேட்டுக் கொண்டே கடிதத்தைக் கையில் எடுத்தான் அந்த நண்பன்.

''நீ மட்டும் என்ன? எல்லாருமே கேட்கட்டும்; படி'' என்றான் கோபாலன்.

நண்பன் கடிதத்தைப் படிக்கத் தொடங்கினான்:

''அன்பரே;

அநேக நமஸ்காரம்; க்ஷேமம்; க்ஷேமோபரி; இன்னும் எத்தனை நாட்களுக்குத்தான் என்னை இந்தமாதிரி நிலையில், வைத்துத் தண்டிக்கப்போகிறீர்கள்? நான் நாகரிகமாய் இருக்கவில்லை யென்பது உங்கள் குற்றச்சாட்டானால் நீங்கள் என்னை எப்படிப் பார்க்க விரும்புகிறீர்களோ அந்தவிதமே நடந்துகொள்ளத் தயாராயிருக்கிறேன். எப்படியிருந்தாலும் நான் உங்கள் பொருள்; உங்கள் சொத்து. உங்கள் இஷ்டப்படி உங்கள் கையாலேயே என்னைத் திருத்தி, சந்தோஷிக்கமுடியாதா? அதற்கும் தகுதியற்றவள் ஆகிவிட்டேனா? நீங்கள் மன்னிக்கமுடியாத குற்றமாக நான் அப்படி என்னதான் செய்துவிட்டேனென்று நீங்கள் என்னை இப்படி விலக்கிவைக்கவேண்டும்? நமக்குக் கல்யாணம் ஆனபின்னர், நீங்கள் இங்கு வந்திருந்தபொழுது, நீங்கள் எதிர்பார்த்த வகையில், எனக்கு நடந்துகொள்ளத் தெரியவில்லை யென்பதற்காகவா உங்களுக்கு என்னிடம் இவ்வளவு அருவருப்பு? தெரியாமல் இல்லை; வெட்கம் என்னைத் தடுத்துவிட்டது. நான் என்ன செய்ய? இனிமேல் உங்கள் இஷ்டப்படி யெல்லாம் நிச்சயமாய் நடந்துகொள்கிறேன். இங்கே சித்தியின் கொடுமை என்னால் தாங்கவே முடியவில்லை. உங்கள் பாதார விந்தத்தினடியில் இருந்து கொண்டு உங்களுக்கு மனப்பூர்வமான சேவை செய்வதையே என் பிறப்பின் பாக்யமாகக் கருதுகிறேன். தயவுசெய்து என்னை ஏற்றுக்கொள்வீர்களென்று ஆவலாய் எதிர்பார்க்கிறேன். இதற்

காவது, மறக்காமல், பதில் எழுதும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் அன்புள்ள,

வனஜா"

"பாதாரவிந்தம்! ஸேவை! ப்ரார்த்தனை! அழகாய் நாலுவரி எழுதத் தெரிகிறதா இவளுக்கு! ஸில்லி இடியட்! சுத்த 'கண்ட்ரீ'!" என்று ஆத்திரமாய்ப் பல்லைக்கடித்தான், கோபாலன்.

"பெண் உரிமை; ஸ்திரீ ஸமத்துவம் என்றெல்லாம் விதவிதமாக உரிமை கேட்டுக் கூச்சல் போடுகிறார்களே, இந்தப் பெண்கள்! கட்டின புருஷனுக்கு இவ்வளவு அழகாகக் கடுதாசு போடும் இந்தப் பெண்ணுக்கு என்னென்ன உரிமையை எப்படித்தான் வழங்குவதோ!" என்றும் பரிஹஸித்தான்.

"அவர்களுக்கே 'Slavish Mentality' இன்னும் போகவில்லை ஸார்!" என்று ஒத்துப் பாடினான் ஒருவன்.

"புருஷனுக்கு 'Daring கா' ஒரு நாலுவார்த்தையெழுத ஒருத்திக்குத் தெரியவில்லையென்றால் எதுக்கு ஸார் பொம்மனாட்டி வேண்டிக்கிடக்கு! வெட்கமாவது, வெட்கம்! சுத்த அபத்தப் பஞ்சாங்கம்!" என்று சீறினான் கோபாலன்.

"இது கிடக்கு, கோபு! நான் சொல்கிறேன் கேளு; என் 'ஒய்ப்' எனக்கு கடுதாசு எள்தினால் ....?......அடடா! ரொ......ம்......ப...... 'ப்யூட்டிபுல்'லாயிருக்கும் போ! ப்யூட்டிபுல்! ப்யூட்டிபுல்! ஒரு வரிக்கு நாலு முத்தம்! ஒரு வாக்கியத்துக்கு ஒரு ஆலிங்கனம்!... எப்படி?...... என்னிடம் அவளுக்கு அவ்வளவு 'லவ்'! தெரிஞ்சுதா?"

"முத்தங்களும்–ஆலிங்கனமும் கடுதாசியில் மாத்திரம் தானே? அல்லது நேரிலும் கிடைக்குமோ?" என்று யாரோ தமாஷாகக் கேட்க, கட்டிடமே இடிந்து விழுந்துவிடும் போல் அவர்களிடையே சிரிப்பொலி கிளம்பியது.

3

சொர்ணம்பாளுக்குத் தம்பி ஒருவன் வந்து சேர்ந்தான். பெயர் மீனாக்ஷிஸுந்தரம்; 'மீனுச்சி–மீனுச்சி' யென்று செல்லமாக அழைக்கப்படுவான்; இருபத்து ஐந்து வயது இருக்கும்; அவ்வளவாகப் படிப்பு இல்லை; அசடு; அத்துடன் அரைப் பைத்தியமும் கூட; பெற்றோருக்கு அவனால் ஏற்பட்ட தொல்லை பொறுக்க முடியாமல் கொஞ்ச நாட்களுக்கு சொர்ணத்திடம் போயிருக்கட்டுமென்று அனுப்பி வைத்தார்கள்.

அரைப் பைத்தியமாய் இருக்கிறானேயென்று சொர்ணத்திற்கும் மனக்குறை உண்டென்றாலும் தம்பியென்கிற அபிமானம் அதிகமாய் இருந்தது; ஆகவே அவனுக்கு அந்த வீட்டில் ஸகல விதமான சுதந்திரங்களையும் கொடுத்து விட்டாள். மீனுச்சி என்ன செய்தாலும் ஏதென்று கேட்க ஆள் இல்லை; அவன் எதைப் பிதற்றினாலும் தடுத்துச் சொல்ல யாருக்கும் உரிமையில்லை.

முதல்தரமான காப்பி முதலில் அவனுக்கே கிடைத்தது; விதவிதமாகப் பலகாரங்களும், பக்ஷணங்களும் அவனுக்குத் திருப்திகரமாகச் செய்து போட்டாள் சொர்ணம்பாள்; அவன் என்ன கேட்டாலும் இல்லையென்று சொல்லாமல் வாங்கிக் கொடுத்து அளவுக்குமீறி இடம் கொடுத்துப் போஷித்து வரலானாள்.

சொர்ணத்தின் கணவர் பத்மநாப முதலியாருக்கேகூட மீனுச்சியை அதிகாரம் பண்ணச் சுதந்திரம் கிடையாது. நாளடைவில் பத்மநாப முதலியார் பத்திரமாக வைத்திருந்த விலையுயர்ந்த ஆடை அணிகளையும்கூட, யாரையும் கேட்காமல், எடுத்து அணிந்துகொண்டு, மேஜை புரட்டி அழுக்கடையச் செய்து வீசி யெறியும் நிலைக்கு வந்து விட்டான் மீனுச்சி. அவர் எழுதும் பேனாவை உடைத்துப் போட்டான்: அவர் படிக்கும் புத்தகங்களைக் கிழித்து எறிந்தான்; அவரையே கூட, 'வெவ் வெவ் வே!' என்று அழகு காட்டிக் கேலி பண்ணினான்.

வந்தவுடன் அவனைக் கண்டதுமே பத்மநாப முதலியாருக்குத் தூக்கி வாரிப் போட்டது. 'இந்தச் சனியன் வேறு நம்ம கழுத்தை யறுக்க வந்து விட்டதா!' என்றெண்ணி ஏங்கியவராய், தலையில் அடித்துக்கொண்டு பல்லைக் கடித்தார். அத்துடன் நின்றுவிட்டது அவர் உணர்ச்சி.

மிகவும் பொறுமைசாலியான பத்மநாப முதலியாருக்கே வர வர மீனுச்சியின் தொந்தரவு சகிக்க முடியாமல் போய்விட்டது.

ஒருநாள் தம் அறையில் நுழைந்து பார்த்தவர் ஒரு நிமிஷம் அப்படியே திகைத்துப்போய் நின்று விட்டார். அந்த அறை அவ்வளவு அலங்கோலமாகக் கிடந்தது. மேஜையின்மீது நாற்காலி தூக்கிவைக்கப் பட்டிருந்தது; அதுவும் தலை கீழாக! மேஜை யெல்லாம் ஒரே இங்கி மயம்! புஸ்தகங்கள் ஒரு பக்கம் தாறுமாறாகப் புரட்டப் பட்டுக் கிடந்தன; அவருடைய ஆடைகள் அனைத்தும் ஒரு மூலையில் குவியலாகக் கிடந்தன. பீரோவின் கதவுகள் விரியத் திறந்து வைக்கப்பட்டிருந்தன!

முதலியாருக்கே பைத்தியம் பிடித்துவிடும்போலிருந்தது! அவர் பொறுமையும் எல்லை கடந்து விட்டது.

"ஏ, மூதேவி! இங்கே வா!" என்று அடக்க மாட்டாமல் கர்ஜித்தார்!

பதிலுக்குச் சமையல் அறையிலிருந்து ஒரு உறுமல் கிளம்பியது. "என்ன ரொம்பக் கொஞ்சு றீங்க! வாயை ரொம்ப ஓட்டாமல் அடக்கித் தானே பேசுங்க!"—குரல் சந்தேகமில்லாமல் சொர்ணம்பாளுடையதே!

"சீச்சீ! சனியன்களா! உன்னைக் கலியாணம் பண்ணிக்கொண்டதற்கு எனக்கு ஸரியான தண்டனைதான்!" என்று தம் அறையிலிருந்தபடியே முதலியார் சீறினர்.

"ஆமா! சின்னஞ்சிறு வயசுலே உங்களை வந்து இளையாளாய், பண்ணிக்கிட்ட கேட்டிற்கு என்னைப் பேசவேண்டியதுதான்!" என்று இரைந்துகொண்டே சமையல் அறையிலிருந்து வெளிப்பட்டாள் சொர்ணம்.

"அக்கா! நீ ஏங்க்கா இந்தக் கிழவனைப்போய் கட்டிக்கிட்டே" என்று இன்னெரு குரலும் சேர்ந்துகொண்டது; அப்படிச் சொன்னது ஸாக்ஷாத் மீனுச்சி யென்கிற மீனுக்ஷிஸுந்தரமே.

ஆவேசத்துடன் தம் அறையைவிட்டு வெளியே பாய்ந்தோடி வந்தார் முதலியார்.

கூடத்தில் நின்றுகொண்டிருந்த மீனுச்சியின் கன்னத்திலே 'பளீர்' என்று ஒரு அறைவிட்டார்;' நீ இருக்கிற இருப்பிற்கு உனக்கு வாய் ஒரு கேடா என்று கத்தினர்.

அறை விழுந்த கன்னத்தைத் தடவிவிட்டுக் கொண்டே மீனுச்சி, "இன்னமே என்னை அடிச்சியோ—உன் கையை ஒடிச்சுப்புடுவேன்!" என்று பயமுறுத்தினன்.

"அப்பா—கண்ணேன்னு அன்பாய் ஒரு வார்த்தை பேசாட்டாலும் அவனை அடிக்க ஓங்களுக்கு அவ்வளவு தைரியமா? நாங்களே கொழந்தையை இதுவரையில் விரலால்கூட தொட்டதே கிடையாதே!" என்று படபடத்தாள் சொர்ணம்.

"கொழந்தையைப் பார்க்கல்லே, கொழந்தையை!கோட்டான் மாதிரி. 'மீனுச்சி—மீனுச்சி!' என்று செல்லமாய்—பிரியமாய்—அவனை அழைச்சு, ஆம்பிள்ளையைப் பொம்பிள்ளையாக்கிவிட்டதிலிருந்தே தெரியுதே உங்க அருமை! மீனுச்சியாம்—மீனுச்சி! பொம்பிள்ளையாய் இருந்தாலும் மதுரையை ஆண்ட அந்த மீனுச்சியின் சொல்லும்; செயலும், அழகும் எவ்வளவு லட்சணமா யிருந்தன!ஆம்பிள்ளையாய்ப் பிறந்திருக்கும் இந்த மீனுச்சியின் பைத்தியக்காரச் செய்கை என்னுல் பொறுக்கவே முடியல்லெ! ஆமாம்!" என்று பொங்கினர் முதலியார்.

"என் தம்பி பைத்தியமாய் இருந்தால் இருக்கட்டும்; நீங்க ஒண்ணும் தெளியவைக்க வேண்டாம்! ஓங்களை நம்பி நான் அவனை இங்கே கூட்டிவரவில்லே! நானே பாத்துக்கறேன்!"

"நீ எங்கேயிருந்து என்னத்தைப் பாத்துப்பே? முதல்லே அந்த உள்ளைப் போய்ப் பாரு! உன் அழகான தம்பியின் அட்டஹாஸத்தைப் போய்ப் பாரு!"

"ஏதுக்காக எப்போது பார்த்தாலும் குழந்தையை அகாரணமா கரிச்சுக்கிட்டே யிருக்கீங்க? அவன் அப்படி யென்ன தப்பு செஞ்சுட்டான்?"

"என் உள்ளைக் குப்பை மேட்டிலும் கேடாக ஆக்கி யிருக்கான்! அவ்வளவுதான்!"

"இவ்வளவுதானே? உங்க வனஜாவைக் கூப்பிட்டுச் சுத்தம் பண்ணச் சொன்னு செய்தூட்டுப் போரு! இதுக்கா இவ்வளவு கூப்பாடு!"

"ஆமா; நான் ஒருத்தன் உங்ககிட்ட அகப்பட்டுக்கொண்டு திண்டாடறது போருது; அவள் தலையெழுத்து. பாவம், வனஜாவும் உங்கிட்ட மாட்டிண்டு முழிக்கிருள்!"

"ஹாய்யாக அவள் புருஷன் வீட்டிற்குப்போய் 'ஜம்'மென்று குடித்தனம் பண்ணுவதை நானு வேண்டாமென்று குறுக்கே விழுந்து தடுத்தேன்? 'வாழாவெட்டி'யாய் வீட்டோடு கிடக்கறத்துக்கு இந்த வேலைகூட செய்யாவிட்டால் முடியுமா? தேஞ்சா போயுடுவா?"

சமையல் அறைப்பக்கமிருந்து வனஜா விம்மும் சப்தம் கேட்டது.

பத்மநாப முதலியார் சொர்ணத்தை எரித்துவிடுபவர்போல் பார்த்தார்; "இந்தா; வனஜாவைப் பத்தி இனிமேல் நீ அனுவசியமாக ஒரு வார்த்தை பேசினுலும் எனக்குக் கெட்டகோபம் வந்துடும்; ஜாக்ரதை!" என்று உறுமினர்,

சொர்ணம் வெகு அலக்ஷ்யமாக அவரைப் பார்த்தாள். "என்ன செய்துவிடுவீங்க! ஓங்க வனஜா உங்களுக்கு எப்படி ஒசத்தியோ அதேமாதிரி என் தம்பி எனக்கு ஒசத்திதான்! இனிமே அவன் மேலே கை வச்செசுளோ — தெரியும் சேதி!" என்று எச்சரித்துவிட்டு மிடுக்குடன் திரும்பி விடுவிடென்று உள்ளே போனுள்.

"அக்கா! இப்பொ இந்தக் கிழவனின் மூஞ்சியைப் பாரு அக்கா! பைத்தியம் மாதிரி முழிக்குது!" என்று சொல்லிக்கொண்டே மீனுச்சியும் சொர்ணத்தைப் பின் தொடர்ந்தான்,

பத்மநாப முதலியார் பெருமூச்சு விட்டார்; தம் தலைவிதியை நொந்து நொள்பவரைப்போலே தலையில் அடித்துக்கொண்டார். தலை குனிந்தபடி அவ்விடம் விட்டு அகன்ருர்.

(தொடரும்)

சினிமாப் பகுதி

கண்ணன்

பரணியின் "காதல்"

1950 ஆம் வருஷத்தில் தமிழ்ப் படங்கள், தெலுங்குப் படங்கள் இவ்விரண்டிலும் சிறந்த நடிகை எனத் தேர்ந்தெடுக்கப்பட்ட பானுமதி தம் சொந்தப் படமாகிய "காதலில்" நடித்திருப்பது சற்று ஏமாற்றமளிப்பதாகவே இருக்கிறது. நடிப்பில் குற்றங்குறை இல்லாவிட்டாலும் அவரிடம் நாம் எதிர்பார்க்கும் மிடுக்கும், கவர்ச்சியும் காணப்படவில்லை. தெலுங்கில் 'ப்ரேமா' என்ற பெயருடன் ஆந்திரதேசத்தில் எங்கும் தற்சமயம் ஓடிக்கொண்டிருக்கும் பரணி பிக்சர்ஸாரின் இப்படம் கூடிய சீக்கிரத்தில் தமிழில் காதல் என்ற பெயருடன் வெளிவரப்போவதாக அறிவித்து இருக்கிறார்கள்.

ஆந்திரநாட்டின் பிரபல நக்ஷத்திரங்கள் இப்படத்தில் நடித்திருக்கிறார்கள். கதாநாயகனாக நாகேசுவர ராவும் மேலும் முக்கமாலா, C. S. R. ஆஞ்சநேயலு, K. V. சுப்பராவ், ரேலங்கி, காமெடியன் சிவராவ், ஸ்ரீரஞ்சனி (ஸீனியர்), சுரபி கமலா, சந்திரகாந்தம் இவர்கள் யாவரும் தம் தம் பாகங்களைச் சிறந்த முறையில் நடித்திருந்தாலும் படம் நடுத்தரமாகவே இருக்கிறது.

இதற்குக் காரணம் இக் கதையின் போக்கும், சம்பவங்களும் மிகவும் பல பழைய கதைகளிலிருந்தும் பிரபல படங்களிலிருந்தும் காப்பியடிக்கப்பட்டிருப்பதே இந்தக் கதையை எழுதியது பானுமதியே என்று படத்தின் ஆரம்பத்தில் தெரிவிக்கப்படுகிறது.

மனைவியை இழந்த சுந்தரராவ் என்பவர் சென்னையில் ஆடம்பர வாழ்க்கை நடத்திக் கொண்டு தம் ஒரே புதல்வியான லதாவுடனும் மருமகனான ராஜாவுடனும் வசிக்கிறார். சுந்தரராவ் தேக அசௌகரியத்தின் காரணமாக மூவரும் மலைப்பிரதேசத்திற்குப் போகிறார்கள். அங்கே துப்பாக்கி வேட்டைக்குச் சென்ற ராஜா (நாகேசுவர ராவ்) விறகு வெட்டவந்த மோதி (பானுமதி)யைக் கண்டு இருவரும் ஒருவரை ஒருவர் காதலிக்கின்றனர். மோதியின் பெற்றோர் பணத்தாசையால் பரசுராம் (முக்கமாலா) என்ற போக்கிரி ஒருவனுக்கு அவளை மணம் முடிக்கத் தீர்மானித்துப் பரசுராம் வீட்டிற்கு அவளைப் பலவந்தமாக அனுப்பிவிடுகிறார்கள். ராஜா மாமன் வற்புறுத்தலால் மோதியைச் சந்திக்க முடியாமல் அவசரமாகப் பட்டணம் திரும்பி விடுகிறான். மோதி பரசுராம் பிடியிலிருந்து தப்பி வெளியேறி, ராஜாவைப் பட்டணத்தில் வீட்டு விலாசம் தெரியாததால் தேடியலைந்து கடைசியில் மோட்டார் விபத்துக்கு ஆளாகிறாள். பிறகு தெருப்பாடகன் சிவஸ்வாமி (C S R) என்பவனால் காப்பாற்றப்பட்டு ஒரு நாடக கம்பெனியில் சேருகிறாள். இடையில் மோதியின் இருப்பிடம் தெரிந்து கொண்டு வழிமறித்து அவளைப் பலாத்காரம் செய்த பரசுராமுக்கு ஜெயில் வாசம் கிடைக்கிறது. ஒருநாள் மோதி நாடகத்தில் நடிக்கும்போது ராஜா அவளைக் கண்டுகொண்டு மீண்டும் அவளைச் சந்திக்கிறான். ஆனால் காதலர்கள் இடையே இடையூறுகள் தீர்ந்தபாடில்லை. லதா மோதியிடமிருந்து தான் ராஜாவை மறந்துவிடுவதாக வாக்குறுதி பெறுகிறாள். மோதி மனமுடைந்து தன் பழைய மலை வீட்டிற்குத் திரும்பி விடுகிறாள். ராஜா அவளைத் தேடி காட்டில் சந்தித்து மணக்கும்படி வற்புறுத்துகிறான். இதற்கு இடையே பரசுராம் விடுதலை பெற்று ஊர் திரும்புகிறான். அங்கே காதலர்களுடைய சந்திப்பைக் கண்டு கத்தியை வீசி, மோதியின் மேல் எறிந்து அவளைக் கொன்று விடுகிறான். மோதி ராஜாவின் கரங்களில் உயிரை விடுகிறாள். அவளுடைய கடைசி வார்த்தை ராஜா லதாவை மணக்க வேண்டும் என்பது. மனமுடைந்த ராஜா தன் காதலிக்குச் சமாதிகட்டி அடிக்கடி அங்கே வந்து துயரக்கண்ணீர் வடிக்கிறான்.

ஆனால் சாதாரணமான கதை, ரஸமற்ற சம்பவங்கள், நடிப்புத் திறமையால் சிறிது பிரகாசிக்கிறது. காதலர்கள் காட்டில் சந்திக்கும்போதும் ஒருவரை ஒருவர் அழைக்கும் பாட்டு மேலாவில் பிரசித்திபெற்ற சோக இசையை நினைவூட்டுகிறது. மோதி பட்டணத்தில் தெருத் தெருவாகக் காதலனைத் தேடியலைந்து, மோட்டார் விபத்துக்குளளாவது பார்த்த கதையாக இருக்கிறது. டிராமாமூலம் காதலர் சந்திப்பதும், இழந்த காதலிக்குச் சமாதி எழுப்புவதும் சினிமா துறையில் அடிக்கடி கையாளப்பட்ட புராதன விஷயங்களே. இவ்வளவு முதல் தரமான நடிகர்களை வைத்துக் கொண்டு நூதனமான கதையை எடுத்து இருந்தால் மேலாக இருந்திருக்கும். மேற்கூறிய குறைகள் இருப்பினும் நடிப்புத்திறமையால் கதையின் போக்கு சலிப்பு இல்லாமல் இருக்கிறது. தமிழ் நடிகையான அங்கமுத்து இப்படத்தில் ஹாஸ்யபாகத்தில் நீட்டி முழக்கி, தெலுங்கு

பேசுவது வேடிக்கையாக இருக்கிறது. வாஹினிஸ்டுடியோவில் எடுத்த இந்தப் படத்தில் ஒளிப்பதிவு, ஒலிப்பதிவு இவைகள் திருப்திகரமாக அமைந்திருக்கின்றன. படத்தைப் பானுமதியின் கணவர் ராமகிருஷ்ணன் டைரக்ட் செய்திருக்கிறார்.

○ ● ○

மல்லேசுவரியில்– தமிழ் "காமெண்டரி"

வாஹினியாரின் தெலுங்குப் படமான "மல்லேச்வரி ஏப்ரல் 11 ஆம் தேதிமுதல் தமிழ் நாட்டில் திரையிடப்பட்டு வருகிறது. இப்படத்தில் விசேஷம் என்னவென்றால் தமிழ் ரசிகர்கள் கதையை எளிதில் புரிந்துகொள்வதற்காகப் படத்தின் ஆரம்பத்திலும், நடுவில் உசிதமான பல இடங்களிலும் திரையில் தமிழ் வசனம் மூலமாகவும் காண்பிக்கிறார்கள். இதற்கு வசனம் "சாண்டில்யன்" எழுதியிருக்கிறார். வேறு பாஷைப் படங்களின் போக்கை நன்கு தெரிந்துகொண்டு ரசிப்பதற்கு இது ஒரு நல்லவழியே. "மல்லேசுவரியில்"பானுமதி, N. T. ராமராவ் பிரதம பாகங்களில் அழகாக நடித்திருக்கிறார்கள். காட்சி ஜோடனைகள் அபாரமாய் இருக்கின்றன.

○ ● ○

பானுமதியின் மூன்றுவிதப் பொறுப்பு

பானுமதி சொந்தமாகத் தமிழ், தெலுங்கு ஹிந்தி "சாந்திராணி" என்னும் படத்தை எடுத்து வருகிறார். இதன் கதையும், வசனமும் பானுமதியே எழுதியிருப்பதுடன் அவரே டைரக்ட் செய்துவருகிறார். பானுமதி மகன் பெயரால் அமைந்த அவருடைய சொந்த பரணிஸ்டுடியோ இன்னும் 2-மாத காலத்தில் தயாராகிவிடும் என்று தெரிகிறது.

○ ● ○

நூர்ஜகான் வேஷத்தில் வைஜயந்திமாலா

தமிழ் நாட்டின் பிரபல நடிகை வைஜயந்திமாலாவின் ஹிந்தி பஹார் வெற்றிக்குப் பிறகு அவருக்கு ஏக கிராக்கியாக இருக்கிறது. பம்பாய் ஜூபிடர் ஸ்டுடியோவில் அவர் நடிக்கப் போகும் ஒரு படத்திற்குச் சமீபத்தில் முகூர்த்தம் நடந்தது. இன்னும் பெயரிடப்படாத அப் படத்தில் நூர்ஜஹான் பாகத்தில் வைஜயந்திமாலா நடிப்பார். இப்படத்தை ஜயந்திதேசாய் டைரக்ட்செய்கிறார்.

○ ● ○

தமிழ்ப் படத்தில் ஹிந்திப் பாட்டுகள்

முதல் தடவையாக ஒரு தமிழ்ப் படத்தில் இரண்டு முழுநீள ஹிந்திப் பாட்டுகள் சேர்க்கப்படுகின்றன. சித்தூர் நாகையா டைரக்ட் செய்யும் "என்வீடு" என்ற தமிழ், தெலுங்குப் படத்திற்காக இந்த இரண்டு பாட்டுக்களையும் கல்கத்தாவின் பிரபல பிளேபாக் பாடகியான மீனுகபூர் ரிகார்ட் செய்திருக்கிறார். "என் வீட்டில்" நாகையாவும், ராஜகுமாரியும் முதன் முதலாகச் சேர்ந்து நடிக்கிறார்கள். தமிழ்ப் படத்தின் வசனம் "சாண்டில்யன்" எழுதி இருக்கிறார்.

○ ● ○

கண்கள் (நாடகமேடையில்)

தமிழ்நாட்டில் சிறிது காலமாக நாடகக் கலை புத்துயிர் பெற்று வருகிறது. தற்சமயம் நன்றாக நடிக்கப்படும் நாடகங்களுக்கு ஒரு அலாதி மவுஸ்! மேலும் ஒரு விரும்பத்தக்க விஷயம் அமெச்சூர் நடிகர்களால் நடித்துக் காட்டப்படும் நாடகங்களுக்கு ஜனங்களின் பெருவாரியான ஆதரவு ஆகும்.

நாடகக்கலை மேன்மேலும் விருத்தியடைந்துகொண்டு வருவதற்குச் சமீபத்தில் நடித்துக் காண்பிக்கப்பட்ட கண்கள் என்னும் நாடகம் ஒரு அறிகுறியாக இருந்தது. சேவாஸ் ஸ்டேஜ் ஸர்வீஸாரால் தயாரிக்கப்பட்ட இது நாடக உலகிலேயே ஒரு புரட்சி உண்டுபண்ணக்கூடியதாகத் தென்பட்டது. இதில் குறிப்பிடத்தக்க விஷயம் ஸீன் ஜோடனைகளில் கண்ட ஒரு பெரும் சாதனையாகும். சாதாரணமாக நாம் காணும் திரைகளுக்குப் பதிலாக ஒருவித விசேஷமான காட்சி, லைட் இவைகள் அமைப்பினால் பல வஸ்துக்கள் கனபரிமாணத்துடன் நேரில் காண்பதுபோல் தென்பட்டன. தூண், அறைகள், மெத்தைப் படிகள் இவைகள் நாம் உண்மையில் பார்ப்பதுபோல் காட்சியளித்தன. இந்த அபார சாதனைக்குக் கலாசாகரம் ராஜகோபால் என்பவரின் கற்பனா சக்தியும், கைத்திறனுமே காரணம் என்று தெரிகிறது. இந்த நாடகத்தில் நடிப்பும் மிகப் பிரமாதமாகவே இருந்தது. நடிகர்களில் S. V. சகஸ்ரநாமத்தைத் தவிர மற்றவர்கள் பிரபலமடையாத அமெச்சூர் நடிகர்களே. எனினும் அவர்களின் உணர்ச்சி மிகுந்த நடிப்பு பார்ப்பவரின் மனத்தை உருக்குவதாக இருந்தது.

கணவனின் குயுத்தி வைத்தியத்திற்கு இலக்காகித் தன் கண்களைப் பறிகொடுத்தும், புருஷனைத் தெய்வம் எனப்போற்றும் கதாநாயகியாக நடித்த பண்டரிபாய் பல இடங்களில் நடிப்பின் சிகரத்தையே அடைந்தார் என்று சொல்லலாம்.

"கண்கள்" நாடகம் வெளியூர்களில் பல இடங்களில் நடிக்க ஏற்பாடு ஆகிவருவ

தாகத் தெரிகிறது. எங்கும் ஜனங்களின் பெருவாரியான ஆதரவை அது பெறும் என்பதில் ஐயமில்லை.

○ ● ○

சிவகாமியின் சபதம்

சென்னையில் சமீபத்தில் நடந்த மற்றொரு நாடகமான "சிவகாமியின் சபதம்" ரசிகர்களின் மனதை மிகவும் கவர்ந்தது. கல்கி அவர்களின் பிரசித்திபெற்ற இந்தக் கதையை, "ராமகிருஷ்ணகிருபா அமெச்சூர்" என்னும் நடிகக் குழுவினர் சிலகாலமாகத் திறமையாக நடித்துக் காண்பித்து வருகின்றனர். சென்ற மார்ச்சு மாதம் 23-ஆம் தேதி திருவல்லிக்கேணி தேசியப் பெண் பாடசாலையில் அமைந்துள்ள "கலாமண்டபம்" என்னும் திறந்த வெளித்தியேட்டரில் நடந்த அவர்களுடைய நாடகம் பல வழிகளில் சிறந்த அபிவிருத்தியுடன் காணப்பட்டது. மேடையின் வசதிகளை ஒட்டி ஸீன்கள் நன்கு அமைக்கப்பெற்று இருந்தன. காட்சிகள் நொடிப்பொழுதில் மாற்றப்பட்டு, கதையின் போக்கு விறுவிறுப்புக் குறையா வண்ணம் காண்பிக்கப்பட்டது.

பிரசித்தி பெற்ற மகேந்திர பல்லவனின் காலத்திய இக்கதை படிப்பதற்கு எவ்வளவு கவர்ச்சியாகக் கல்கி எழுதி இருந்தாரோ அவ்வளவு கவர்ச்சியாகப் பார்ப்பதற்கும் நடித்துக் காண்பித்தார்கள். நாகநந்திபிக்ஷுவாக வரும் Dr. V. ராமமூர்த்தி கம்பீர நடிப்பும், வேஷப் பொருத்தமும் நாடகத்தின் சிகரமாக அமைந்து இருந்தன. நடன சுந்தரி சிவகாமியின் பாகத்தைக் தாங்குவதற்கு ஒரு பெண்மணி இல்லாதிருந்தது சற்றுக் குறையாகவே இருந்தது. நாடகத்தில் வரும் சிவகாமி நன்ருய் நடித்து, நடனம் ஆடி இருப்பினும் உருவத்திலும் பருமனிலும் சற்று மெலிந்து இருந்தால் நாம் கதையைப் படிக்கும் போது அகக் கண்களில் தோன்றும் சிவகாமிக்கு ஏற்ப இருந்து இருக்கும். மகேந்திர பல்லவனின் பேச்சும், தோரணையும் சற்றுக் கம்பீரம் குறைந்து காணப்பட்டன. குமார ராஜா நரசிம்மன், புவனமஹாதேவி, ஆயனர், பரஞ்சோதி இவர்களின் வேஷப் பொருத்தமும் நடிப்பும் நன்ருக இருந்தன.

○ ● ○

ஜெமினி படத்தில் "ஜோடி" நக்ஷத்திரங்கள்

ஜெமினி "சம்சாரத்தின்" அபார வெற்றிக்குப் பிறகு அவர்களுடைய அடுத்த சமூகப் படமான "மூன்று பிள்ளைகளை" ரசிகர்கள்

வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது படத்தில் சில மாறுதல்களைச் செய்து பிடித்துவருகின்றார்கள். மே மாதம் திரைக்கு வரும் என்று தெரிகிறது. இப்படத்தில் பல நக்ஷத்திர "ஜோடிகள்" நடிக்கிறார்கள். ஸ்ரீராம், வனஜா, M. K. ராதா, சுந்தரிபாய், நாகேந்திர ராவ், கண்ணாம்பா, கணேசன், சூர்யபிரபா இவர்களும் மேலும் பல ஹாஸ்ய ஜோடிகளும் இரட்டை இரட்டையாகப் பிரகாசிக்கின்றனர்.

துருக்கிப் பிரமுகர்கள்முன் ''ஔவையார்''

வெகு காலமாக எதிர்பார்க்கப்படும் ஜெமினி "ஔவை"யாரும் சீக்கிரமாகவே தமிழ்நாட்டில் வெற்றிப் பிரயாணம் ஆரம்பிப்பார் என்று தெரிகிறது. இதில் K. B. சுந்தராம்பாள் பல பாடல்களை இனிது பாடி நடித்திருக்கிறார். நிர்மூடனான காதலனுக்குத் தன் மனதைப் பறிகொடுத்துப் பிறகு தற்கொலை செய்துகொண்டு பேயாகமாறி, ஔவை அருளால் தன் சுயரூபம் அடையும் ராஜகுமாரியாக இதில் வனஜா நடிக்கிறார். ஔவையிடம் தன் வரலாற்றைக் கதக்களி நாட்டிய முறையில் அவர் ஆடிக் காண்பிப்பது மிகவும் அழகாக அமைந்து இருக்கிறது. இந்தக் காட்சிகள் அடங்கிய ஒரு ரீல் சமீபத்தில் சென்னைக்கு வந்திருந்த துருக்கிப் பத்திரிகையாளர் கோஷ்டியினருக்கு ஜெமினி ஸ்டுடியோவில் போட்டுக் காண்பித்தபொழுது வெகுவாகப் பாராட்டப்பட்டது. "ஔவையாரை" தமிழ் நாட்டின் அற்புதப் படமாகத் தயாரிக்க ஸ்ரீ வாஸன் பெரும் சிரத்தை எடுத்துக்கொண்டு நேரில் கவனித்து வருகிறார்.

ஜெமினியிடம் சர்க்கார் மதிப்பு

வெளிநாடுகளிலிருந்து கலாசார தூது கோஷ்டியினர் போன்றவர்கள் சென்னையில் அவசியம் பார்க்கவேண்டிய இடங்களில் ஜெமினி ஸ்டுடியோ ஒன்றாக இந்திய சர்க்கார் கருதுவதாகத் தெரிகிறது. பிப்ரவரி மாதம் துருக்கிப் பத்திரிகை தூதுகோஷ்டி இந் நகரத்திற்கு வந்தபொழுது முதன்மையாக ஜெமினி ஸ்டுடியோவைச் சுற்றிக்காண்பிக்கப்பட்டனர். ஸ்ரீ வாஸன் அளித்த தேநீர் விருந்துக்குப பிறகு தூதுகோஷ்டியினர் பேசுகையில் தாங்கள் டில்லி சேர்ந்தவுடனேயே ஜெமினி ஸ்டுடியோவின் பெருமையைப்பற்றிக் கேட்டதாகவும், சென்னைக்கு வந்தவுடன் ஸ்டுடியோவைச் சுற்றிப்பார்க்கத் தங்களுக்குச் சந்தர்ப்பம் வாய்த்ததில் பெரும் மகிழ்ச்சி ஏற்பட்டது என்றும் தெரிவித்துக்கொண்டனர்.

ஸ்டாண்டர்ட்
வான்கார்ட்



குடும்பத்திற்கேற்ற எங்கும் பிரசித்திபெற்ற கார்
யூனியன் கம்பெனி (மோட்டார்ஸ்) லிமிடெட்,
மதராஸ் — பெங்களூர் — உதகமண்டலம்.

மனம் போல் வாழ்வு

ஆர். சுப்பிரமணியன்

பொழுதுபோக்குவதற்கு வழிதானா இல்லை? ஆயிரம் வழிகள் இருக்கின்றன. ஆனால் எனக்கு முக்கியமான பொழுதுபோக்கு நான் மிகவும் விரும்புவது, சாயங்கால நேரம் எப்போது வரும் என்று சில சமயங்களில் எதிர்பார்க்கும்படி செய்வது என்றுகூடச் சொல்லலாம்— மலைக்கோட்டை உச்சியில்போய் உட்கார்ந்து கொள்வதுதான். மலைக்கோட்டை உச்சியில் முகட்டுப் பாறையின் ஓரமாக உட்கார்ந்து கொண்டு கீழே குனிந்து பார்ப்பதில் உள்ள ஆனந்தம் வேறெதில் இருக்கிறது? ஸ்ரீரங்கத்தைச் சுற்றி மாலையிட்டுச் சுழித்துக் கொண்டு செல்லும் காவேரியிலிருந்து சுருள் சுருளாகக் குறுக்கும் நெடுக்குமாகப் பின்னிக் கொண்டு ஓடும் பொன் மலை ரயில்வே தண்டவாளங்கள் வரை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் ரஸிக்கக்கூடிய எழிற் சித்திரம். உங்களுக்கு எப்படியோ எனக்குத் தெரியாது: என்னைப் பொறுத்தவரையில் மின்சார விசிறிக்கடியில் உட்கார்ந்துகொண்டு குழாய் வழியாகப் பாதாம்ஷீரை உறிஞ்சுவதைவிட, மெத்தை தைத்த நாற்காலியில் மல்லாந்து கொண்டு கால்மேல் கால் போட்டுக்கொண்டு திரைப் படத்தை அனுபவிப்பதைவிட, ஆயிரம்மடங்கு திகட்டாத இன்பம் இதில் இருப்பதாக உணர்கிறேன்: அந்த உணர்ச்சியில் மெய் மறந்து போகிறேன் என்று வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளுங்கள்.

அப்படி ஒருநாள் உட்கார்ந்து கொண்டிருந்தேன். "அம்பி! எங்கே ஞாபகம்? நான் வந்ததைக் கூடக் கவனிக்கவில்லையோ?" என்ற குரல் கேட்டுத்திரும்பிப் பார்த்தேன். நின்றுகொண்டிருந்தவர் சீதாராமையர். சீதாராமையரை உங்களுக்குத் தெரிந்திராமல் இருக்கமுடியாது. இருந்தாலும் அறிமுகம் செய்துவைக்க வேண்டியது என்னுடைய கடமை.

சீதாராமையர் ஸப்-ஜட்ஜாக இருந்து ரிடையர் ஆனவர். ஒரு வருஷமாக ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறார். நல்ல செல்வம் படைத்தவர். பேசினால் அருமையாகப் பேசுவார், கேட்டுக் கொண்டிருப்பவர்களுக்குத் தேனருவியாகத்தான் உணரமுடியுமே தவிர, புனலருவியாகக்கூட இராது. காதுக் கடுக்கனும், கழுத்தில் மின்னும் அங்கவஸ்திரமும், வெள்ளிப் பூண் போட்ட கைத் தடியுமாக அவர் கிளம்பினால் அவர் அந்தஸ்துக்கு வேறு ஆடம்பரமான விளம்பரம் தேவையில்லை.

இப்படிப்பட்ட பெரிய மனிதரின் நட்பு அற்பமான தாலூகாபீஸ் தலைமைக் குமாஸ்தாவான எனக்கு எப்படிக் கிடைத்ததென்று நீங்கள் ஆச்சரியப்படலாம். எங்கள் சங்கம் ஒன்று இருப்பது உங்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. அதன் காரியதரிசியான எனக்கே சந்தா வசூல் செய்யும் போதும் வருடாந்தர தேநீர் விருந்தின் போதும் தானே அதன் ஞாபகம் வருகிறது? அதன் ஆண்டு விழாவுக்குத் தலைமை வகிக்குமாறு கேட்டுக்கொள்வதற்காக நான் அவரைப்போய் ஒரு தடவை பார்த்தேன். "உன்னைப் பார்த்தவர்கள் உன்னோடு பேசாமல் போகமாட்டார்கள். பேசினவர்கள் பழகாமல் போகமாட்டார்கள். பழகினவர்கள் உன்னைவிட்டுப் பிரியமாட்டார்கள். அது உன் முகராசி" என்று அம்மா அடிக்கடி சொல்வதுண்டு. அதன் பலன்தானோ என்னவோ சீதாராமையருக்கு என்மேல் ஒரு அன்பு விழுந்துவிட்டது. "அம்பி!" என்று யாராவது கூப்பிட்டால் சட்டென்று திரும்பிப் பார்ப்பேன். அங்கே நிற்க்



தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்

கூடியவர் சீதாராமையர் ஒருவர்தான் என்று எனக்கு நிச்சயமாகத் தெரியும்.

நமக்குச் சமமாக இருப்பவர்களிடம் பழகுவது ரொம்ப சுலபம். மனம்விட்டுப் பேசுவது எளிது. ரொம்ப நெருங்கிப் பழகியதால் நமக்குப் பெரிதாக அவர்கள் எதுவும் செய்துவிடப் போவதில்லை. நம்முடைய போதாதகாலம் ஏதாவது மனஸ்தாபம் வந்துசேர்ந்தாலும் அவர்கள் விரோதத்தினால் ஒன்றும் குடிமுழுகிப் போய் விடாது. நமக்குக் கீழ் இருப்பவர்கள்—நம்மை விட அந்தஸ்தில் குறைந்தவர்களிடம் பழகுவதிலும் சிரமம் ஒன்றுமில்லை. நாம் சொல்வதையெல்லாம் அவர்கள் கேட்பார்கள். நம்முடைய ஹாஸ்யத்தையெல்லாம் ரஸிப்பார்கள். நாம் சிரிக்கவேண்டுமென்று எதிர்பார்க்கும்போதே ஊர் இடிந்து விழுகிறமாதிரி சிரிப்பார்கள். சின்ன கஷ்டம் நேர்ந்தாலும் ஆயிரம் ஆறுதல் சொல்லி, சமாளிக்க முன் வந்துவிடுவார்கள். நம்மை விடப் பெரியவர்கள் — நாலுபடியோ நாற்பது படியோ உயர்ந்தவர்கள் இருக்கிறார்களே —அவர்களுடன் பழகுவதுதான் சிரமம். செருப்புக்கூட இல்லாமல் வெறுங்காலுடன் சர்க்கார் ரஸ்தாவை அங்குலம் அங்குலமாகத் தேய்க்கிற என் போன்றவர்கள்சத்தம்போடாமல் புஷ்பக விமானம் மாதிரி மிதக்கிற 'ப்யூக்' காரில் வந்து இறங்குகிறவர்களிடம் பேசுவது சிரமமான காரியம் மட்டுமல்ல; ஆபத்தான காரியமும் கூடத்தான். அவர்கள் சொல்வது நமக்குச் சரியாகப்படலாம்; படாமலும் இருக்கலாம். அவர்களைப் பாராட்டத்தான் வேண்டி இருக்கிறது. அவர்களுடைய அனுபவங்களைச் சொல்லும்போது பிடிக்கிறதோ இல்லையோ பயந்துகொண்டு ரஸிக்கத்தான் வேண்டியிருக்கிறது. என்ன செய்வது? பெரிய மனிதர்கள். நாம் வினயமாக இருந்தாலும் அவர்களும் பெருந்தன்மையாக இருக்கிறவரையில் சரிதான்; நாம் செய்த முன்வினைப் பயன் ஒரு தடவை தகராறு வந்து சேர்ந்தால் அநுபவிக்கிறது யார் ஸ்வாமி?

எனக்கும் சீதாராமையருக்கும் உள்ள தொடர்பு மூன்றும் ரகத்தைச் சேர்ந்தது. அவர் உட்கார்ந்து பேசினால் நான் அவர் வாயைப் பார்த்துக்கொண்டிருப்பேன். அவர் சிரிக்கும்போது ஒருபடி அதிகமாகச் சிரிப்பேன். அவர் முகத்தில் வருத்தக் குறி தோன்றும்போது ஒரு சொட்டுக் கண்ணீர் விடத் தவறமாட்டேன். ஆனால் மற்றவர்களுக்கும் சீதாராமையருக்கும் ஒரு வித்தியாசம் உண்டு அவர் பேச்சு சுவாரசியம் மிகுந்தது. அவர் பேசி முடித்தால் முடிந்துவிட்டதே என்று இருக்கும். விடைபெற்றுக் கொண்டுவிட்டால் எழுந்து போகிறாரே என்று தோன்றும்.

நின்றுகொண்டிருந்தவர் என் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டார். நான் கொஞ்சம் தள்ளி உட்கார்ந்து கொண்டு அவர் பேசுவதையே கவனிக்கலானேன்.

தாயுமானசுவாமி கோவிலில் பூஜை மணி அடித்தது. அவர் பேசத் தொடங்கினார்.

"கடவுளுடைய போக்கே விசித்திரமானது அம்பி! அது யாருக்கும் புரிகிறதில்லை, நாம் ஒன்று நினைக்கிறோம். வேறொன்று நடக்கிறது. ஒரு பொருளுக்காக ஆசைப்படுகிறோம். வழிகள் வகுத்துத் திட்டங்களெல்லாம் போடுகிறோம். கடைசியில் அது கிடைப்பதில்லை. வெறும் ஏமாற்றம் தான் மிஞ்சுகிறது. ஆனால் அதை விட ஆச்சரியமான விஷயம் பார். அந்த ஏமாற்றம் நீடிப்பதில்லை. கொஞ்சம் நாட்கள் கழித்து வேறொரு சந்தர்ப்பம் குறுக்கிடுகிறது. எதற்காக நாம் அப்படித் துடித்தோமோ, எந்தப் பொருள் கிடைக்கவில்லையென்று இரவு பகலாய் வேதனைப் பட்டோமோ அந்தப் பொருளின் உண்மை ஸ்வரூபம் நமக்குப்புலப்படுகிறது. "சீ! இவ்வளவு தானா? இதற்காக அவ்வளவு பாடுபட்டோம்; இதை அடைவதற்காகவா இப்படிப் பித்துப்பிடித்து அலைந்தோம்!" என்று நமக்கே தோன்றுகிறது. நாம் அடையாததற்காக வருத்தப்படுவதில்லை; அடையவேண்டுமென்று நினைத்ததற்காக வெட்கப்படுகிறோம். நம்மையறியாமல் ஒரு திருப்தி நம் மனதில் வந்து சூழ்ந்துகொள்கிறது. எந்த முடிவுக்காக ஒரு காலத்தில் கடவுளை நொந்து கொண்டோமோ அதேமுடிவுக்காகக் கடவுளுக்கு நம்மையறியாமலேயே நன்றி செலுத்துகிறோம். நீ சின்னப் பையன்; என் பேச்சு உனக்கு விநோதமாக இருக்கலாம். எனக்கு அப்படித் தோன்றவில்லை. நான் வாழ்க்கையில் பார்த்ததை, அநுபவித்ததைச் சொல்கிறேன். அது அவ்வளவும் உண்மை. நீ எழுதுகிறமாதிரி கற்பனையில் உண்டாகும் சமாசாரம் எதுவும் அதில் கிடையாது."

"பதினெட்டு வருஷங்களுக்கு முன்னால் நடந்தது. நினைத்தால் நேற்று நடந்ததுபோல நினைவு இருக்கிறது. அந்த நாளை நினைக்கும்போது இந்த இடம், சூழ்நிலை, எல்லாவற்றையும் மறந்துவிடுகிறேன். அந்த நாளில் நடந்ததுமட்டுமே எனக்கு ஞாபகமிருக்கிறது. அந்தப் பருவத்து வாழ்க்கையில்—என் வாழ்வில் அந்த அத்தியாயத்தில்—மறுபடியும் பிரயாணம் செய்வதுபோன்ற ஓர் உணர்ச்சி என்னை மீறி உண்டாகிறது.

அப்போது எனக்குச் சுமார் நாற்பது வயது இருக்கலாம். பார்க்கிறவர்கள் ஒன்று இரண்டு சேர்த்தே மதிப்பிடுவார்களே தவிர, குறைவாக மதிப்பிடமுடியாது. தலை நரைக்க ஆரம்பித்து விட்டது. கேஸ்கட்டுகளைப் படிக்கும்போதும் ஆழ்ந்த ஆலோசனையில் ஈடுபட்டிருக்கும்போதும் நெற்றியில் வரிவரியாகச் சுருக்கம் விழும். உடம்பின் கட்டுக்கூடத் தளர ஆரம்பித்துவிட்டது. என் முதல் மனைவி—தங்கம்—இறந்துபோய் அப்போது எட்டு வருஷங்கள் ஆகியிருந்தன. ஏனோ நான் மறு கல்யாணம் செய்துகொள்ளவில்லை. அத்தகைய ஆர்வம்கூட எனக்கு எழவில்லை.

அதற்குக் காரணம் நான் தங்கத்தினிடம் வைத்திருந்த பற்று என்றோ, காதல் என்றோ சொல்ல நான் தயாராக இல்லை. ஏனோ எனக்கு மறு கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமென்ற ஆர்வம் இல்லை. அவ்வளவுதான். வாழ்க்கையில் கடவுளாகச் சம்சார பந்தத்தில் எட்டு வருஷங்கள் ஈடுபடுத்தினார். அவராகவே என்னை இப்போது ஒற்றை மரமாக ஆக்கிவிட்டார். "எனக்கு மறுக்கப்பட்ட ஒன்றை—'கிடையாது' என்று அவரே தீர்மானித்துவிட்ட ஒரு பொருளை—பின் தொடர்ந்து தேடவேண்டுமென்கிற அவசியம் என்ன?" என்று நானே எனக்குப் பதில் சொல்லிக்கொண்டு விட்டேன். ஆனால் சுற்றியுள்ளவர்கள் அப்படிச் சும்மா இருக்கவில்லை. உறவினர்களும் நண்பர்களும் என் வயதையும் அந்தஸ்தையும் எனக்கு ஞாபகப்படுத்தினார்கள். நான் விரும்பினால் பெண்களைக் கல்யாணம் செய்துகொடுப்பதாக உறுதி சொன்னார்கள். என் அந்தஸ்து அவர்களை அப்படிக் கவர்ந்து இழுத்தது. எப்படியோ நானும் அவர்களுடைய தாக்குதல்களைச் சமாளித்துக் கொண்டு வந்தேன்.

அந்தச் சமயத்தில்தான் நான் கரூருக்கு மாற்றலாகி வந்தேன். அக்கிரகாரத்தில் ஒரு பெரிய வீட்டிற்கு நான் குடி வந்தபோது எனக்கு வரவேற்புத் தடபுடலாக இருந்தது. தனி மனிதனாக வந்து சேர்ந்திருந்தாலும் எனக்கு ஆதரவாக உதவி செய்வதற்கு ஒவ்வொருவரும் காத்திருப்பதைக் கண்டு எனக்குக் கொஞ்சம் கர்வம்கூட உண்டாயிற்று. அந்தத் தெருவில் காரில் வந்து இறக்கும்போது என்னையறியாமல் ஒரு பெருமிதம் என்னுள் தலைதூக்கும். அந்த இடத்தில் நானே பெரிய பிரபு என்று கற்பனை செய்துகொள்வேன். அந்தப் பெருமையில் நான் வருவதையோ போவதையோ யாராவது பார்க்கிறார்களா என்று கவனிக்கவேண்டும் என்கிற ஒரு அசட்டு ஆசையும் எனக்கு உண்டாவதுண்டு. ஒரு தடவை அப்படிக் காலையில் கோர்ட்டுக்குக் கிளம்பும்போது தலைப்பாகையைச் சரிசெய்துகொண்டே என்னைச் சுற்றி ஒருமுறை பார்த்தேன்.

சட்டென்று என் பார்வை தடைபட்டது. என் வீட்டை ஒட்டினாற்போல் ஒரு சிறு வீடு. வீட்டின் முன்புறம் சிறு வராந்தா, கம்பிக்கதவு போட்டு மூடியிருந்தது. கம்பிகளினூடே இரண்டு கண்கள்—மைதீட்டிய கண்கள்—என்னையே நோக்குவதை உணர்ந்தேன். அதன் கவர்ச்சி என்னை ஆகர்ஷித்தது. அவ்வளவு நாட்களும் நான் அனுபவித்திராத ஓர் உணர்ச்சி என்னுள் பாய்ந்து பெருகி ஓடியது.

அந்தப் பெண்ணுக்குச் சுமார் பதினெட்டு வயது இருக்கலாம். கரிய நீண்ட பின்னல் அவள் கழுத்தைச் சுற்றி வளைய விழுந்திருந்தது. காற்றில் அலைபுரண்ட நெற்றிமயிர் பிறைச் சந்திரனைப் போல் வளைந்து ஆடியது மாநிறம். அதிகம் அழகு இல்லாவிட்டாலும் எளிதில் சமாளித்துவிட முடியாத ஒரு கவர்ச்சி, பருவத்தின் கவர்ச்சி அவளை மீறி அவளிடம் கொந்தளித்தது. அதை அவள் அலட்சியமாக ஏற்றுக்கொண்டிருந்தாள்.

அன்று முதல் என் மனம் சஞ்சலம் அடைந்தது. என்னையறியாமல் என் வேலைகளுக்கு நடுவிலும் கூட அந்தப் பார்வையை, மைதீட்டிய அந்தக் கண்களின் ஒளியை, அதன் அழகை நினைவுபடுத்திக்கொள்வேன். மணிக் கணக்காக எல்லாவற்றையும் மறந்த நிலையில் இருந்துவிடுவேன். ஒவ்வொரு தடவையும் அந்த வீட்டைத் தாண்டிச் செல்லும் போதெல்லாம் என் கண்கள் என்னையும் அறியாமல் அந்த உருவத்தைத் தேடும். அவளை அங்கே காணாவிட்டால் ஒரு பெருமூச்சு விடுவேன். அவள் அங்கே இருந்தாலோ என் மனம் படபடக்கும். என் நடைகூடத் தளர்ந்து போகும்.

நான் முதலிலேயே சொன்னேன். எந்தப் பெண்ணும் என்னைக் கவர்ந்தது கிடையாது. கலியாணம் என்ற எண்ணம்கூட என் மனதில் தோன்றியதில்லை, ஆனால் இந்தப் பெண் என் மனதில் என்னையறியாமல் இடம்பெற்றுவிட்டாள் என்று உணர்ந்தேன். அதனால் எனக்கு வருத்தம் உண்டாகவில்லை. அந்த நினைவில் ஒரு புளகாங்கிதமே உண்டாயிற்று. சில சமயங்களில் என் மனதில் சஞ்சலம் உண்டாகும். "சி! இதெல்லாம் என்ன நினைப்பு? நம் அந்தஸ்து என்ன? நிலை என்ன? சரியென்று சொன்னால் எவ்வளவு பேர் சிநேகிதர்களும், உறவினர்களுமாக நமக்குப் பெண் கொடுக்கமாட்டார்கள்? யாரோ ஒரு கிராமத்துப் பெண் நம்மைப் பார்த்த பார்வையிலா நம் உறுதியையெல்லாம் பறக்கவிட்டுவிடுவது? மற்றவர்கள் நம்மைப்பற்றி என்ன நினைப்பார்கள்? நம் நிலைமை என்ன ஆகும்? எவ்வளவு கௌரவக் குறைவு? இதென்ன அசட்டுத்தனம்?" என்று எனக்குள்ளேயே விவாதித்துக் கொள்வேன்.

"இதில் என்ன அந்தஸ்து இருக்கிறது? இதில் ஈனமான செயல் என்ன இருக்கிறது? வாழ்க்கையில் சந்தோஷத்துக்காக ஒவ்வொருவர் ஒவ்வொரு பொருளைத் தேடுகிறார்கள். எல்லோருடைய செயலையும் எல்லோரும் பாராட்டிவிடுகிறார்களா என்ன? எல்லோரிடமும் நல்ல பெயர் வாங்க யாரால் முடியும்? அவரவர்களுக்கு அவசியமானதை அவரவர்கள் தேடிக் கொள்வதில் தவறு என்ன இருக்கிறது? ஒரு காலத்தில் கல்யாணம் தேவை இல்லை என்று நினைத்தேன்: செய்து கொள்ளவில்லை. இப்போது தேவை என்று நினைக்கிறேன்: செய்து கொள்கிறேன். அது என்னுடைய இஷ்டம்; வாழ்க்கையின் தேவை. இதில் பிறருடைய அபிப்பிராயத்துக்கு என்ன இடம் இருக்கிறது?" என்று சிலசமயம் நினைப்பேன்.

"ஒருகால் தங்கத்துக்கே இது சம்மதமாக இருக்குமோ! இவ்வளவு நாள் இல்லாத மனநிலை இப்போது ஏற்படுவானேன்? எல்லாம் வினைப்

பயன்; விதிப்படி நடக்கும். நாம் செய்வதாகவோ, நமக்காக நடப்பதாகவோ நினைத்துக் கொள்வது அறிவீனம்'' என்று என்னையே தேற்றிக் கொள்வதும் உண்டு.''

ஆனால் என்னையறியாமல் அவள் நிழல் என் மனதில் படிந்துவிட்டதை உணர்ந்தேன். அவள் நினைவு என் மனதை விட்டு அகலவில்லை. அவளைப்பற்றி நினைக்கும்போது என்னையறியாமல் எனக்கு ஒருவித சந்தோஷம் உண்டாயிற்று. அவளுடைய நடையில், பாவனையில், பேச்சில், ஒவ்வொரு செயலிலும், ஒவ்வொரு அங்க அசைவிலும் ஏதோ ஒருவித வசீகரம் இருந்தது. என்னால் எடுத்துரைக்க இயலாத ஒருவித ஆகர்ஷணம் இருந்தது. ''பாகீரதி!'' என்று அவள் தகப்பனார் அவளைக் கூப்பிடும்போது என்னையறியாமல் என் உடல் சிலிர்த்தது.

ஆனால் என் நிலையை யாரிடம் சொல்வது? எப்படி விளையாடுவது? நான் வாலிபனல்ல. வாழ்க்கையைத் தொடங்கி ஒரு தடவை முடித்துவிட்டவன். ஒரு தடவை விட்டுப்போன கதையை, மறுபடி சுவாரசியமான ஒரு புது அத்தியாயத்திலிருந்து புதிதாக எழுத முயலுபவன். என்னுடைய ஆவல் சிலருக்கு வியப்பைத் தரலாம். சிலர் என்னைப் பார்த்து அனுதாபப்படலாம். சிலர் மறைமுகமாகப் பரிகாசம் செய்தாலும் ஆச்சரியமில்லை. ஆனாலும் இதில் மூடிமூடி வைப்பதற்கு என்ன இருக்கிறது? அப்படிச் செய்வதால் என்ன பலன் உண்டாக முடியும்!

ஆனால் அதை வெளியிடுவதுதான் எவ்வளவு சிரமமான காரியம்? வாலிபப் பருவத்தில் உள்ளவர்கள், காதல் கனவு கண்டுகொண்டிருப்பவர்கள், மண வாழ்க்கையைப்பற்றி மனக்கோட்டை கட்டுகிறவர்கள், வரப்போகும் ராணியைப்பற்றித் திட்டம் போட்டுக்கொண்டிருக்கும் ராஜாக்கள், இவர்களுக்கு இந்த உணர்வு, கட்டுமீறிய வெறி, ஆனந்தமாக இருக்கலாம். அதைப் பாராட்டி அவர்கள் மனம் மகிழும்படி பரிகாசம் செய்யக்கூடியவர்கள் அவர்களுக்கு இருப்பார்கள். ஆனால் நான் அப்படிப்பட்ட நிலையில் இல்லையே? ஒவ்வொரு இடத்திலும், என்னுடன் பழகிய ஒவ்வொருவரிடமும் நான் உணர்ந்தது எல்லையில்லாத மரியாதை உணர்ச்சி ஒன்றுதான். தவறிப்போய்கூட, சகஜமாகப் பழகக்கூடியவர்கள், என் உணர்வை அறிந்து என்னிடம் மனம்விட்டுப் பேசக்கூடியவர்கள் யாரையும் நான் சந்திக்க முடியவில்லை.

கடைசியில் அதற்கும் சந்தர்ப்பம் வந்தது. பாகீரதியின் தகப்பனாரிடமே அதை வெளியிட்டுவிட்டேன். அவரால் அதை நம்பமுடியவில்லை இத்தகைய ஒரு அதிருஷ்டத்துக்குத் தான் ஆளாக முடியுமென்று அவர் நினைக்கவில்லை. அவரைவிடப் பன்மடங்கு உயர்ந்த நிலையில் உள்ள என்னைப்போன்ற ஒருவன் அவரிடம், அவர் புதல்வியை நாடி வரக்கூடும் என்று அவர் கனவுகூடக் கண்டதில்லை. அவருக்கு அது ஆச்சரியமாக இருந்தது. அபரிமிதமான சந்தோஷத்தைத் தருவதாகவும் இருந்தது. அவருடைய சம்மதத்தைப் பொறுத்தவரையில் எனக்கு ஒருவிதமான தடங்கலும் இருக்கமுடியாது என்று உணர்ந்தேன்.

ஆனால் ஒரு கேள்வி என் மனதை உறுத்திக் கொண்டிருந்தது. பாகீரதி என்னைப்பற்றி என்ன நினைக்கிறாள்? அவளால் என்னை விரும்பமுடியுமோ முடியாதோ? நான் நாற்பது வயதைக் கடந்தவன். கிட்டத்தட்ட அவளைப்போல இரண்டு மடங்கு வயதானவன். என் உருவமோ தோற்றமோ அவளை எப்படி வசீகரிக்கமுடியும்! அவளுடைய இளமை துடிக்கும் உள்ளத்தில் என்னென்ன கனவுகள் இருக்கின்றனவோ எனக்கு என்ன தெரியும்? ஒருகால் என்னுடைய மூர்க்கத்தனமான ஆசையினால் அவளுடைய வாழ்வைக் குலைத்துவிட்டால் அதைவிட அறிவீனமான செயல்வேறு என்ன இருக்கிறது?

''பாகீரதியைக் கண்டு சில கேள்விகள் கேட்க ஆசைப்படுகிறேன்'' என்று என் ஆவலை அவள் தகப்பனாரிடம் வெளியிட்டேன். அவரும் அதற்கு ஒப்புக்கொண்டார்.

இன்றும் நன்றாக நினைவு இருக்கிறது. கார்த்திகை மாதம். சாயங்கால நேரம், லேசாக இருட்டு மூடிக்கொண்டிருந்தது. கூடத்து ஓரத்தில் குத்து விளக்கு 'மினுக் மினுக் என்று எரிந்துகொண்டிருந்தது. சரசரவென்ற புதுப் புடவையின் சப்தம். பாகீரதி எனக்கு நமஸ்கரித்துவிட்டு ஒதுங்கி நின்றாள். நான் அவளையே உற்றுப் பார்த்தேன். கடைந்தெடுத்தது போன்ற உருவம். சொல்ல முடியாத மருட்சி நிறைந்த ஒரு பார்வை. அதிலிருந்த வசீகரம் என்னை மயக்கியது. என்னால் கணீரென்று பேசமுடியவில்லை. கோர்ட்டில் எனக்கு இருக்கக்கூடிய கம்பீரம் அவள் முன்னால் எங்கேயோ ஓடி மறைந்துகொண்டது. எப்படியோ தட்டுத் தடுமாறிக் கேட்டுவிட்டேன்.

''பாகீரதி! உன்னுடைய விருப்பத்துக்கு மாறாக நான் எதுவும் செய்ய ஆசைப்படவில்லை. உன் மனநிலை என்ன என்று அறிய நான் ஆசைப்படுகிறேன். உண்மையில், நீ என்னைக் கலியாணம் செய்துகொள்ள மனமாரச் சம்மதிக்கிறாயா? வாலிபப் பருவத்தைத் தாண்டிவிட்ட என்னைப் போன்ற ஒருவனை மணந்து கொண்டாலும் உன் வாழ்க்கை சந்தோஷமாகவும் நீ ஆசைப்படுகிற மாதிரியும் இருக்குமென்று நம்புகிறாயா! சொல். உன் விருப்பம் என்ன என்பதை அறியாமல் நான் எதுவும் செய்யமாட்டேன்''

அவள் என்னை நிமிர்ந்து பார்க்கவில்லை. தலை குனிந்தபடியே கால்கட்டை விரல் நகத்தால் தரையைக் கீறிக்கொண்டே தட்டுத் தடுமாறிப் பேசினாள். ஆனால் அது கணீரென்ற குரலில் இருந்தது. அதில் விவரிக்க வொண்ணாத ஒரு சோகம் படர்ந்திருந்தது. அந்தப் பதில் நான் எதிர்பாராததாகவும் இருந்தது.

எவ்வித இன்ஷ்யூரன்ஸிற்கும்

எம்மிடம் ஆலோசனை பெறுக

வான்கார்டு

பாலிஸிதாரர்களுக்கு மிகக் குறைந்த
பிரீமியம் விகிதங்களும், உடனடியான
திறமையான சேவையும், தாராளமான
பாலிஸி நிபந்தனைகளும் வழங்குவதே
எமது குறிக்கோள்

○ ✱ ○

வான்கார்டு இன்ஷ்யூரன்ஸ்

கம்பெனி லிமிடெட்

வான்கார்டு பயர் & ஜெனரல்

இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

○ ✱ ○

தலைமை ஆபீஸ்கள்:

"வான்கார்டு ஹவுஸ்", 11 & 12, செகண்ட் லைன் பீச்

மதராஸ் - 1

"நீங்கள் பெரிய மனிதர். நான் விவரம் தெரியாத ஏழைப்பெண். உங்கள் ஆவலுக்கும் வேண்டுகோளுக்கும் முன்னால், அப்பாவுடைய பெருமைக்கும், மனோபீஷ்டத்திற்கும் முன்னால் என்னைப் போன்ற ஒரு பெண்ணின் அபிப்பிராயத்துக்கு என்ன பெரிய முக்கியத்துவம் இருக்கிறது! அதை அறிந்துகொள்ள நீங்கள் ஆசைப்படுவதே எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. ஆனால் நீங்கள் கேட்பதால் சொல்கிறேன். என் இஷ்டப்படி இந்தக் கல்யாணம் நடைபெறுவதாக நான் ஒப்புக்கொள்ள முடியாது. எனக்கு ராகவன் என்று ஒரு அத்தான் உண்டு. சிறு வயதிலிருந்தே நாங்கள் இரண்டுபேரும் சேர்ந்து பழகினோம். விளையாடியிருக்கிறோம். பெரியவர்களாக வளர்ந்து விட்டபிறகு ஒருவரை யொருவர் கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமென்று நினைத்ததும் உண்டு. ஆனால் அவன் சொற்பமாகப் படித்தவன். பெரிய அந்தஸ்தில் இருக்க இயலாதவன். உங்களுடைய நிலைக்கு முன்னால் இருக்கமுடியாதவன். அதனால் அப்பாவின் தீர்மானம் உங்களையே தேர்ந்தெடுப்பதாக இருந்தால் அதில் ஆச்சரியமில்லை. எவ்வளவோ நினைக்கிறோம். எல்லாம் நினைக்கிறபடி நடந்து விடுகிறதா என்ன? உங்கள் இஷ்டப்படி செய்யுங்கள்."

அவள் கண்களிலிருந்து ஒரு சொட்டுக் கண்ணீர் விழுந்தது. என்னால் அங்கே நிற்கக் கூட முடியவில்லை "பரவாயில்லை பாகீரதி! உன் மனம் வருந்தும்படி நடந்துகொண்டதற்காக என்னை மன்னித்துவிடு" என்று சொல்லிவிட்டு வெளியே வந்துவிட்டேன்.

ஆனால் அந்த ஏமாற்றத்தை என்னால் அவ்வளவு எளிதாகச் சமாளிக்கமுடியவில்லை. மனம் எண்ணாததெல்லாம் எண்ணிற்று. என்னுடைய அந்தஸ்துக்கு மட்டுமே மற்றவர்களை எளிதில் கவர்ந்துவிடக்கூடும் என்று நான் கர்வப்பட்டது எவ்வளவு பெரிய பிசகு? என் தீர்மானம் எவ்வளவு தவறு நிறைந்தது? நான் பாடம் கற்பிக்கப்பட்டதாக உணர்ந்தேன். கர்வ பங்கம் உண்டானதைப் போன்ற ஓர் உணர்ச்சி என்னுள் படர்ந்தது.

ஆனால் அந்த உணர்ச்சியை என்னால் அவ்வளவு எளிதாகத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. உதறித்தள்ளிவிடவும் முடியவில்லை. "இந்த ஏழைப்பெண் அவ்வளவு அலட்சியமாக நடந்துகொள்ளக்கூடிய நிலையிலா நான் இருக்கிறேன்? என்னைவிட அந்த ராகவன் அவ்வளவு உயர்ந்தவனா? அசட்டுப்பெண்! வாலிபப் பருவத்தின் அர்த்தமில்லாத ஆசைகளுக்கிடையில் வாழ்க்கையின் சுகதுக்கங்களைப் பற்றிய தீர்க்கமான யோசனைகளுக்கு அவள் மனதில் எங்கே இடம் இருக்கிறது?" என்று என்னையே தேற்றிக் கொண்டேன். தவிர, "ஒருநாள் இல்லாவிட்டால் ஒருநாள் வாழ்க்கையில் தான் செய்த இந்தத் தவறுக்காக அவள் வருந்துவாள். ஒரு வேளை அதை நான் அறிந்து அவளைப் பார்க்கக் கூடிய சந்தர்ப்பம் வந்தாலும் வரக்கூடும்" என்ற ஒரு அசட்டு நம்பிக்கையும் என்னுள் தலைதூக்கியது.

அப்புறம் விரைவில் நான் அந்த ஊரைவிட்டு மாற்றிக்கொண்டு வந்துவிட்டேன். ஆனால் அடிக்கடி என்வாழ்வில் ஒரு முறை குறுக்கிட்ட அந்தப் பெண்ணின் ஞாபகம் என் நினைவில் வந்து என்னை வருத்துவதுண்டு. அப்புறம் நான் வேறு கலியாணம் செய்துகொண்டு வாழ்க்கை நடத்த வேண்டுமென்று ஆசைப்படவே இல்லை.

"இதெல்லாம் இப்போது நினைவுக்கு வரவேண்டிய சந்தர்ப்பம் என்ன? அவைகளை இங்கே சொல்லவேண்டிய அவசியம் என்ன?" என்று நீ கேட்பாய். அந்த இடத்தில் தான் சுவாரசியமான கட்டத்துக்கு வருகிறோம்.

இவ்வளவு நாட்களுக்குப் பிறகு போனவாரம் நான் என் நண்பர்கள் சிலரோடு பேசிக்கொண்டிருந்தேன், அப்போது என்னைப் பார்க்க யாரோ வந்திருப்பதாக என் சேவகன் வந்து சொன்னான். நான் வரச்சொல்லி அநுமதி கொடுத்ததும் நடுத்தர வயதுள்ள ஒருவன், சுமார் நாற்பது வயதுள்ளவன், என்னை வந்து வணங்கினான்.

"நீ யாரப்பா; என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டேன்.

"நான் மறுமலர்ச்சி நாடகசபையின் காரியதரிசி. அடுத்த வாரம் ஒரு சமூக நாடகம் நடத்தப் போகிறோம். அதற்கு நீங்கள் தலைமை வகிக்க வேண்டும். அதற்காகக் கேட்டுவிட்டுப் போக வந்தேன்" என்று சொன்னான்.

என்னுடைய எங்கேஜ்மெண்ட் புஸ்தகத்தை எடுத்து இருபதாம் தேதிக்கு எதிரில் "மறுமலர்ச்சி நாடகசபை—சமூக நாடகம்" என்று குறித்துக் கொண்டு, வேறு ஒன்றும் விசேஷம் இல்லையே?' என்று கேட்டேன்.

டிக்கட் புஸ்தகத்தை எடுத்து, "போஷகர்கள் டிக்கட் ஒன்று நூறு ரூபாய். நீங்கள் இரண்டு டிக்கட்டாவது வாங்கவேண்டும்" என்றான்.

இது நான் எதிர்பார்த்ததுதான். ஆனால் உடனே "சரி" என்று அதை வாங்கிக்கொள்ள எனக்கு விருப்பமில்லை. இருக்கட்டும், உங்கள் வீட்டு விலாசத்தைக் கொடுத்துவிட்டுப் போங்கள். செக்கை உங்கள் வீட்டுக்கு அனுப்பி வைக்கிறேன்" என்று சொன்னேன். அவன் விலாசத்தைச் சீட்டில் குறித்துக் கொடுத்துவிட்டுப் போனான்.

என் நண்பர்களுள் ஒருவர் கண்ணைச் சிமிட்டிக் கொண்டே கேட்டார்.

"பரவாயில்லையே! சீதாராமையர்! யார் வேண்டுமானாலும் என்ன, யோக்கியதையில் இருந்தாலும்

இல்லாவிட்டாலும் உங்களைச் சுலபமாக ஏமாற்றிப் பணம் வாங்கிக்கொண்டு போய்விடலாம் போலிருக்கிறதே? உங்களிடம் சம்பாதிப்பது இவ்வளவு சுலபமென்று எனக்கு இவ்வளவு நாட்களாகத் தெரியாது" என்றார்.

எனக்குத் தூக்கிவாரிப்போட்டது. "அப்படி ஒன்றுமில்லையே? இப்போது என்ன நடந்துவிட்டது? நான் யாருக்கு என்ன கொடுத்துவிட்டேன்?" என்று கேட்டேன்.

"வந்த பேர்வழியை உங்களுக்குத் தெரியாது. இந்த ஊரிலிருக்கிற எத்தனையோ காலாடிப்பயல்களில் அவன் பொறுக்கி எடுத்த ரகம். அவனுக்கு நிகர் அவனேதான். அவனுக்கு இல்லாத கெட்ட பழக்கம் ஒன்று பாக்கியில்லை. இந்த லட்சணத்தில் நாடக சபை என்று பெயர்வேறு. ஊரில் உள்ள நடத்தை கெட்ட பெண்களும் ஆண்களும் அதில் சேர்ந்து கும்மாளம் அடிக்கிறார்கள். உங்களைப் போன்றவர்கள் அதை யெல்லாம் ஆதரிப்பது அழகாக இருக்கிறதா? அல்லது இந்த மாதிரி யோக்கியதை கெட்டவர்களுக்குப் பணம் கொடுப்பதுதான் நியாயமா?"

"அப்படிச் சொல்லாதீர்கள்! உங்களைப்போன்ற நண்பர்கள் சொல்லாவிட்டால் எனக்கு எப்படித் தெரியும்! ஆனால் யோக்கியதையை அறியாமல் நான் அவ்வளவுஎளிதில் முட்டாள்தனமாக எதையும் கொடுத்துவிடுவேனா?" என்று அவரைச் சமாதானப்படுத்தினேன்.

அன்று சாயங்காலம். அந்த மனிதனை மீண்டும் சந்திக்கவேண்டுமென்ற ஆவல் எனக்கு உண்டாயிற்று. செக் புஸ்தகத்தில் இருநூறு ரூபாய் செக் எழுதிப் பையில் போட்டுக்கொண்டேன். அவன் கொடுத்திருந்த விலாசச் சீட்டைப் பிரித்துப் படித்தேன். "டி. என். எஸ். ராகவன், காரிய தரிசி, மறுமலர்ச்சி நாடக சபை. 35, ஆண்டார் தெரு" என்று அதில் எழுதியிருந்தது. என் மனம் ஒரு கணம் சஞ்சலப்பட்டது. என்னையும் மீறி ஒரு விசித்திரமான சந்தேகம் என்னுள் தலை எடுத்தது. அதைத் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்கிற ஆவலும் என்னை ஆட்டிவைத்தது.

கார் அந்த வீட்டுக்கு முன்னால்போய் நின்றது. படபடக்கும் மனத்துடன் இறங்கி, வீட்டு வாசற்படி ஏறினேன். வீட்டு வாசற்கதவு பூட்டியிருந்தது. ஆனால் வாசற்புறம் மாடிக்குப்போகும் படிக்கட்டு இருந்தது. மாடியில் யாரோ இருப்பதும் தெரிந்தது. ஏதோ ஆவலினால் தூண்டப்பட்டவனாய், படியேறினேன். என் மனம் ஏதோ ஒரு காரணத்தால் சஞ்சலமடைந்தது. மாடியில் இருந்தது ஒரு குடும்பம். வாசற்புறம் வராந்தாவில் ஐந்து வயதுப் பையன் ஒருவன் விளையாடிக் கொண்டிருந்தான். "ராகவன் வீடு இதுதானே? அவர் வீட்டில் இருக்கிறாரா?" என்று அவனைக் கேட்டேன்.

"இல்லையே? வெளியில் போயிருக்கிறார்? திரும்பவும் ஏழெட்டு மணிக்குமேல்தான் வருவார். சில சமயம் பத்து மணிகூட ஆகும்?" என்று ஒரு பெண் குரல் கணீரென்று கேட்டது. தலைநிமிர்ந்து பார்த்தேன், தூக்கிவாரிப் போட்டது. வந்து கொண்டிருந்தவள் பாரதி!

ஒருகணம் சமாளித்துக்கொண்டேன்." என்னைத் தெரிகிறதா? பாரதி?" என்று கேட்டேன்.

அவள் சிரித்துக்கொண்டே,

"தெரியாமலென்ன? உங்களை மறக்க முடியுமா? நான் இன்று இந்தநிலையில் இருப்பதற்கே நீங்கள் தானே காரணம்?" என்று சொன்னாள். இந்தப் பெண்களுக்குத் தான் எத்தனை சாகசம்?

என் மனம் கொந்தளித்தது. என்னை நிராகரித்துவிட்டு அவள் தேர்ந்தெடுத்துக் கொண்ட ராகவன் உண்மையில் அவளுக்கு ஏற்றவன்தானா? அவளைப் போன்ற ஒருத்தியைப் படைத்தும் நெறிதவறி ஊர் சுற்றும் அத்தகைய ஒரு கணவனுடன் அவளால் சௌக்கியமாக வாழ முடியுமா?

"நீ எப்படி இருக்கிறாய் பாரதி! சௌக்கியமாக இருக்கிறாயா?" என்று கேட்டேன்.

"சௌக்கியத்துக்கு என்ன குறைச்சல்? எல்லாம் உங்கள் ஆசீர்வாதம். கிடைப்பது கொஞ்சமானாலும் உள்ளதைக் கொண்டு மானமாகக் காலந்தள்ளுகிறோம்" என்று பதில் சொன்னாள்.

பேஷ்! இதுதான் மானமாக வாழ்வதா? இவளை இப்படி ஏமாற்றி விட்டு அவன் ஊர் சுற்றி உண்டான அக்கிரமும் செய்கிறானா? நடக்கட்டும்! பேஷாய் நடக்கட்டும்! அவளாக வரித்துக் கொண்ட கணவன் தானே? அல்லது அவன் சுபாவம் தெரிந்தும் அவள் விட்டுக் கொடுக்காமல் பேசுகிறாளா? இருக்கலாம். அப்படி இருந்தால் அது எத்தகைய பெருந்தன்மை? மாசு மறுவற்ற அத்தகைய பெருந்தன்மைக்கு முன்னால் அவள் கால் தூசிக்கு நிகராகக் கூடிய யோக்கியதைகூட அவள் கணவனுக்கு இல்லையே?

என்னென்னவோ பேசிக்கொண்டிருந்தேன். ஆனால் ஒன்றும் மனதில் பதியவில்லை. மனம் குழம்பிக் கிடந்தது. மறுபடி நான் அந்த வீட்டுப் பக்கம் போகவில்லை. ஒரு காலத்தில் பாரதியை அடைய முடியவில்லையே என்று நான் வருத்தப் பட்டதுண்டு. அவளை அடைந்த ராகவனை எண்ணிப் பொறாமைப்பட்டதுண்டு. ஆனால் கடந்த ஒருவாரமாக என்மனமே மாறிவிட்டது. பழைய நினைவுகள் எனக்கு எந்த வேதனையையும் தரவில்லை; அதற்குப் பதிலாக அவளை மணந்து கொள்ளாததற்காகத் திருப்திப் படுகின்றன. யோக்கியதைகெட்ட ஒருவன்தான் அவளுக்குக் கணவன் என்று அவள் தலையில் எழுதி இருக்கும் போது என் போன்ற ஒருவன் அவளை மணந்து

கொள்ள நினைத்தால் அது எப்படி நிறைவேறும்? ஆனால் ஒன்று, "அவள் ஒரு காலத்தில் என்னை நிராகரித்ததைப் பெரிய புத்திசாலித்தனமாக நினைத்துக் கொண்டிருந்திருக்கலாம். ஆனால் இப்போதாவது அவள் அது எத்தகைய தவறு என்பதை உணர்ந்து கொண்டிருப்பாள். போகட்டும்." என்ற இந்த ஒரு நினைப்பை மட்டும் என்னால் துறக்கமுடியவில்லை. அது தப்பாக இருக்கலாம். பிறருடைய கண்ணீரைப் பார்த்து நாம் சிரிப்பதைப் பெருந்தன்மையாகக் கருத முடியாது. இருந்தாலும் அந்த நினைவை என்னால் துறக்கமுடியவில்லை. அதுதான் எனக்குப் பெரிய ஆறுதலாக இருக்கிறது."

நன்றாக இருட்டிவிட்டது. ஊரெல்லாம் விளக்கேற்றியாயிற்று. கீழே மின்மினிப்பூச்சி போல விளக்குகள் பளிச் பளிச்சென்று மின்னின. ஆறரை மணிக்கு ஸ்ரீ ரங்கத்துக்குப் போகும் வண்டி டவுன் ஸ்டேஷனுக்குள் நுழைந்தது. மரவட்டை நகருவதுபோலத் தெரிந்தது.

"நான் போய் வருகிறேன்" என்று சீதாராமையர் போய்விட்டார். நான் எழுந்து நின்று அவருக்கு விடை கொடுத்தனுப்பினேன். ஆனால் நான் அவருடன் போகவில்லை. என் மனம் அமைதியை நாடியது. அங்கேயே உட்கார்ந்துகொண்டு கோயில் உச்சியைப் பார்த்து வெறித்துக் கொண்டிருந்தேன்.

சீதாராமையர் சொன்ன மேற்படி ஆண்டார் தெரு 35ஆம் நம்பர் வீடு அடியேனுடைய வீடு தான். அவர் வர்ணித்த அழகி பாரகிதியைக் கைபிடிக்கும் பேறுபெற்ற அவள் அருமை அத்தானும் நான்தான். ஆனால் நான் தாலூகாபீஸ் தலைமைக் குமாஸ்தா ராகவன். அவர் தேடிவந்தது நாடக சபையின் காரியதரிசி டி. என். சுந்தரராகவனை. அவர் என் வீட்டில் கீழ்பாகத்தில் குடியிருக்கிறார். நான் மாடியில் குடியிருக்கிறேன். அவர் சந்தித்தது என் அருமை மனைவியைத் தான்.

ஆனால் இரண்டு காரணங்களுக்காக இந்த உண்மையை அவரிடம் நான் சொல்லவில்லை. முதலாவதாக அந்த வயது முதிர்ந்த மனிதர் இவ்வளவு நாட்களுக்குப் பிறகு அடைந்திருப்பதாக எண்ணிக்கொண்டிருக்கும் ஒரு மன நிம்மதியை, ஒரு வினோதமான ஆறுதலை—மனச் சமாதானத்தை நான் ஏன் கெடுக்கவேண்டும்? பாகீரதி அவரை விட அந்தஸ்தில் மட்டுமல்ல, பண்பிலும் குணத்திலும் பன்மடங்கு தாழ்ந்த ஒருவனையே தவறாக வரித்துவிட்டாள் என்கிற எண்ணம், அவருக்கு ஒருவேளை ஒரு வினோதமான மனச்சாந்தியைக் கொடுக்கலாம். அதை நான் கெடுப்பானேன்?

இரண்டாவது காரணம் நான் முதலில் சொன்னதுதான். நான் ஒரு தாலூகாபீஸ் தலைமைக் குமாஸ்தா. அவர் ஒரு ரிடையர்ட் ஸப்ஜட்ஜ். என்னைவிட அவர் பன்மடங்கு பெரிய அந்தஸ்தில் இருப்பவர். ஏதோ என் பூர்வஜன்ம புண்யத்தினால் அவர் என்னிடம் அன்பும் மரியாதையும் காட்டிவருகிறார். பாகிரதியை அடைந்த பாக்கியவான் அடியேன் என்பதை அறிந்தால் அந்த நிலை மாறிவிடலாம். விபரீதமாகத் திரும்பிவிடவும்கூடும். நான் முதலிலேயே சொன்னேன். பெரிய மனிதர்கள்: நாம் வினயமாக இருந்து அவர்களும் பெருந்தன்மையாக இருக்கிறவரையில் சரிதான்; ஒரு தடவை தகராறு வந்துசேர்ந்தால் அனுபவிக்கிறது யார் ஸ்வாமி?

தாயுமானசுவாமிகோயில் மணி கணீர் கணீர் என்று அடித்தது. நான் மெதுவாக வீட்டுக்கு வந்து சேர்ந்தேன். வாசலில் பாகிரதியும் பையன் ராஜாவும் என்னை வரவேற்றார்கள். அவள் கையிலிருந்த கல்யாணி என்னைப்பார்த்துச் சிரித்தாள். சிரித்துக்கொண்டே குழந்தையை வாங்கிக்கொண்டேன்.

மனதிற்குள் தாயுமானசுவாமியுடன் சீதாராமையருக்கும் சேர்த்து ஒரு பெரிய கும்பிடுபோட்டேன். அவர்களுடைய அருளாலல்லவா எனக்கு என் அருமைப் பாகிரதியும் இத்தகைய மகிழ்ச்சி நிறைந்த குடும்ப வாழ்க்கையும் கிடைத்தது?

காவேரி சந்தா விகிதம்

	இலங்கை, பர்மா & உள்நாடு			மலேயா முதலிய வெளிநாடுகளுக்கு		
	ரு.	அ.	பை.	ரு.	அ.	பை.
ஒரு வருஷம்	6	0	0	7	8	0
அரை வருஷம்	3	0	0	3	12	0
தனிப் பிரதி ஒன்றுக்கு	0	8	0	0	10	0

ஏஜன்ஸி இல்லாத இடங்களில் டிபாசிட் கட்டி நாணயமும் பொறுப்புமுள்ள ஏஜண்டுகள் தேவை.

ஸர்குலேஷன் மானேஜர் "காவேரி" கும்பகோணம்.

குடும்பத்தினர் எல்லோரும் மசாலா திணித்த
கத்தரிக்காய்களை விரும்புகிறார்கள் !
டால்டாவில்
தயாரித்தவை
நீங்கள் சூடாகவோ குளிர்ந்தோ உட்கொள்ளும் எல்லா தித்திப்பு பதார்த்தங்களுடையவும், தின்பண்டங்களுடையவும் ருசியை டால்டா நிச்சயமாக மேம்படுத்துகிறது. சுத்தமானதும், ஊட்டமளிப்பதுமான இது எல்லா வித சமையல்களுக்கும் உகந்தது. இது சீல் செய்த டின்களில் விற்கப்படுவதால், உங்களிடம் புதியதாகவும் துப்புரவாகவும் வந்து சேருகிறது.
DALDA
HYDROGENATED GROUNDNUT AND TIL OIL
டால்டா
2 டேபில் ஸ்பூன் கொத்துமல்லி விதை, 1 டேபில் ஸ்பூன் உளுந்து, மிளகாய், உப்பு, மஞ்சள், சிறிய துண்டு இஞ்சி, பூண்டு, ஒரு பெரிய வெங்காயம், 1/2 டேபில் ஸ்பூன் கெட்டியான புளியஞ்சாறு இவைகளை எல்லாம் சேர்த்து அரைத்து மசாலா செய்து கொள்ளவும். கத்தரிக்காயைப் பிளந்து அதனுட் மசாலாவை திணிக்கவும். நன்றாக பக்குவமாகும்வரை டால்டாவில் பொரித்தெடுக்கவும்.
இதை தவற விடாதீர்கள் !
புதிய டால்டா சமையல் புத்தகம் — ஆங்கிலத்தில் -படங்கள் கொண்டது- ஆர்ட் காகிதம்-80 பக்கங்கள்-300 பண்டங்கள்—ஆரோக்கியம், சுகாதாரம், சமையலறை இவைகளைப் பற்றிய குறிப்புகள்-விலை ரூபாய் 1/-தான்-தபால் செலவு 8 அணா தனி.
தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்
தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1
சமநிலை உணவில் உங்களுக்குத் தேவையான கொழுப்பை அளிக்கிறது.
HVM. 170-50 TM

துணிகளை அடித்துத்துவைக்காமலே வெண்மையாகவும் பிரகாசமாகவும் சலவை செய்கிறது!

S. 181-50 TM

அகலாத இருள்

ரா. பாலாஜி

முடிவேயில்லாத, "காலம்" ஓர் நிரந்தர சிறைச் சாலை. அதில் A வகுப்புக் கைதியாக, B வகுப்புக் கைதியாக, C வகுப்புக் கைதியாக ஏன், கடுங்காவல் தண்டனை பெற்றுக்கூட மனிதர்கள் "உலக விடுதலை" அடைந்துகொண்டே இருக்கிறார்கள்.

காலச் சிறைக்கு, சமுதாய மதில்கள்மட்டுமல்ல, பாசக் கம்பிகள்—அன்புக் கம்பிகள்—ஒழுக்கக் கம்பிகள்—கடமைக் கம்பிகளும் நிலையாக நிலைத்துள்ளன.

"சட்டம்—சூழ்நிலை" எதிர்பாராத முறையில் காதலர்களாகிவிடுகின்றன! இம்மாதிரி சமயங்களில், "நீதி" தனது வஞ்சகத்தை நிரபராதிகள்மீது வஞ்சம் தீர்த்துக்கொள்ளத் தயங்குவதே இல்லை.

ஒன்று...இரண்டு...மூன்று...நான்காக ஓடிக்கொண்டிருந்த வினாடிகள் நிமிடங்களாக மாறிக்கொண்டிருந்தன. மூடு பனியில் சிக்கிக்கொண்ட குழந்தையைப்போல் மேலெழுந்த நினைவுகளுக்கு முடிவு காண முடியாமல் 144 ஆம் எண்ணுள்ள கைதி பெருமூச்சு விட்டான்.

மனிதன், தனது குற்றத்தைப் புரிந்துகொண்டு வருந்தத் தொடங்கிவிட்டால்; சட்டம் விதிக்கும் தண்டனையைவிடப் பன் மடங்கு உள்ளம் விதித்து விடும் என்று கூறுவது போலிருந்தது 144 ஆம் எண்ணுள்ள கைதி சிந்திய "கண்ணீர் துளிகள்."

"மணி பனிரெண்டாவுது......இன்னுமா" என்று சிந்தனை ஓவியத்தைக் கலைத்து எழுந்த வார்டனின் அன்பு கலந்த எச்சரிக்கை வானத்தை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்த 144 ஆம் நம்பர் கைதியை முடங்கிக்கொள்ளச் செய்துவிட்டது.

அடுத்த பகுதியில், புகைந்து—தேய்ந்து—சுருணையாகிவிடப்போகும் சில பீடித் துண்டுகளுக்காக, வருடத்திற்கு ஒரு முறையோ, இரு முறையோ பண்டிகைகளை முன்னிட்டு நாளை பெறும் இனிப்புப் பலகாரங்களுக்கும், வார்டன்களுக்கும் கைதிகளுக்கும் வியாபார ஒப்பந்தம் நடந்து கொண்டிருந்தது.

எந்தப் பிச்சைக்கார, குருட்டுக் கிழமே காலச் சிறையின்; கடுங்காவல் தண்டனையிலிருந்து, உலக விடுதலை பெற நம்பிக்கையை நாட்களை—வார—மாத அளவில் வைத்திருந்தது. சினிமா நடிகையின், கார் விடும் புதுப் பழக்கம் குருட்டுக் கிழத்தைப் படுகாய மடையச் செய்து விட்டது. எந்த நேரமும், அரை குறையாய், காய்ந்து கொண்டிருக்கும் வயிற்றைப் பிரதான மாகக் கொண்டு விட்ட "அந்த டிரைவரை" குற்றவாளியாக்கி விட்டனர். நாளை அவனுக்கு, சட்டத்தின் தாற்காலிகச் சிறையிலிருந்து விடுதலை.

தண்டனை அடைந்த, பல வருடங்களை குழந்தையின் நினைப்பிலேயே கழித்து விட்டான். எதை, நினைத்துக் கொண்டு நாளை விடுதலை அடை

யப்போகும் "நிரபராதி கைதி" ஆழ்ந்த துக்கத்தில் சிரித்தானே! அதைக் கவனித்துக் கொண்டிருந்த, 144ஆம் நம்பர் கைதியின் உள்ளம் கடந்த கால நிகழ்ச்சிகளுக்குத் தாவி விட்டது. மீண்டும், வானத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டு கம்பிகளைப் பிடித்த வண்ணம் நின்று விட்டான். உதடுகள் முணு முணுத்தன.

"அப்பா! அப்பா!! ஏம் அப்பா, மாடுகள் இருக்கும்போது அவ்வளவு கஷ்டத்தோடே ஆம்பிளேங்க இழுத்துக்கிட்டு போருங்க, குருட்டுக் கிழவனல்ல, பின்னலே புடிச்சி தள்ளுறான். அவுங்க மாடு எங்கப்பா"

பார வண்டியை, குருடனும் மற்றொருவனும் மிகச் சிரமப் பட்டு இழுத்துச் சென்றதைச் சுட்டிக் காட்டி எனது ஐந்து வயதுச் சிறுமி கேட்ட கேள்வியைக் கேட்டு, பதில் சொல்ல முடியாது திண்டாடினேன். விசித்திரமும், விபரீதமுமாய் அமைந்திருக்கும் சமுதாய அமைப்பு முறையை; புரிந்து கொள்ள முடியாத சிறுமிக்கு எந்த முறையில் விளக்குவது என்றே புரிய வில்லை. நான், அதட்டி மறுத்து விட்டேன். அவள் தாய், கொஞ்சி மறுத்து விட்டாள். விளையாட்டுக் குழந்தை, அந்த எண்ணத்தையே மறந்துவிட்டது.

ஐந்து வயதுச் சிறுமி, ரோகிணிக்குத் தெரியாது மனிதன் மாடாக மாறுவது. அந்த நிலையை, உண்டாக்குபவர்களுக்கும்; ஏற்றுக் கொண்டிருப்பவர்களுக்கும் தெரிந்துதானே இருக்கவேண்டும்?

விடிவெள்ளிகளைத் தேடி அலைந்து செல்லும் மனித மாடுகளின் வாழ்வில்; வண்டியின் இருசு கழன்று பேராபத்து ஏற்படுவதைப்போல் சில நிகழ்ச்சி நிகழ்ந்து விடுகின்றன. அந்த நிமிடமே, அகலாத இருளும் கப்பிக் கொள்ளுவது உண்டு.

மனிதனை, மகிழ்விக்க வரும் பண்டிகைகள், மனிதர்களின் சூழ்நிலையைக் குறித்துக் கவலைப்படுவதே இல்லை. எனது மகள் ரோகிணி, தீபாவளிக்கு மூன்று வாரங்களுக்கு முன்பிருந்தே தேவைப் பட்டியலை அறிவித்துக்கொண்டிருந்தாள். மாதக் கடைசியில், வரும் தீபாவளி ஏற்படுத்திவைக்கும் செலவுகளும்—என் சம்பள நாளும் வட துருவமும், தென் துருவமுமாக அமைவது இது முதல் முறையல்ல.

ரூபாய்க்கு, இரண்டணு வட்டி விகிதத்தில் அந்த வார உணவுப் பொருள்களுக்குத் தேவையான பணத்தை மனைவி சேகரித்துவிட்டாள். பட்டாசுக் கட்டுகள் — புதிய ஆடைகளில்தானே ரோகிணிக்குத் தீபாவளி!

ரோகிணி, எதிர்பார்த்துக்கொண்டிருந்த அந்தத் தீபாவளி வந்துவிட்டது. மருமகனுக வரப்போகும், கல்லூரி மாணவனைப் பிரமாதமாக வரவேற்பதில் ஈடுபட்டிருக்கும், முதலாளி எங்களுக்கும் தீபாவளி உண்டென்பதை மறந்துவிட்டாரே! அவர் மறதிக்குப் பல வாரங்கள் தள்ளியிருக்கும் "அந்தச் சம்பள நாளும்" காரணமாய் இருக்கும்.

மூன்ருவது வீட்டில், புதியதாய்க் குடிவந்திருக்கும் நர்ஸ் ரோகிணியுடன் சதாகாலம் கொஞ்சிக் குலவிக்கொண்டிருப்பாள். பாழும் கக்குவான், இருமல் வந்தபிறகு நர்ஸ் ரோகிணியை அருகில் நெருங்க விடுவதில்லையாம்! ரோகிணிமீது இருக்கும் அன்பாலாவது, பட்டாசுக்கவலையைத் தீர்த்து வைப்பாள் என்று நம்பியிருந்தேன். அந்த நம்பிக்கையும், சில நாட்களாக மறைந்தேவிட்டது.

அங்கே, இங்கே ஓயாது வெடிக்கும் பட்டாசுகளால் குழந்தை ரோகிணியின் உள்ளத்தில் "மகிழ்ச்சியும், சஞ்சலமும்" கண்ணுமூச்சி விளையாடி இருக்கவேண்டும்.

மாப்பிள்ளையாக, வரப்போகும் அந்தக் கல்லூரி மாணவனைப் பலருக்கு அறிமுகப்படுத்திவைக்க வேண்டுமாம். டிரைவராகிய என்னை, உணவருந்திவிட்டு உடனே வரும்படி கூறினர். வேகமாக நடந்துவந்த நான், வாயிலை அடைந்ததும் "பட்டாசும் புதிய ஆடையும்" அவசியம் வாங்கிவரும்படி கூறிய ரோகிணியை நினைத்துக்கொண்டேன்.

வாயிலைக் கடந்து. வீட்டினுள் நுழைந்தவுடன் என் வரவை ஆவலுடன் வரவேற்ற ரோகிணியின் முகத்தில் ஏமாற்றத்தின் சாயல்கள் படர்ந்தன.

வெறும் கைகளைக் கண்டவுடன் இன்னிக்குத் தானே அப்பா தீபாவளி? என்று கண்ணைக் கசக்கி என் உள்ளத்தைக் குமுறச் செய்தாள்.

ரோகிணியின், சில விநாடி அழுகை மனைவியை ஆத்திர மூட்டி விட்டது. "எங்க வயித்திலே ஏன் பொறந்தே..........." என்று ரோகிணியைக் கடு கடுத்துக் கொண்டே உணவு படைக்க ஆரம்பித்தாள். "சோறு வேண்டாம்" என்று தட்டை வீசி யெறிந்த ரோகிணியின் முரட்டுச் செய்கை என்னை மிருகமாக்கி விட்டது.

அடுத்த விநாடியே, ரோகிணியின் பிஞ்சுக் கன்னங்களில் பல முறை பலமாக அறைந்து விட்டேன். வேதனைதாங்க முடியாமலும், அழ முடியாமலும் துடி துடித்துப் போனாள் ரோகிணி. மறு விநாடி, தோன்றிய பலமான கக்குவான் இருமலால், சுருண்டு மயக்க மடைந்து விட்டாள்.

திரும்பி வந்த மனைவி, "குழந்தையைக் கொன்று புட்டீங்களே" என்று திடுக்கிட்டுக் கூறிய பொழுது கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டிருந்தேன். சிந்திக்கத் தெரிந்து, அறிவுள்ள மனிதனுக மாறிய முதல் எத்தனையோ இக்கட்டான சூழ்நிலையில்; 'கலங்கித் தவித்திருக்கிறேன்—நொந்து கொண்டிருக்கிறேன் — தற்கொலை செய்து கொள்ளக்கூட முடிவு செய்து செய்கையில் முனைந்திருக்கிறேன்; அப்பொழுது எல்லாம் "சிந்தியிராத கண்ணீர்" எங்கள் ரோகிணி

காலச் சிறையிலிருந்து உலக விடுதலை அடைந்த பொழுது சிந்தினேன். அன்று, இருப்பவர்களுக்கெல்லாம் தீபாவளி! அன்று முதல் ரோகிணியின் மூலம் என் வாழ்வில் "அகலாத இருள்" புகுந்து கண்ணீர் வடிக்கும் எலும்புருவமாக்கி விட்டது.

பெற்ற குழந்தையை, இழந்த என் மனைவி சாட்சிக் கூண்டிலே நிறுத்தப் பட்டாள். வழக்கறிஞர்கள் எதை எதையோ விரசமாகக் கேட்டார்கள். அவள் அளித்த ஒரே பதில் "அடிச்ச கொஞ்ச நேரத்திற்கு எல்லாம் பலமா கக்குவான் இருமல் வந்திச்சி........." என்று வார்த்தைகளைத் தடுமாறி, ரோகிணி பிணமாய்க் கிடந்ததாய்க் கூறினாள்.

என் வாழ்வில் தோன்றிய ஒரே விடிவெள்ளி என் மனைவி, வெறி உணர்ச்சியால் தூண்டப்படும் விலங்கினங்கள் தாய்மைக்காகப் போராடும் பொழுது, சிந்திக்க—எண்ண—தெரிந்த மனைவியைத் தாய்மை என்ன பாடுபடுத்தியிருக்கும்?

நான் கொலைகாரன்! சட்டம் எனக்குத் தூக்குத் தண்டனை அளித்து, காலச் சிறையிலிருந்து "உலக விடுதலை" அளித்துவிடும். என், வாழ்வின் விடிவெள்ளியாகிய மனைவிக்காகத்தான் வருந்துகிறேன்—இரத்தக் கண்ணீர் வடிக்கிறேன். பெற்ற குழந்தையைக் காப்பாற்ற வசதியில்லாது—வகையில்லாது சாகடித்தவன் என்ற "முன்னுரை கலந்த மதிப்புரையுடன்" தினம், தினம் செத்துக் கொண்டிருப்பதைக் காட்டிலும் அந்த அமைதி தரும் சாவை விரும்பினேன்.

மீண்டும், காலச் சிறையில் கடுங்காவல் தண்டனை பெற, "சட்டம்" அனுமதிக்கிறதாமே. நீண்டதொரு விளக்கம் தந்து, பத்து வருடங்கள் கடுங்காவல் தண்டனை என்று நீதிபதி எழுந்தார். என் மனைவியின், அலறலுடன் எழுந்த அழுகை நீதி மன்றத்தில் சில வினாடிகள்தான் என்னால் கேட்க முடிந்தது.

வினாடி—நிமிடம்—மணி—நாள்—வாரம்—மாதம்—வருடம்—இரண்டு மூன்று—நான்கு ஐந்தாண்டு கடுங்காவல் தண்டனையைக் கழித்துவிட்டேன். வேகமாக வந்துசெல்லும், அந்த ஐந்தாண்டையும் கழித்துவிட்டால், மாடுகள் இருக்கும் பொழுது, மனிதர்கள் அவதிப்பட்டு இழுக்கும் காலச் சிறைக்குச் செல்லவேண்டும், காப்பாற்ற வகையில்லாது, 'குழந்தையைக் கொன்ற எரிமலையாக'

வாழ வேண்டும். நான் வாழவே விரும்பவில்லை, "சட்டம்" வாழ உரிமை யளித்து வாழ வற்புறுத்துகிறதே! நான் செத்துக் கொண்டே வாழ மாட்டேன்! வாழமாட்டேன்!! குழந்தையைக் காப்பாற்ற வழியில்லாது கொன்ற பாவியாய், எரிமலையாய் வாழமாட்டேன். 144ஆம் நம்பர் கைதிகளின் உதடுகள் முணு முணுத்து முடிவாக ஓய்ந்து விட்டன.

முதல் வார்டன், "பொங்கலும் நல்ல நாளும் 144ஆம் நம்பர் கைதி நின்ன படியே உயிரைவிட்டுத் தொலைச்சிருக்கானே. மாரடைச்சு தொலைச்சுதோ" என்று கூறியது மற்றொரு மூலையில், அவிந்துபோகும் நிலையிலிருந்த பீடித் துண்டைப் பற்றவைத்துவிட்ட தலைமை வார்டனின் காதுகளில் விழவேயில்லை.

இண்டோ கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

மதராஸ்

ஸர். A. ராமஸ்வாமி முதலியார்,
K. C. S. I., D. C. L. (Oxon)
சேர்மன்

சகலவிதமான பாங்க் அலுவல்களும் நடத்தப்படும்

சென்னையிலுள்ள ஆபீஸ்கள் :

நேதாஜி ஸுபாஷ் சந்திரபோஸ் ரோட், மயிலாப்பூர், திருவல்லிக்கேணி, தியாகராயநகர் & பெரியமெட்.

தென்னிந்தியாவிலுள்ள எல்லா முக்கிய நகரங்களிலும் கிளை ஆபீஸ்கள் உள்ளன.



நீதி நிலைத்தது

முகவை **ஜி. எஸ். மணியம்** பி. ஏ.

எமிலி ஜோலாவும் பால்செஸானேயும் நண்பர்கள். பிழைப்புக் காணலாமெனும் திடமான நம்பிக்கையுடன் அவர்கள் பாரிஸ் நகருக்கு வந்தார்கள். ஒரு சிறு அறையை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு, அதிலிருந்தவாறு பலவித திட்டமிடுவார்கள். செஸானே ஒரு சிறந்த ஓவியன். அவன் கூறுவான், அவன் ஓவியத்திறமையால் இவ்வுலகையே ஆட்ட முடியுமென. ஜோலா தன் பேனா இந்த அகலத்தை ஆளப் போகும் நாள் அதிகம் தொலைவிலில்லை என்பான். நாளடைவில் கையிலிருந்த பணம் கரைந்தது. ஆகவே அவர்களின் கனவும் கலைந்தது. திட்டங்களும் தரை மட்டமாயின. ஆக, ஓட்டைக் குடிலிலே வறுமையால் அவர்கள் வாடலானார்கள். ஆனாலும் அவர்கள் வேலை தேடுவதில் சிறிதும் களைப்படைவதில்லை. சில காலம் கழித்து, எமிலி ஜோலா வேலைக்கமர்ந்தான். ஊதியம் சொற்பமேயென்றாலும், அது வறுமையின் கொடுமைக்கு ஓரளவு மாற்று.

ஜோலா உலகின் தன்மையை உற்றுணர ஆரம்பித்தான், தன்னைச் சுற்றிலும் குழுமியிருக்கும் மனிதர்களின் செயல்களைத் துருவி ஆராய்ந்தான். வெள்ளிடை மலையென உண்மை புலப்பட்டது, சமுதாயத்தின் அக்கிரமமான ஆணவச் செயல்களைக் கண்டபொழுது, அவனது இதயம் குமுறியது. பாரிஸ் நகரத்துச் சேரிகளிலே, எமிலி ஜோலா இரவின் அந்தகாரத்திலே ஒரு பேயென உலாவுவான். இடிந்த மனை, துர்நாற்றம் நிறைந்த வீதிகளிலே எண்ணிறந்த மக்கள் சொல்லொணாத் துயரமடைவதைக் கண்டு கண்ணீர் விடுவான். ஏழையாகப் பிறந்த காரணத்தால் ஏழையின் துயரைப் பூரணமாக அவன் அறிய முடிந்தது. பஞ்சை மக்களின் துயரைக் கண்டு கண்ணீர் விடுவதைவிட அவன் வேறு என்ன செய்யமுடியும்?

ஜோலா தன்னுடைய ஓய்வு நேரத்தில் பத்திரிகைகளுக்குச் சிறு சிறு கட்டுரைகளை எழுதுவான். அவனுடைய 'கீழ்த்தரமான' கட்டுரைகள் தன்னுடைய புத்தகக் கடையின் பெயரைப் பாழ்படுத்திவிடுமோவென ஜோலாவின் எஜமானன் பயந்தான்.

சீமான்கள், அரசியல் வாதிகள், கொடுங்கோலர்கள், இவர்களை வன்மையாகக் கண்டித்து ஜோலா எழுதினான். ஆகவே ஜோலா வேலையிலிருந்து நீக்கப் பட்டான். உண்மை நிறைந்த ஜோலாவின் எழுத்து அவனது வேலைக்கு உலை வைத்தது. ஆகவே ஜோலா தன் பேனாவை நம்பி வாழ வேண்டியதாயிற்று. ஆனால் அவன் மன உறுதியுடனிருந்தான். துயர் கண்டு மனங் குலைவதற்கு அவன் ஒரு கோழையல்லவே? ஜோலா இடைவிடாது எழுதினான்; எழுதிக் கொண்டே இருந்தான். அவனது சலியா உழைப்பு வீண் போகவில்லை; அதிர்ஷ்ட தேவதையின் அனுக்கிரகம் அவனுக்குக் கிட்டிற்று. அவனுடைய நண்பரொருவர் ஜோலாவின் கதைகள், கட்டுரைகள் இவைகளைத் தொகுத்து வெளியிட முன் வந்தார். சாதாரண ஆரம்ப எழுத்தாளனான ஜோலா சிறந்த இலக்கிய மேதையாக மாற அதிக காலம் பிடிக்கவில்லை, ஜோலா எண்ணற்ற அறிவுக் கட்டுரைகளை வரைந்தான். புற்றிலிருந்து வெளிக்கிளம்பும் ஈசல்களைப் போல அவன் பல கதைகளை எழுதினான். அக்கிரமங்களை அப்பட்டமாக எடுத்துக்காட்டும் சமூகத்தின் கொடூரச் செயல்களை வன்மையாகக் கண்டிக்கும் அவனது புத்தகங்களுக்கு முதலில் மதிப்பு இருக்கவில்லை. உழைத்து உழைத்து உருக்குலையும்

பாட்டாளி, மதவெறி கொண்டலையும் குருமார்கள், வஞ்சக நெஞ்சத்தவர், வாழ வழியற்ற வறியர்கள், சுய நலக்காரர்கள், பசிக் கொடுமையால் விபசாரிகளானவர்கள். ஜோலாவின், எழுத்து முனைக்கு இலக்கானவர்கள். 'ஒன்றன்பின் ஒன்ருக அவனது நாவல்கள் வெளிவந்தன. நாள் ஆக ஆக, அவனுடைய புகழும் வளர்ந்தது.

அன்ரொரு நாள் எமிலிஜோலாவும், அவனது நண்பன் செஸானேயும் சாமானியமானதொரு உணவு விடுதியில் உணவருந்திக்கொண்டிருந்தனர். திடீரென உணவு விடுதிக்கு வெளியில் கூக்குரல் கேட்கவும் அவர்களிருவரும் சாளரத்தின் ஓரம் சென்று தெருவைப் பார்த்தார்கள். போலீஸ்காரர்கள் பெண்களை விரட்டிய காரணத்தால், பெண்கள் நாலா பக்கங்களிலும் சிதறி ஓடினர்; இந்த அக்கிரமம் விபசார ஒழிப்பு என்ற பெயரால் நடந்தது. ஜோலாவும் நண்பனுமிருந்த உணவு விடுதிக்குள் ஒரு பெண் ஓடிவந்து நுழைந்தாள். அவள் ஒரு தூணின் பின்னல் மறைந்து கொண்டாள். அவளுடைய மனதில் திகிலும் பயமும் பிரதிபலித்தன.

அவள் ஒரு விபசாரி. இது உண்மை. ஆனல் அவளது வதனத்தில் அழகு மிளிரத்தான் செய்தது. வறுமையின் வடு அவளது வதனத்தில் காணப்பட்டாலும் பெண்மையின் சோபை ஒளிரத்தான் செய்தது. போலீஸார் அந்த ஏழைப் பெண்ணை விபசாரியென்ற காரணத்தால் அதட்டி மிரட்டிய நேரத்தில் ஜோலா விரைந்து சென்று அவள் தன்னைச் சார்ந்தவள் எனக் கூறின உடன் போலீஸார் அவளை விட்டுச் சென்றனர். ஜோலா அவளைத் தன் அருகே அமரச்செய்தான். ஓவியன் செஸானே அவளை ஓவியத்தில் திட்ட ஆரம்பித்தான். ஜோலா சமூகத்தின் பாழ்பட்ட இனத்தைச் சேர்ந்த அந்த ஏழைப் பெண்ணின் சோகக் கதையைக் கேட்கலானுன். அவன் அவளை எத்தனையோ கேள்விகள் கேட்டான். அவளும் தகுந்த வாறு விடையளித்தாள்.

"ஏன் என்னை இப்படிக் கேள்விகள் கேட்கிறீர்கள்?"

"கேட்க எனக்கு உரிமை யுண்டு. காரணம், நானும் உன்னைப் போலவே ஓர் ஏழை. ஏழையின் கதையைக் கேட்க ஏழையைத் தவிர யார் விரும்புவர்?"

இது அவளுடைய வரலாறு. இதை அவளே கூறினள். அவள் ஒரு கிராமத்துப் பெண். வறுமையின் கோரத்தால் பாரிஸ் நகருக்குப் பஞ்சம் பிழைக்க அவள் வந்த பொழுது, அவளுக்கு வயது பதினேழு. இளமையும் அழகும் அவளை அள்ளி அணைத்திருந்தன. பசி வாதனை, ஏழ்மையின் சோதனை இவை அவளை வாட்டின. ஆகவே, அவள் தன்னை விலை கூறினள். மனிதனின் மிருக இச்சைக்குத் தன்னைத் தத்தம் செய்தாள்.

அவளுக்குக் கிடைத்த ஊதியம் ஒரு சில காசு. அதோடு அனுபவித்தவர்களின் நோயும் அவளுக்குப் பரிசெனக் கிட்டியது. பட்டினியும் பசியும் அந்தப் பராரியை, அந்தப் பஞ்சை மகளை, விபசாரியாக்கின. தவறு அவளுடையதா? இல்லை. ஆனல், இன்று அவள் போலீஸாரால் துரத்தியடிக்கப்படும் ஓர் அனாதை. வாழ வகை சொல்லாத சட்டம், சமூகம் இன்று வீழ்ந்துபட்ட மக்களை, சட்டத்தின் பெயரால், நீதியின் பெயரால், தண்டிக்கப் பார்க்கின்றன. இது நியாயமா? தன்னுடைய கடந்து போன நாட்களைப்பற்றி அவள் கூறிய பொழுது அவள் குரல் குழைந்தது, கண்கள் குளமாயின. தன் சோகத்தை வார்த்தைகளின் அளவிலே வாரி வழங்கினுள். வழுக்கி விழுந்த அவ் வனிதை. வறுமைத் துயர் போக்க விபசாரியான அந்த ஏழை மகளின் கதையை உற்றுக் கேட்டான் ஜோலா. நீறு பூத்த நெருப்பாக இருந்த தன் மனத் துயரை இன்று பிறரிடத்தில் கூறியதால் அவளுடைய இதயத்தில் ஒரு அமைதி, இன்பம். நேரம் கடந்தது. உணவு விடுதியைக் கடைசியாக விட்டுச் சென்றவர்கள் ஜோலா, செஸானே, அந்தப் பெண்.

ஜோலாவும் அவனது நண்பன் செஸானேயும் அந்தப்பெண்ணுடன் சென்றூர்கள். மோசமான தெரு வழியே அவர்கள் சென்றூர்கள். இராக்கிக் காக மோனத் தவம் புரியும் பெண்கள், காசிற்குக் கலை விற்கும் கணிகை மகளிர், இவர்களின் எக்காளச் சிரிப்பும், ஏளனப் பேச்சும் அத்தெருவிலே நிறைந்து வழிந்தன. கடைசியில் ஜோலா, செஸானே அந்தப் பெண் இம் மூவரும் ஓர் அறையினுள்ளே நுழைந்தனர். அதுதான் அந்தப் பெண்ணினுடைய அறை, உறைவிடம்.

அலங்கோலமான அவ்வறையில் பல கடிதக் கட்டுகள், சில புகைப் படங்கள், புத்தகங்கள் முதலியன சிதறிக் கிடந்தன. அவற்றை ஜோலா புரட்டினன். ஒரு புகைப்படம். அந்தப் பெண்ணினுடையது

அதன் பிறகு "நானு" என எழுதப்பட்டிருந்தது. அந்தப் பெண்ணினுடைய பெயர் "நானு" என்பதைக் கேட்டு ஊர்ஜிதம் செய்துகொண்டான் ஜோலா. குழந்தைகள் அணியும் சில ஆடைகள் அங்கே கிடந்தன. அவளுக்கு ஒரு குழந்தை பிறந்தது. ஆனால் அது இறந்துவிட்டது. இதைக் கூறியபோது அவளது கண்களிலே நீர் மல்கியது. மனங் கொதித்து வாய் விட்டு அழுதாள் அப்பேதை. ஜோலாவின் இதயம் குமுறியது. வஞ்சகச் சமுதாயத்தின் நியாயமற்ற போக்கு, வாழ வழி சொல்லாவிட்டாலும் வாழ்வதைக் குலைக்கும் இந்த உலகத்தின் கயமைத் தன்மை, அவனை உலுக்கியது. அவன் அவளைத் தேற்றினான். பின்பு அவளிடமிருந்து அவனும், செஸானேயும் விடை பெற்றுத் திரும்பினார்கள்

ஜோலாவின் மனத்திலே ஒரு ஆவேசப் புயல் சிறியடித்தது. உலகிலே நடக்கும், அன்றாட வாழ்க்கையிலே நாம் கண்ணுறும் சமூகத்தின் கோரச் செயல்களைத் தன் பேனாவினால் சித்திரிக்க விரும்பினான் ஜோலா. ஆகவே ஜோலா எழுதலானான்.

'நானு' என்ற அந்த நங்கையின் பெயரால் ஒரு பெரிய நாவல் எழுதினான். 'நானு' என்ற ஜோலாவின் கதை இந்த உலகையே ஒரு குலுக் குக் குலுக்கியது.

"நானு" இதைப் பாரிஸிலே, பிரான்ஸ் நாட்டின் மூலை முடுக்குகளிலே ஒவ்வொருவரும் வாங்கிப் படித்தார்கள். ஏழை, செல்வர், இளைஞர், முதியோர் யாவரும் விரும்பிப் படித்தனர், "நானுவை". காரணம், உலகை உள்ளது உள்ளபடியே கூறிய முதல் புத்தகம் "நானு". "நானு" நன்றாகச் செலவாகியது. ஜோலாவின் புகழும் ஓங்கியது. ஜோலாவின் எழுத்து வன்மை இலக்கியத்தில் ஓர் இடம்பெற்றது.

ஆனால், அந்தப் பெண்ணுக்கு, உண்மை நானுவுக்கு, ஜோலாவின் "நானு"வைப்பற்றி ஒன்றுமே தெரியாது. தெரிந்துகொள்ளவும் மார்க்கமில்லை. இலக்கியத்தைப்பற்றி ஒரு விபசாரி தெரிந்து கொள்ள வேண்டியது என்ன இருக்கிறது? அவள் வழக்கம்போல், தன் தியாக வாழ்வை, விபசாரத்தை நடத்தி வந்தாள். பசி கிள்ளும் வயிற்றிற்கு உணவு தர வேறு வழி?

அன்றொரு நாள் கதவு தட்டப்பட்டது. நானு கதவைத் திறந்தாள். ஆனால், எவரும் காணப்படவில்லை. கதவுப் பிடியிலே ஒரு மூட்டை தொங்கியது. அதை அவிழ்த்துப் பார்த்தாள். "நானு"வின் பிரதியொன்றும் பூக்கள், தின் பண்டங்கள் பணம் முதலியவை இருந்தன. ஆம். இது ஜோலாவின் பரிசு. இலக்கியப் பலகணியின் உச்சிக்குச் செல்ல வழி வகுத்த அவ் விபசாரிக்கு எழுத்தாளர் ஜோலாவின் சன்மானம் அது. இந்த நன்கொடையாளர் யாரென்பதைப் புரிந்து கொள்ள 'நானு'விற்கு அதிக நேரம் பிடிக்கவில்லை,

பிரான்ஸ் ஜெர்மனி யுத்த காலம். ஜெர்மானியரின் தலைமைப் படை அலுவலகத்திலே பணி புரிந்த பிரஞ்சு ஒற்ற னொருவன் கையில் ஒரு குறிப்புக் கிடைத்தது. அதை அவன் பிரான்ஸ் நாட்டுத் தலைமை ஒற்றருக்கு அனுப்பினான். அந்தக் குறிப்பிலே பிரான்ஸ் நாட்டின் படையமைப்பு, காவல் முதலியவற்றைப்பற்றி ரகசியங்கள் அடங்கியிருந்தன. ஒரு துரோகி இந்த ரகசியங்களை ஜெர்மனியருக்குத் தெரிவித்திருக்க வேண்டும். பிரஞ்சுப் படைத் தலைவர்கள் கூடி ஆராய்ந்தனர். படைத் தலைமையைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும் இந்த ரகசியம் தெரிந்திருந்தது. ஆகையால் படை தலைமையைச் சேர்ந்த யாரோ இந்தத் துரோகச் செயலை செய்திருக்க முடியும். யாராக இருக்க முடியும்? கடைசியில் "ஆல்பிரட் டிரைபஸ்" என்ற ராணுவத் தலைவனைக் குற்றம் சாட்டினர், அந்தப் படைக் குழுவினர். ஆனால் உண்மையான குற்றவாளி "எஸ்தர் ஹேஸி" என்பவனே. படைத் தலைமைக் குழுவினரின் செல்வாக்குப் பெற்ற காரணத்தால், எஸ்தர் ஹேஸி தப்பினான்; டிரைபஸ் குற்றம் சாற்றப்பட்டான்.

1895 ஆம் ஆண்டு இராணுவக் கோர்ட்டிலே டிரைபஸின் தேசத் துரோக வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. விசாரணை நடந்தது, பெயரளவில். முடிவில் டிரைபஸ் குற்றவாளி என முடிவு செய்யப்பட்டுத் தண்டிக்கப் பட்டான். இராணுவக் கோர்ட்டாரின் தண்டனையைப் பெற்ற உடன் டிரைபஸ் ஊர்வலமாக இழுத்துச் செல்லப் பட்டான். ஊர்வலம் ஓர் மைதானத்தில் சென்று முடிந்தது. அந்த மைதானத்தில் மக்களின் முன்பாக அவனுடைய இராணுவச் சின்னங்கள் பறிக்கப்பட்டன. அவனது இராணுவ உடை கிழித் தெறியப்பட்டது. ஆம்! டிரைபஸ் அவமானம் செய்யப்பட்டான். "நான் நிரபராதி", "நான் குற்றவாளி அல்ல" என்றது அவனுடைய குரல். "டிரைபஸ் ஒழிக" என்ற மக்களின் ஆரவாரத்திலே, ஆர்ப்பரிப்பிலே அமிழ்ந்துபோனது. அவன் டெவில்ஸ் என்ற தீவிற்கு அனுப்பப்பட்டான். பிரான்ஸ் நாட்டுப் பத்திரிகைகளும் "டிரபஸின்" தேசத் துரோகத்தைப்பற்றிப் பத்தி பத்தியாக வரைந்தன. பத்திரிகை உலகம் நீதிக்குச் செய்யும் மகத்தான சேவை இதுதானே?

பிரான்ஸ் நாட்டிலே பாரிஸ் நகரத்திலே நடந்த டிரைபஸின் அவமானச் சடங்கிற்கு, பிரான்ஸ் நாட்டு இலக்கிய மேதை அனதேல் பிரான்சு வந்திருந்தார். அவர் இதயம் குமுறிச் சொன்னார்: "டிரைபஸ் உண்மையிலேயே குற்றமற்றவனுயின் உலக வரலாற்றிலேயே மிகவும் கொடுந்தண்டனைக் குள்ளானவன் அவன்தான்" என்று. அந்த அவமானத் திருவிழாவிற்கு எமிலி ஜோலா வரவில்லை, ஆனால் அவர் அனைத்தையும் அறிவார். "நான் நிரபராதி" என்று டிரைபஸ் அலறுவது அவரது செவிகளிலே ஒலித்தது.

டிரைபஸ் தண்டிக்கப் பட்டதைக் கேட்டதும் அவர் மனம்நொந்து போனார். அவர் கோபாவேசத்துடன், "இது அநீதி. அந்த அநீதியை அழித்தாக வேண்டும். உண்மையை இந்த உலகறியச் செய்தாக வேண்டும்" என்று முழங்கினார். உண்மையை நிலை நாட்ட அவர் முயற்சி செய்யலானார்.

டிரைபஸின் நண்பர்களிடமிருந்து சில குறிப்புக்கள், உண்மை ஆதாரங்கள் ஜோலாவிற்குக் கிடைத்தன. அவற்றைத் துணைகொண்டுதான் அவர் டிரைபஸை மீட்க வேண்டும். அவர் தமக்குக் கிடைத்த குறிப்புத் தாட்களையும், ஆதாரக் கடிதங்களையும் தொகுத்தார். பல நாட்கள் இரவு பகலாக எழுதினார், எழுதிக் கொண்டே இருந்தார். டிரைபஸின் விடுதலைக்கு ஆகக் கூடியது அவரது பேனாவின் உண்மைச் சித்திரந் தானே? டிரைபஸின் விடுதலைக்காக அவர் எழுதினார் கடைசியில் ஜோலா ஒருவரால், அநீதிக்குச் சாவுமணி அடிக்க எழுந்த "நீதி" தயாரிக்கப் பட்டுவிட்டது. அவர் தம் நண்பர்களை 'அரோரி' பத்திரிகைக் கூடத்தில் கூடும்படி கேட்டுக் கொண்டார். 'அரோரி' பத்திரிகைக் கூடத்திற்குத் தாம் எழுதிய "நீதி"யுடன் நடந்து சென்றார். கசங்கிப்போன உடை, பரட்டைத் தலை, ஆவேச நடை, ஜோலாவைப் பார்த்த மக்களனைவரும் வியப்புற்றனர். எரிமலை வெடிக்க இருந்தது!

"அரோரி பத்திரிகைக் கூடத்திலே ஜோலாவின் நண்பர்கள் குழுமியிருந்தார்கள். டிரைபஸின் மனைவி, வழக்கறிஞர் லபோரி; இலக்கிய கர்த்தா அனதோல் பிரான்சு முதலியோர் ஜோலாவின் வாயிலிருந்து வெளிவர இருந்த வார்த்தைகளை ஆவலுடன் எதிர் நோக்கினர். ஜோலா வந்தார், வணக்கஞ் சொன்னார். பின்னர் தமது "நீதி'யைப் படிக்க ஆரம்பித்தார். அங்கே பூரண அமைதி நிலவியது. ஜோலா படிக்கலானார்:—

"பிரான்சு நாட்டின் குடியரசுத் தலைவரே, என்னருமைப் பிரான்சு நாட்டின் பெருமக்களே, வணக்கம். டிரைபஸின் தண்டனை நம் நாட்டின் மீது தீராத பழியைக் கொணர்ந்து விட்டது. நீதி மாண்டுபோனது. அநீதி அரசாள்கிறது. இது அடுக்குமா? டிரைபஸின் மீது எண்ணற்ற குற்றச்சாட்டுகளை இராணுவப் படைத் தலைமை, அரசாங்கம் சுமத்தியுள்ளது. அவ்வளவும் பொய்!

"உண்மையான குற்றவாளி ஹேஸி, அவரை இராணுவக் குழுப் படைத்தலைமை சிறிதும் சந்தேகிக்கவில்லை. காரணம் என்ன? ஹேஸியின் செல்வாக்கு, அவர் மீது இராணுவக் குழுவினர் கொண்டுள்ள மதிப்பு, இவை காரணத்தால் ஹேஸியைக் குற்றஞ் சாட்ட அவர்கள் மனம் ஒப்பவில்லை. அவர்கள் நன்கறிவார்கள் டிரைபஸ் குற்றமற்றவன் என்று. ஆனாலும் உண்மையை மறைப்பதற்காக டிரைபஸ் தண்டிக்கப்பட்டான். உண்மையில் டிரைபஸ் குற்றவாளியல்ல. இது உண்மை. ஆனால் டெவில்ஸ் தீவிலே, தன்னந்தனியாகச் சிறையில் வாடுகிறான் அந்த நிரபராதி. அவனைக் குற்றவாளியெனத் தீர்மானித்து, நீதியென்ற பெயரால் அநீதி வழங்கியவர்கள் இங்கு மனைவி மக்களுடன் வாழத்தான் செய்கின்றார்கள். அவர்களெல்லாம் மனிதாபிமானம் உள்ளவர்கள், நீதியின் நேர்வழிச் சந்ததிகள்! நல்ல நீதி"

நீர்த்துளி படர்ந்த கண்ணாடியை ஜோலா துடைத்துக் கொண்டார். பக்கங்களைப் புரட்டும் பொழுது விரல்களிலே ஒரு நடுக்கம். பத்திரிகாலயத்தின் வாயிலிலே, மக்கள் கவலை தோய்ந்த முகத்துடன் காத்துக் கொண்டிருந்தார்கள். ஜோலா மேலும் படிக்கலானார், குரலிலே ஆவேசமிருந்தது.

"என் அருமைப் பிரான்ஸ் நாட்டின் தலைவரே, டிரைபஸின் வழக்கு மூன்று ஆண்டுகள் நடந்தன. அந்த வழக்கை நடத்திய வழக்கறிஞர் டார்ட், யுத்த மந்திரி, இராணுவக் குழுவினர், படைத் தலைவர் இவர்களின் மீது நான் பகிரங்கமாகக் குற்றஞ் சாட்டுகிறேன். யுத்த இலாகாவும், அரசாங்கமும் மக்களின் மனத்தை மாற்ற, மக்களை டிரைபஸுக்கு எதிராகத் தூண்டப் பொய்ப் பிரசாரம் செய்தது. இராணுவ நீதி மன்றம் அவசரத்தில் அநீதியான தீர்ப்புத் தந்துவிட்டது. இராணுவ நீதிமன்றத்தாரையும் நான் குற்றம் சாட்டுகிறேன். நிரபராதியாகிய ஒருவனுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட உதவிய அனைவரையும் நான் நீதியின் பெயரால் குற்றஞ் சாட்டுகிறேன். என்னுடைய குற்றச் சாட்டு, சட்டத்தை அவமதிப்பதாகும். ஒரு நீதி மன்றம் அளித்த தீர்ப்பைக் குறை கூறும் என் செயல் சட்ட விரோதமானது. ஆக என் மீது சட்டத்தை அவமதித்ததாக வழக்குத் தொடரப்படலாம். அதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை. நான் வேண்டுவது நீதி. டிரைபஸ் வழக்கு மீண்டும் விசாரிக்கப்படவேண்டும். உண்மைக் குற்றவாளி தண்டிக்கப்படவேண்டும். நீதியின் பெயரால் நான் கேட்கும் நியாயமான கோரிக்கை இது. நேர்மையான முறையிலே நீதி வழங்க வேண்டியது அரசாங்கத்தின் தலைக் கடமை. இதை ஜனநாயகம் அறிந்த எவரும் அறிவார்.

ஜோலாவின் "நீதி", குற்றச் சாட்டு "அரோரி" பத்திரிகையில் பிரசுரமாகியது. யுத்த மந்திரி சபை, படைக்குழு கூடி ஆலோசித்தது. படைத் தலைமையால் அமர்த்தப்பட்ட கூலிகள் "ஜோலா வீழ்க" என்று தெருக்களில் அலறிக்கொண்டு போனார்கள். 'அரோரி' பத்திரிகைக் கூடம் அரசாங்கத்தின் கைக்கூலிகளால் தாக்கப்பட்டது ஜோலா, டிரைபஸ் இவர்களின் கொடும்பாவி கொளுத்தப்பட்டன. ஜோலாவின் மீது கற்கள் வீசப்பட்டன. ஜோலா காயப்படுத்தப் பட்டார். இரத்தக் காயத்துடன் வீடு திரும்பிய ஜோலாவைப் போலீஸார் கைது செய்தனர்.

ஜோலாவின் மீது சட்ட அவதூறு வழக்குப் பதிவாகியது. ஜோலாவிற்காகத் திறம்பட வழக்

கறிஞர் லபோரி வாதித்தார். ஆனால் இராணுவத்தினரின் விசாரணை நாடகத்திலே நீதிக்கு வேலை ஏது?

ஜோலா குற்றவாளிக் கூண்டிலே நின்றுகொண்டு கடைசியாகக் கூறினார்: “நான் ஒரு எழுத்தாளன். ஆனால் மேடைப் பிரசங்கியல்ல. இதுநாள் வரை உண்மையே என் உயிர் மூச்சாக இருந்தது. அதற்காகவே என் வாழ்நாள் எல்லாம் செலவிட்டேன். இனியும் அதே உண்மைக்காகவே உயிர் வாழ்வேன். உண்மையை நிலைநாட்டவே டிரைபஸின் வழக்கிலே ஈடுபட்டேன். பலம்பொருந்திய இராணுவத் தலைமைக் குழுவை நான் எதிர்க்க முடியாது என எனதருமை நண்பர்கள் என்னுடன் வாதிட்டனர். அது உண்மையென்பதையும் நானறிவேன். டிரைபஸுக்கு இழைத்த அநீதியால் என் பொன்னான தாய்நாட்டிற்கு ஏற்படும் பழியை நான் விரும்பினேனில்லை.

“நீதியின் பெயரால், என் தாய்நாட்டின் பெயரால் கூறுகிறேன், டிரைபஸ் குற்றமற்றவனென்று இதைக் கூறும் நான் அழிக்கப்படுவேன். அரசாங்கத்தின் கூரிய சட்டமுனையால் நான் அழிந்துபோவேன். என் புகழ் மங்கி மக்கிப் போகலாம்; ஆனாலும் கூறுகிறேன்: டிரைபஸ் குற்றமற்றவன். நீதியே எங்கே போனாய்?”

ஜோலா வாதாடிப் பயன் என்ன? விசாரணைக்கு முன்னதாகவே “நீதி” தயாராகிவிட்டதே. நீதி மன்றம் ஜோலா குற்றவாளியெனத் தீர்மானித்துத் தண்டித்தது. ஒரு ஆண்டு சிறைவாசம். மூவாயிரம் பிராங்குகள் அபராதம். உண்மை உரைத்ததற்குப் பரிசு!

ஜோலா தண்டனை பெற்றார். எனவே இராணுவத்தினர் கொக்கரித்தனர். உண்மையறியாத பாமரமக்கள் “வீழ்க ஜோலா” என்று வீண் கூச்சலிட்டனர். இயற்கைதானே, மக்கள் எப்பொழுதும் செம்மறியாட்டுக் கூட்டந்தானே! "என் புகழ் மங்கிப்போகும். நான் ஒரு நாள் மறக்கப்பட்டுவிடுவேன், ஆனால் ஒன்று கூறுகிறேன், டிரைபஸ் நிரபராதி, அவன் எவ்விதக் குற்றமும் செய்யவில்லை," என்ற ஜோலாவின் உள்ளக் குமுறல் எங்கும் பரவியது. நீதிக்காகப் பாடுபட்ட ஒரு சிவனுக்கு ஒரு பொதுநல ஊழியனுக்குச் சிறைவாசமும் அபராதமும். இது ஜனநாயகம்!

பிரான்ஸ் நாட்டைவிட்டு ஓடிவிடும்படி நண்பர்கள் புத்திமதி கூறினார்கள். அது கோழைத்தனமெனினும் அதற்கும் சில சமயம் பெரும் வீரம் வேண்டும். இந்த உண்மையை உணர்ந்தார் ஜோலா. நண்பர்களின் வேண்டுகோளுக்கிணங்கி கி. பி. 1897ஆம் ஆண்டு ஜோலா தமது ஐம்பத்தேழாவது வயதில் இங்கிலாந்திற்கு ஓடினார்,

ஜோலா இங்கிலாந்திலிருந்தபொழுது, டிரைபஸ் பற்றிய கட்டுரைகளைப் பிரான்ஸ் நாட்டிற்கு அனுப்புவார். அவைகள் பத்திரிகையில் பிரசுரமாயின, "அரோரி" பத்திரிகையும் இடைவிடாது பாடுபட்டது. நாட்டிலே ஒரு புத்துணர்ச்சி தழைத்தது. காலம் கரைந்தது. மக்களின் மனதும் மாறியது. பிரஞ்சு மந்திரி சபை கலைக்கப்பட்டு, புதிய மந்திரி சபை பதவியேற்றது. டிரைபஸ் பற்றிய வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. வழக்கும் பல நாள் நடந்தது, முடிவிலே உண்மை வெளிப்பட்டது. உண்மைக் குற்றவாளி எஸ்தர் ஹேஸி கைது செய்யப்பட்டான். டிரைபஸ் மீது பொய்யான வழக்கை ஜோடித்த அனைவரும் தண்டிக்கப்பட்டனர். மக்கள் உண்மை உணர்ந்தனர். 1906ஆம் ஆண்டு டிரைபஸ் விடுதலை செய்யப்பட்டான். மீண்டும் பழைய இராணுவப் பதவியிலிருத்தப்பட்டான். அவன் குடும்பமே ஜோலாவை வாழ்த்தியது. எமிலி ஜோலாவின் உண்மை உழைப்பால் நீதி நிலைத்தது.

ஜோலா 1899-ஆம் ஆண்டில் பிரான்ஸுக்குத் திரும்பினார். ஆனால் அதிக நாள் உயிருடன் இருக்கவில்லை. 1902-ஆம் ஆண்டில் அவர் மாண்டுபோனார். உழைத்து உழைத்துக் களைத்துப்போன அவருடைய மூச்சும் ஓய்ந்தது. உண்மையே உயிர் மூச்சாகக் கொண்ட ஜோலா மாண்டுபோனார்.

வாழ்க்கையில், ஜோலா ஓர் ஓயாத உழைப்பாளி. அவருடைய வாழ்க்கையில் ஏமாற்றங்கள் மலிந்து கிடந்தாலும் அவற்றை எதிர்த்து நின்று வெற்றி பெற்றார். அவர் பிரான்சு நாட்டு இலக்கியத்திலே ஓர் உயரிய இடத்தைப் பெற்றது அவருடைய எழுத்துவன்மையாலல்ல. ஏழ்மை, அநீதி, கொடுமை, வெளிவேடம், அராஜகம் இவைகளைப் பற்றிய அவருடைய பொன்னான கருத்துக்கள் அவருக்கு இந்த அழியாப் புகழை அளித்தன. அதோடு மட்டுமல்ல. தன்னந்தனியாகத் தம் நாட்டின் இராணுவத்தையும் பலம் பொருந்திய சர்க்காரையும் எதிர்த்துப் போராடிய ஒரு மாபெரும் வீரன் என்பதற்காகவும் அவர் பிரான்ஸ் நாட்டு இலக்கியத்திலே அமரத்வம் பெற்றுவிட்டார். ஜோலாவின் வாழ்க்கை பிரான்ஸ் இலக்கியத்திலே ஒரு பொன்னேடு.

ஜோலாவின் திருநாமம் வாழ்க!

ஸிக்கிரீயா

சாமா

லங்கைத் தீவில் அனுராதபுரா வென்னும் பட்டணம் புத்தர் சிலைகளும், புத்தர் சிற்பங்களும் ஏராளமாக நிரம்பியிருக்கும் ஸ்தலம் என்று எல்லோருக்கும் தெரியும். இவ்வனுராதபுராவின் அருகில் சிக்கிரீயா வென்னும் மலை சுமார் 600 அடி உயரம் இருக்கிறது. சுற்றுப்புறத்தில் தாழ்ந்த பூமியாகையால் இம் மலை ஒரு கம்பீரமான அரக்கன் போல் தோன்றுகிறது. இம் மலையின் உச்சியில் காசியபர் என்னும் அரசர் ஒருவர் ஒரு நகரம் கட்டி, நகரத்தைச் சுற்றிலும் பெரிய செங்கற் சுவர் எழுப்பிக் கோட்டை கட்டி, பார்வைக்கு ஓர் பெரிய சிங்கம் படுத்துக்கொண்டிருப்பதுபோல் அக் கோட்டையை முடித்தாராகையால் அதற்குச் சிக்கிரி அல்லது சிக்கிரீயா வென்னும் பெயர் ஏற்பட்டதாம். இக் கோட்டைக்கு வேண்டிய கட்டடச் சாமான்களும், செங்கல், சுண்ணும்பு முதலியவைகளும் மலையடிவாரத்திலிருந்து சென்றிருக்க வேண்டும் என்று உணர்வோமாகில் காசியப ராஜன் இக் கோட்டையைக் கட்ட எவ்வளவு பெயர்களை ஏவியிருக்க வேண்டும் என்றும் இந்த ராக்ஷஸ வேலை எத்தனை நாள் ஆயிருக்கவேண்டுமென்றும் நாம் எண்ண எணண ஆச்சரியம் அதிகமாகிறது. இந் நகரத்தில் மழை ஜலத்தைப் பள்ளதாக்குகளில் தேக்கி மலை நகரவாசிகளுக்கு உபயோகமாக்கியதாகத் தெரிய வருகிறது. காசியப ராஜன் சுமார் 18 வருடம் இங்கு அரசாண்டார் என்றும் தெரிய வருகிறது.

அபூர்வ வர்ணப் படங்கள்

இம்மலையின் குகையினுட்புறத்தில் பதினைந்து நூற்றுண்டுகளுக்கு முன்பு வரைந்த அபூர்வமான வர்ணப் படக் காட்சிகளை இன்றும் காணலாம். அவைகள் நேற்றுத்தான்வரைந்தது போல் புதுமையாகவும், வர்ணங்கள் மங்காமலும், நேர்த்தியாகவுமிருக்கின்றன. இப்படக் காட்சிகளில் இருபத்தொருபெண்மணிகள் இருக்கின்றனர். இவை காசியப ராஜனிறந்த பிறகு சில முனிவர்களால் வரையபபட்டனவாம். இப்படக் காட்சிகளும, ஹைதராபாத்திலுள்ள அஜந்தாவின் படக்காட்சிகளும் ஒரே கையால் வரைந்தது போல் தோன்றுகின்றன. ஆகையால் இவைகள் ஒரே காலத்தில் தீட்டப்பட்டுள்ள ஓவியங்களாக இருத்தல் வேண்டும் என்று தற்கால ஆராய்ச்சி நிபுணர்கள் கருதுகின்றனர். சிக்ரீயா படக்காட்சிகளில் தோன்றும் பெண்மணிகளின் உருவங்கள் மிக்க அழகாகவும், மின்னற்கொடி போன்ற இடையுடன், அழகிய கரங்களுடன், ஆபரணத்துடனும் தோன்றுகின்றன. இவர்களது கால்கள் மேகம் போன்ற தோற்றத்தில் மறைந்திருக்கிறபடியால் சிலர் இவர்களைத் தேவ கன்னிகைகள் என்று நினைத்தனர். இவர்கள் கையில் பூ நிறைந்த தட்டு ஏந்தி, கையிலும் மலர்ந்த பூ ஏந்தி, தேவாலயம் நோக்கிப் புன்னகை முகத்துடன் போவதுபோல் தென்படுகிறது. இம்மாதர்கள் இளம் பிராயத்தினர் என்பதை இவர்களின் சரீரப் பான்மையில் அறிந்து கொள்ளலாம். ஐந்தாவது நூற்றுண்டில் பெண்மணிகள் எவ்வாறிருந்தனர் என்பதற்கு இவர்களே அத்தாக்ஷி. ஆராய்ச்சி செய்வோர் இம் மாதர்கள் தேவ கன்னிகைகள் அல்லவென்றும், இவர்கள் காசியபராஜனின் பட்டமகிஷிகளும், அரச இளங்குமரிகளும் என்றும்; இவர்களின் சரீர அழகை நன்கு எடுத்துக் காட்டும் பொருட்டு வர்ணக் கலைஞர் ஆகிய அம் முனிவர்கள் உடம்பைப் பெரும்பாலும் காட்டிக் கால்களை மறைத்துவிட்டனர் என்றும் அபிப்பிராயப்படுகின்றனர். இவ் வுருவங்களை வரைந்த கலைஞர் வர்ணங்கள் கூட்டிப் புதிய வர்ணங்கள் உற்பத்தி செய்து,கோடுகளினுல் உள்ளங்கவரும் மஹிமையை எடுத்துக்காட்

ஸிக்கிரீயா குன்றின் தோற்றம்



டும் சக்தி வாய்ந்தவர் என்பதற்கு ஐயமில்லை. இவ்வுருவங்களை வரைவதற்கு அவர்கள் என்ன என்ன கருவிகள் உபயோகித்தனர் என்பது இன்றும் ஒருவருக்கும் புலப்படவில்லை.

நிபுணர் ஊஹம்

இப்பெண்மணிகள் பார்வைக்கு ஆடையற்றவர்களாகத் தோன்றிய போதிலும் சற்று நன்கு நோக்கின் வெங்காயத் தோல்போன்ற மஸ்லின் உடை பூண்டிருக்கின்றனர் என்று தெரியும். இப்பெண்மணிகளில் சிலர் மஞ்சள் நிறமாயும், சிலர் ஆரஞ்சு நிறமாயுமிருக்கின்றனர். உருவங்களும ஒரே சாயலாகத் தோன்றவில்லை. சரித்திர ஆராய்ச்சி நிபுணர்கள் இவர்களை, ஆரியர், மங்கோலியர் என்று கருதுகிறார்கள். வேலைக்காரப் பெண்களை நீலமும் பச்சையும் கலந்த வர்ணத்திற் காட்டியிருக்கிறார்கள். ஆகையால் வேலைக்காரர்கள் கறுப்பு நிற ஜாதியினர் என்று எண்ணிக் கொள்ளலாம். தற்காலம் போல் காசியப ராஜன் அரண்மனையில் இருந்த பெண்மணிகள் அநேக சாதியினர் என்று ஊஹிக்கின்றனர் சிலர். இது தவிர, மற்றும் இன்னும் சில இடங்களில் வர்ணப் படங்கள் வரைந்திருந்ததாகத் தெரியவருகிறது. இந்தச் சிக்கிரீயா மலையின் மேற்குப் பக்கத்தில் முந்நூறு அடி நீளமும், நூறடி அகலமும் உள்ள ஒரு பெரிய சித்திரப் படம் காசியபராஜன் காலத்தில் வரையப்பட்டிருந்தது என்று சிலர் அபிப்பிராயம்.

மேனாட்டார் கருத்து

காசியப ராஜனின் பிற்காலத்தில் இந்நகரத்தில் பௌத்த சன்னியாசிகளான பிக்குகள் வசித்துவந்தனர் என்றும் அச்சமயத்தில் அவ்வளவு உயரத்தில் வேறொருவர் போக்குவரத்துமில்லையென்றும் அவ்வுயரக் குகையில் தங்கள் மனதிற்கு இன்பம் தரக்கூடிய பெண்பாலர்களையே வரைந்தனர் என்றும், ஆனால் முனிவர்களாகிய இவர்கள் வேத விஷயமான பொருள்களைப் படங்களில் வரையாமல் மடந்தையர்களை மூலப் பொருளாக வைத்து வரைந்தால் அவர்களைப் பரிகசிப்பார்கள் என்று அம் மடந்தையர்களைத் தேவாலயத்திற்குப் புஷ்பங்கள் கொண்டு தொழுவதற்குச் செல்கிற மாதிரி வரைந்துளர் என்றும் மேல் நாட்டில் சிலரது அபிப்பிராயம். இவ்வபிப்பிராயத்தை இதுவரை ஒருவரும் மறுத்திருப்பதாகத் தெரியவில்லை. பிக்குகள் சில நாட்கள் இச் சிக்கிரீயா மலையுச்சியில் வசித்தபின் இவ்விடத்தை அசௌகரியத்தினால் விட்டகன்றனர். அதற்குப் பின் இவ்விடம் ஆயிரத்து அறுநூறு வருடங்களில் மிகப் பாழடைந்து, மனித சஞ்சாரமில்லாமல், மழையினாலும் காற்றாலும் சேதப்பட்டு, தாவர வர்க்கங்களினால் அணையப்பட்டுப் பத்தொன்பதாவது நூற்றாண்டுக் கடைசியில் உலகத்தோருக்கு மறுபடியும் தெரியலாயிற்று. இவ்வழகிய சிம்ம மலையைத் தற்காலத்தில் யாதொரு கஷ்டமுமில்லாமல் பார்க்கலாம். சிக்கிரீயா மலையின் உச்சியில் காசியபராஜன் கோட்டை கட்டி அரசாண்டு வந்ததன் காரணம் யாது என்று நோக்கின் அது ஒரு சரித்திரமாகப் புலப்படுகிறது.

சரித்திரக் குறிப்பு

கி. பி. 460ஆவது ஆண்டு தாதுசேனனென்னும மன்னன தமிழர்களை லங்கையிலிருந்து விரட்டிவிட்டுத் தேசத்தை ஒன்றுகூட்டி அரசாட்சி செய்து கொண்டிருந்தார். அவருக்கு ஓர் ஈன ஸ்திரீயின் மூலமாகக் காசியபர் பிறந்தார். பட்டமகிஷியின் மூலம் மொகலானா என்பவரும், ஒரு குமாரியும் பிறந்தனர். குமாரியை வயது வந்ததும் தம் ராணுவத் தலைவரான மிகாரா என்பவருக்கு அரசர் மணம் புரிவித்தார். ஒரு நாள் மிகாரா தம் மனைவி ஏதோ பிழை செய்தாள் என்று அவளை அரசன் முன்பு நிறுத்தித் துடையில் சவுக்கால் அடித்தார், சவுக்கடிபட்ட இடத்திலிருந்து இரத்தம் பெருகிற்று. இதைக் கண்ணுற்ற மன்னன் மனம் வருந்தி, அடங்காக் கோபம் கொண்டு மருமகனின் தாயாரை உயிருடன் தீ வைக்குமாறு கட்டளையிட்டார். கட்டளையும் நிறைவேறியது. காசியபர் அவர் தகப்பன் தாதுசேனனிடம் அதிக நட்புப்

சுவர்ண வைகாஷக அணிந்திருக்கும் தலைவியும், பணிப் பெண்ணும்

பாராட்டவில்லை என்று உணர்ந்த மிகாரா அவர் கூட்டுறவில் மன்னர் தாதுசேனரைப் பிடித்துக் கை கால்களைச் சங்கிலி கொண்டு கட்டி உயிருடன் ஆடையாபரணங்களைக் களைந்து பூமியில் குழி வெட்டிப் புதைத்தார். காசியபரின் மாற்றாந்தாயின் புதல்வராகிய மொகலானா இச் செய்தி கேட்டு நடுநடுங்கித் திக்கற்றவராய் இந்தியாவிற்கு ஓடிவிட்டார். தமக்கு எதிராளி ஒருவருமில்லை என்று உணர்ந்த காசியபர் உடனே லங்கைக்கு மன்னர் என்று அறிவித்து, முடி சூட்டிக்கொண்டார். ஆனாலும் குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்குமென்பது போலக் காசியபர் ஒருகால் தம்பி மொகலானா இந்தியாவிலிருந்து ஒரு சேனையைக் கூட்டிக் கொண்டுவந்து எதிர்ப்பாரோ என்ற பயத்தினால் அழகிய பட்டணமாகிய அநுராதபுராவை விட்டு, சிக்கிரீயா மலை உச்சியில் கோட்டை கட்டிக் கொண்டு தம் பிரஜைகளுடன் வசித்து ராஜ்ய பரிபாலனம் செய்துவந்தார். இக் கோட்டையும் மலை உச்சியில் ஒரு பயங்கரமான சிங்கம் படுத்துக்கொண்டு தன் பகைவர்களை நோக்கிக் கர்ஜித்து எதிர்க்கும் மாதிரி கட்டப்பட்டிருந்தது.

உதிக்கும் எண்ணம்

தற்காலத்தில் சிக்கிரீயாவின் உன்னத கட்டடங்களின் அஸ்திவாரங்கள் மாத்திரம் இங்குமங்கும் பாழடைந்து காணப்படுகின்றன. ஒரு காலத்தில் இவ்விடத்தில் ஓர் அரசன் செங்கோல் செய்து வந்தானா? ஓர் உன்னத சிறு நகரம் இவ்வாறு சீர் குலைந்ததாவென்ற எண்ணம் அம் மலையுச்சியில் சென்றோருக்கு உதிக்கிறது. கல்லால் செதுக்கப்பட்ட அழகிய ஸிம்மாஸனம் இவ்விடத்தில் 1895 ல் காணப்பட்டது. இதைக் காசியப ராஜன் நியாயத் தீர்ப்புக்கு உபயோகித்ததாகச் சிலர் சொல்கிறார்கள். இது தவிர ஆர்க்கியாலஜி டிபார்ட்மெண்டார் இவ்விடத்தில் 1600 நாணயங்கள் பொறுக்கி எடுத்தனர். இவைகளெல்லாம் ரோமாபுரி தேசத்தவையென்றும் இவை கி. பி. 317 லிருந்து கி. பி. 423க்குள் அச்சிடப்பட்டனவென்றும் இவைகள் காசியப ராஜனின் நகரத்திலும் அதே சமயத்தில் ரோமாபுரியின் ஆட்சியிலிருந்த இங்கிலாந்திலும் வழங்கினவென்றும் நாணய சாஸ்திரிகள் (Numismatists) கூறுகின்றனர். சுமார் கி. பி, 460 லிருந்து கி. பி. 478 வரையும் காசியபர் மொகலானாவிற்கும் மேலுலகத்திற்கும் பயந்து அரசாட்சி செய்ததாகச் சரித்திரம் கூறுகிறது. ஒரு நாள் விடியற்காலம் காசியபர் அரண்மனைத் தோட்டத்தில் ஓர் சிம்மாசனத்திலமர்ந்து தற்செயலாக வடக்குத் திக்கில் நோக்கினபொழுது தூரத்தில் ஒரு சிறிய வனாந்தரத்திற்கு அப்பால் மற்றொரு வனாந்தரம் அசைவதைக் கண்டார். நன்கு கவனித்த பொழுது அவை ஒரே ஈட்டிகளாகத் தென்பட்டன. கதிரவன் கிரணங்கள் அவ்வீட்டிகளில்பட்டு அவைகள் எல்லாம் வெள்ளிபோல் பிரகாசித்தன. நேரம் செல்லச் செல்ல அவைகளும் சிக்கிரீயாவினருகே நெருங்கின. மொகலானா இந்தியாவிலிருந்து ஓர் பெரிய சேனை திரட்டிக் கொண்டு போர்புரிவதற்கு வருகின்றார் என்று காசியபராஜன் உடனே அறிந்து கொண்டார். ஆனால் காசியபராஜன் ஓர் முட்டாள்தனம் செய்தார். பகைவனால் எதிர்க்க முடியாத அவ்வளவு பலமான கோட்டையை விட்டுக் கீழே இறங்கினார். தம்முடைய சேனைகளையும் திரட்டிக் கொண்டு எதிரியைச் சந்தித்துப் போர் ஆரம்பித்தார். இரண்டு பெரிய சமுத்திரங்கள் ஒரே முழக்கத்துடன் ஒன்றுக்கொன்று மோதிக் கொள்வது போல் இவ்விரு பெருஞ் சேனைகள் தாக்குவது தோன்றின. இரு சகோதரர்களும் யானை மேல் அமர்ந்து, தம் தம் சேனைகளை அமர்க்களத்தில் ஏவினர். சிறிது நேரம் இரு தரத்தாரும் பின்வாங்காமல் போர் புரிந்தனர். ஜயம் யாருக்கு வரும் என்று சொல்வது சந்தேகத்திற்கு இடமாயிற்று. அத்தருணத்தில் காசியபர் வீற்றிருக்கும் யானை ஓர் சிறிய வாய்க்காலைத் தாண்டிற்று. தாண்டி அக்கரை சென்றதும் துர் அதிர்ஷ்ட வசமாய் எதிரிகளை நோக்காமல் அவர்களுக்குப் பின்புறம் காட்டி நின்றது. காசியபராஜன் போரில் தோல்வி அடைந்து முதுகுகாட்டி ஓடுகிறார் என்ற அபிப்பிராயம் கொண்ட மொகலானாவின் சேனைகள் பின்னும் அதிக ஆவேசத்துடன் தாக்கின; வீராவேசமாகச் சண்டையிட்டன. காசியபரின் சேனைகள் பின்வாங்கின. இதனால் வீரியம் ஜாஸ்தியாகி மொகலானாவின் சைன்யங்கள் பயங்கரமாகச் சண்டையிட்டுக் காகியபரின் சேனைகளைச் சிதற அடித்தன. காசியபருக்கு அபஜயம் வந்ததும் அவமானம் மேலிட்டுத் தம் தம்பியிடம் அகப்பட்டால் தகப்பனாரைக் கொலை செய்ததற்குப் பழி வாங்குவான் என்று பயந்து தம பட்டாக்கத்தியால் தம் கழுத்தை அறுத்துக்கொண்டு மாண்டார்.

மொகலானா வெற்றி.

மொகலானா ஜயம் பெற்று யுத்தக்களத்தில் நின்றுகொண்டிருக்

கும் பொழுது காசியப ராஜனின் ராஜாங்க உத்தியோகஸ்தர்கள் அங்கு வந்து அவரை வணங்கினார்கள். அவர்களைக் கண்டதும் தம் தகப்பனைக் கொன்ற பாவியை இவர்கள் அனைவரும் 18 வருஷம் போற்றித் தாங்கினார்கள் என்ற எண்ணத்தினால் கோபமுற்று அவர்களை நோக்கித் தம் பல்லை நற நறவென்று கடித்தார். அடங்காத கோபத்தினால் அவர் அப்படிச் செய்தாராகையால் அவரின் முன்பல் ஒன்று நெருக்கத்தினால் முன் வந்து நீட்டி நின்றது. அவர் கடைசி காலம் வரை அப்பல் அப்படியேயிருந்தபடியால் அவர் ஒரு அரக்கன் போல் தென்பட்டார். பிரஜைகளும் அவருக்கு ராக்ஷஸன் என்ற காரணவிடுகுறிப் பெயருமிட்டார்கள். ஜயம் கிடைத்ததும் மொகலானாவின் முன்னோர்கள் ஆண்டு வந்த பட்டணமாகிய அனுராதபுரிக்கு அகன்றார். அவருக்கு விரோதி ஒருவருமில்லையாதலாலும் காசியபர்போல் ஒருவரையும் கொலை செய்யவில்லையாதலாலும் பயமற்று, கபடமற்ற மனதுடன் லங்காபுரி அரசனாகச் சிக்கிரீயாவில் முடிசூட்டப்பட்டார். பின்பு சிக்கிரீயாவைப் பௌத்த மத ஆசிரியர்களாகிய பிக்குகளுக்கு அளித்து அவர்களை அங்கு வசதி வைத்துக் கொள்ளுமாறு கட்டளையிட்டார். அப்பொழுதுதான் அப்பிக்குகள் அம்மலையுச்சியில் குகையின் சுவர்களில் இவ்வுலகப் பிரசித்தி பெற்ற வர்ணப்படங்களை வரைந்தனர் என்று தெரிய வருகிறது. அவர்களும் இங்கிருந்து சிறிது காலம் பொறுத்து அகன்றனராகையால் இவ்விடம் பாழடைந்து 19-ஆவது நூற்றாண்டுக்கோடி வரை உலகத்தாருக்குத் தெரியாமலிருந்தது.



கண்ணின் பயன் . . .



கண்ணீர் . . .

சுகி

கண்ணில் படும் எந்தக் கதையைப் படித்தாலும் "பன்னீர்த்துளிகள் போன்ற இரு முத்துக்கள் தேங்கி நின்றன"; "கண்ணீரைத் துடைத்துக் கொண்டான்!" "கண்ணீர்த்துளிகள் மல்கின!"; "ரோஜாக் கன்னத்திலே கண்ணீரின் உவர்க் கோடுகள்" என்று இவ்வாறு கண்ணீரோடு கதையை முடிக்கிறார்கள். இன்பம் துன்பம் பிறப்பு சாவு, வீரம், சோகம் என்ற எந்த நிலையிலும் கண்ணீர் மனிதப் பிறவிக்கு வரக்கூடியவை.

முதலையைப் போன்ற பிற உயிரை உண்ணும் நிலையில் கண்ணீர் வடிப்பாரும் நம்மிடையே உளர். கண்காணாத சீமைக்குப் போய்விட்ட கண்ணாளனை நினைத்துக் கண்ணாடி கண்ணீர் விடுவதும், கண் காட்சியிலுள்ள கண்கவர் ஓவியங் கண்டு கண்ணீர் உகுத்தலும்' கண்கட்டு வித்தையல்ல. எல்லாம் கண்கூடு. கண்டகர்—கீழ் மக்கள் — முதல், விண்ணவர் — மேலோர் — வரை ஆனந்த பாஷ்பம் பொழிவதை நாம் கண்ணாரக் கண்டாலும், கண் கொண்டு பார்ப்போம் கருத்துடன் ஆராய்வதில்லை.

கண்ணின்லாவண்யத்தை நமது கவிஞர்கள் மிக மிக அருமையாகப் போற்றியிருக்கிறார்கள். ஆமாம், பெண்களின் கண்கள்தாம் போற்றப்படுகின்றன. அழகை அனுபவிக்கப், போற்ற, போற்றி நிலை நிறுத்த, கவிஞர்களால் காவியக்கண் உடையார்களால் தாம் முடியும்.

பெண்ணொருத்தி தாமரைக் குளத்தருகே இறங்கி இரு கைகளால் தண்ணீர் மொண்டு, முகத்தருகே கொண்டுவந்ததும் "கெண்டை! கெண்டை மீன்" என்றலறித் தண்ணீரை விட்டுவிட்டாள். எடுத்த நீரில் அவள் கண்கள் நிழலாடியதன் விளைவே இந்த ஏமாற்றத்தின் காரணம்.

வண்டு லாவிய தாமரைப்
பொய்கையில்
மொண்டு நீரை முகத்தரு
கேந்தினாள்
கெண்டை கெண்டை யெனக் கரை
யேறினாள்
கெண்டை காண்கிலாள் நின்று
தயங்கினாள்,

அவள் தயக்கம் தீர்ந்தபாடில்லை. தெள்ளத் தெளிந்த நீரை உற்று நோக்குகிறாள். தண்ணீரிலே வரால் மீன்கள் துள்ளித் திரிகின்றன. ஒன்றல்ல, பல கூட்டமிட்டுத் திரிகின்றன. ஏன்? இவளுடைய கண்ணின் நிழல் மீன் போல் தெரியவே - இந்த நிழலை மீன் என்று உண்மையான எரால் மீன்கள் எண்ணி உண்ணுதற் பொருட்டு வட்டமிடுகின்றனவாம்!

வாவிப் படித்துறையில் வாய்த்த
வராலினங்கள்
மேவிச் சுழல்வதென்ன
வேல்வேந்தே-தாவுகயல்
கண்ணார் விழி நிழல் நீர் காட்ட
அதனை விரைந்
துண்ணுவான் கூட்ட மிட்டு.

இந்த இருவேறு கவிஞர்களும் மாறுபட்ட இருநிலையை விளக்கிவிட்டார்கள். தன் கண்ணின் நிழலைக் கண்டு பெண் ஏமாந்தாள். பெண்ணின் கயல் விழி நிழலைக் கண்டு மீன்களே ஏமாந்தன. இப்படியெல்லாம் கற்பனை செய்யக் காவியக் கண் வேண்

டும். அப்படிக் காவியக் கண் உள்ளவர்களே 'கலகவிழி' 'வேலினுங் கூரியவிழி' 'பெருங்கூற்றின் குருபீடம்' என்றெல்லாம் வர்ணிக்க முடியும்.

இன்னும் காவியங்களில் கண்ணோட்டம் விடுத்தால் பழந்தமிழ் இலக்கியத்திலே கண்ணைக் கருவிழியாகப் பாவித்துப் போற்றியிருப்பதை நாம் பார்க்கலாம். கண்கள் இரண்டென்றும் கற்றோர்க்கு அறிவுக் கண்ணோடு—மூன்றென்றும் சிறப்பாகச் சொல்லுவார்கள். வேடிக்கையாகக் கொடையாளிகளுக்கு—நககக்கண் ஐந்தும் கண்கள் இரண்டுமாகச்சேர்த்து—ஏழெனப் பாடிய பாடல் ஒன்றையும் பாருங்கள்.

கண்ணிரண்டே யாவர்க்கும்
கற்றோர்க்கு மூன்று விழி
எண்ணுவிழி ஏழாகும்
ஈவோர்க்கு—நண்ணும்
அனந்தம் தவத்தால்
அருள் ஞானம் பெற்றோர்க்கு
அனந்தம் விழியென்று
அறி!

கற்றவர்கள் மூன்று விழியும், கடவுள் அருள்பெற்றார் பலவிழிகளும் பெற்றுவிடலாம். நம் போன்ற சாமானிய மக்கள் இந்த இரு விழியால் அடையும் தொல்லைகள் சொல்லுக்கு அடங்குமா?

நமது ஊனக் கண்களே வாழ்க்கை மாளிகையின் இன்ப துன்ப சாளரங்கள், கண்கள் செய்துவிட்ட பாவமோ, புண்ணியமோ அவரவர் வாழ்வில் ஒட்டி உறவாடுகின்றன. முக்கியமாகக் கண்ணுக்கும் காதலுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. உடலிலே உள்ள காதல் - காமம் கண்ணில் மிதப்புவிடும். கடலில் அலைகள் புரள்வன போல காமப்பசியும் காதல் பசியும் அங்கே துள்ளலாடும். கண் சிமிட்டல் மூலம் பிறர் கண்ணாகிய பஞ்சணை மெத்தையைப் பாதாரவிந்தத்தில் விரித்து விடுவார்கள். உள்ளத்துள்ளே காதல் கும்மாளமிட்டால், முகத்திலே மோகன விலாசம், ஆனால் கண்ணில் அல்லவா இன்பவெறி.

காதல் - காமம் மட்டுமன்றி, அன்பின் பிறப்பும், ஆத்திரத்தின் பிறப்பும், முக்கியமாக எல்லா உணர்ச்சிகளின் ஊற்றும் பிறக்குமிடம் கண். "உன்னோடு ஒருவர் பேசும்போது கண்ணைக் கவனி!" என்று அறிஞர் சொன்னார்.

உண்மை. கண்களில்தான் எத்தனை எத்தனை பிரவாகங்கள். இதனாலேயே கவிஞர்கள் "வாள்தடங்கண்" "காதளவோடிய காவியங் கண்", "கடலினும் பெரிய கண்கள்" என்றெல்லாம் வியந்து வியந்து வர்ணிக்கிறார்கள். மனம் பேசச் சக்தியற்றோ, சொல்லுக்கு அப்பால் எங்கும்போதோ கண் கை கொடுத்து நாக்காக நின்று பேசுகிறது.

மாபெரும் கூட்டங்களில் எட்ட இருந்தபடியே இரு ஜோடிக் கண்கள் இன்னொரு ஜோடிக் கண்களோடு எப்படியோ பேசிவிடுகின்றன. சினிமாக் கொட்டகை, சங்கீதக் கச்சேரி, கல்யாண வீடு, ரயில்வே பிளாட்பாரம் இங்கெல்லாம் பார்க்கிறோம். நயன பாஷையென்பது பேசுகின்ற இருவருக்கே விளங்கக் கூடியது. மற்றவர்களுக்கு அங்கே இரும்புத் திரை விழுந்துவிடுகிறது.

கம்பர் சொல்லுகிறபடி...

கண்ணொடு கண்ணினை
கவ்வி ஒன்றை ஒன்று
உண்ணவும் நிலை பெறாது
உணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான்
அவளும் நோக்கினாள்.

கண்களோடு கண்கள் கவ்வி உண்ணுமாம். உண்ணக் கூடிய பொருளா கண்? உணவே நஞ்சாகவும் இருக்கும் என்பதை இன்னொரு கவிஞர், பசிய குவளைக்கொடி போல் கண் மென்மையாக இருக்கிறதென நினைக்காதே. கண் அல்ல கொடியது என்பதை ரத்னச் சுருக்கமாக,

"குவளை யல்ல, கொடிய! கொடிய!!

என்று கண்ணைப் பற்றிச் சொன்னார். கைகூடிய காதல் அமுதானால், கூடாக் காதல் நஞ்சு. காதல் தரும் கண்கள் என்னென்ன செய்யும்? ராமனைப் பிரம்மாண்டமான வில்லை ஒடிக்க வைத்தது அவனுடன் பிறந்த வீரமா? சீதையின் கண்ணழகில் ஈடுபட்ட இராமன் மனம் ஒரு வில் என்ன? ஏழு மலையையும் ஒடிக்குமாம்.

நச்சுடை வடிக்கண் மலர் நங்கை
இவள் என்றால்
இச்சிலை கிடக்கமலை ஏழையும்
இறுமே?

ராமன் காரியம் தனிப்பட்டவன் காரியம். பாரதியார் சொல்லுகிறார். நாம் எல்லோரும் செய்கின்ற பணியை...

காற்றில் ஏறி அவ்விண்ணையும்
சாடுவோம்
காதற் பெண்கள் கடைக்கண்
பணியிலே.

ஏழுலகையும் காதற் பெண் கடைக்கண் பணியினால் சாடி நிற்கும் வீரனையும், காதலா இக் கசிந்து கண்ணீர் மல்கி நிற்கும் யோகியையும், அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ் என்ற கவியையும் நமது அன்றாட வாழ்விலே பார்க்கின்றோம். நம்முடைய வாழ்வே கண்ணீருக்கும் சிரிப்புக்கும் இடையே நடக்கும் நாடகந்தான்.

அன்புக்குத் தாயகமாய் இருக்கும் கண்ணீரே அருள் உலகத்திற்கும் தாயாக இருக்கிறது.

பேச்சுத் தெரியாத, உலகை உணராத சின்னஞ்சிறு பசலை, இன்னும் மழலை கூட வராத நிலையில், தன் பசியை—தூக்கத்தை—அழுதழுதே தாய்க்குத் தெரிவிப்பதை நாம் பார்க்கிறோம். கடவுளைக் காணத் தம்மையும் அழுங்குழவி நிலையில் குலசேகர ஆழ்வார் வைத்துக்கொண்டுள்ளார்.

அரிசினத்தால் ஈன்ற தாய்
அகற்றிடினும் மற்றவள்தன்
அருள் நினைந்தே அழுங்குழவி
அதுவே போன்றிருந்தேனே.

குலசேகர ஆழ்வார் மட்டுமா? பக்தியில் திளைத்த ஆழ்வார்களும் சிவநேயச் செல்வர்களும் பக்தியைக் கண்ணீரால் காட்ட முடியும் என்றே நெடுகிலும் பாடுகின்றனர்.

பெற்றவட்கே தெரியும் அந்த
வருத்தம் பிள்ளை
பெருப் பேதை அறிவாளோ?
—பேரானந்தம்
உற்றவர்க்கே கண்ணீர் கம்பலை
உண்டாகும்.

கண்ணீரும் கம்பலையுமாய் இருப்பவர்கள் பெண்கள் என்றல்லவா நம்மில் பலர் நினைத்தோம். தாயுமானவர் இந்தக் கண்ணீரும் கம்பலையும் பேரானந்தம்—அவ்வுலகை—அடைய நினைக்கும் அடியார்க்கே ஏற்படும் என்கிறார். கடவுளைக் காணக் கண்ணீரே உதவுமாம். தன்னை மறந்து நிற்கும் லயம் கண்ணீர். இந்தக் கண்ணீர் அன்புக் கண்ணீர்; ஆனந்தக் கண்ணீர். ஆனந்தத்தையும் துக்கத்தையும் அனுபவிக்கும் சக்தி பெண்மைக்கே அதிகம். அதனால்தான் கண்ணீர் அங்கே அதிகம். கடவுளை அதிலும் கொவ்வைச் செவ்வாய் குமிண் சிரிப்பிலே நடனமாடும் தில்லைக் கூத்தன் ஆடும் அற்புதக் கூத்தின் பாவங்களையெல்லாம் பார்த்த ஒரு பெண், எப்படி அனுபவிக்கிறாள்? அவள் மனத்தளவில் பிறந்த ஆனந்த வெள்ளத்தை எப்படி அனுபவிக்கிறாள்? தன்னை மறந்து கண்ணீர் சோர ஆனந்தக் கூத்தனின் அற்புத வடிவிலும் நடனத்திலும் ஈடுபடுகிறாள்.

உள்ளம் குளிர, உரோமம்
சிலிர்த்து உரையும்
தள்ளவிழி நீர் அரும்பத் தான்—
மறந்தாள்—வெள்ளவயல்
தேந்தாமரைமலர் சூழ் தில்லைத்
திருநடஞ்செய்
பூந்தாமரைத் தொழுத பொன்.

லௌகிக மார்க்கமாக காதல் அடிப்படைக்குக் கண்ணே பெரிதெனப் பாடிய கவிஞர்கள், பேரின்ப வெள்ளத்தே சேர, கண்ணீரே பெரிதெனப் பாடினார்கள். அழுதழுது தாயன்பைக்கண்ட குழந்தைகள் போன்று பக்திமான்கள் கண்ணீர் ஒன்றே கடவுளின் திருவடியைக் காணவழி என்றனர். மக்கள் குலத்திடம் மறுவிலா அன்பு கொண்ட உலகப் பெரியார்கள் எல்லாரும மக்களுக்காகக் கண்ணீர் வடித்தார்கள். ஏசு முதல் காந்திவரை கண்ணீர் வடிக்காத அருள் தந்தை யார்? மக்களைக் காக்கவும், மக்கள் துயர் போக்கவும் கண்ணீர்தான் மாயமருந்தாக இருந்தது. அழுகிறவனைப் பார்த்து 'பொம்பளை' என்று பரிகாசம் செய்வார்களும உளர்.

ஒரு சமயம் அறிஞரொருவர் "கண்ணீர்த் துளிகளே! என் கண்மணிகளே!!" என்று தம் சகோதரர்களைப் பார்த்துச் சொன்னாராம். இதிலே புதைந்து கிடக்கும் உவமை நயம் மனசின் பற்றுக்கோடு, நெஞ்சின் அன்பாழம் சொல்லுக்கடங்காது. கடவுளைக் காண, தாம் தன்னை மறந்து குழந்தையின் நினைவாக இருப்பதுபோல, குழந்தையின் க்ஷேமம் கருதி அழுவது போலத் தன்னை மறந்துவிடும நிலை வரும்போது கண்ணீரும் வந்து விடும். கண்ணீர்த்துளிகளே என்று அழைக்கவும் சொல்லும்.

கடலின் மழை கண்டதுபோல
கண்ணீரும் ஆறாக

உடல் வெதும்பி மூர்ச்சித்து
உருகும் நாள் எந்நாளோ?

என்று தாயுமானவரும்,

யானே பொய், என் நெஞ்சும் பொய்
என் அன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதால்
உன்னைப் பெறலாமே

என்று மாணிக்கவாசகப் பெருமானும்,

பழுதே பலபகலும்
போயினவென்று அஞ்சி
அழுதேன், அரவணைமேல்
—தொழுதேன்

என்ற பொய்கையார் வாக்கும்,

"காரொளி வண்ணனே என்
கண்ணனே கதறுகின்றேன்"
"கனியிருந்தனைய செவ்வாய்க்
கண்ணனைக் கண்ட கண்கள்
பனி அரும்பு உதிருமாலோ என்
செய்கேன் பாவியேனே"

என்று தொண்டரடிப்பொடியாழ்வாரும்,

உள்ளெலாம் உருகிக் குரல்
தழுத் தொழிந்தேன்
உடம்பெலாம் கண்ணீர் சோர

என்பதாகத் திருமங்கை மன்னரும் பாடுகிறார்கள்.

கடவுளின் தூதுவன் கண்ணீர் என்பதை பக்த கோடிகள் பாடுகின்றனர். பக்தி மார்க்கம் ஒரே சோக நாடகமாக இருப்பதைப் பார்க்கும்போது இல்லறத்தைவிடத் துறவறம் கடினமானது தான் என்ற முடிவுக்கு வருகிறோம். பக்தனை, குழந்தையாக்குவது அவனிடைப் பிறக்கும் கண்ணீர். கண்ணீர் பொதுவாக இருப்பதால் குழந்தையும் தெய்வமும் பக்தனும் ஒன்றெனச் சொல்லுகிறார்கள்.

ஆத்மாவின் கண்ணீர் கோடைக்கு மழை போன்றது. இல்லறத்திலே அழகியின கண்ணீர் அவள் சிரிப்பைவிட மயக்கந் தருவது; நாம் அனுபவிக்கிறோம். துறவறத்திலும் கண்ணீர்தான் உள்ளப் பாங்கின் பளிங்காக இருக்கிறது. ஆண் மக்கள் அறிந்த பிரம்மாண்டமான ஜல சக்தி கண்ணீர் என்பதை இவ்வுலகிலும், மறு உலகிலும் பார்க்கிறோம். அழகினால் சாதிக்க முடியாததை, அழுகை சாதிக்கும் என்பதை அறிந்த நாம், பக்தியின் முக்தி சாதிக்காத காரியத்தை, "வினையேன் அழுதால் உனைப் பெறலாமே" என அழுகை சாதிப்பதை அறிகிறோம்.

பொய்மானதன்று; புனிதமானது கண்ணீர். கண்ணீர்த் துளிகள் அன்பில் விளைந்த ஆரமுது. நட்பில் பிறக்கும் நல் முத்துக்கள. அது பயங்கொள்ளித்தனத்தின் ஊற்றல்ல, பாசத்தின் வற்றாத ஊற்று. உலகம் உள்ளளவும் இந்த ஜீவ ஊற்றுப் பொங்கிக் கொண்டிருக்கும். ஆயிரம் நாவு படைத்த ஆதிசேஷன் சொல்ல முடியாத காரியங்களைக் கண்ணீர்த் துளி ஒன்று சொல்லும் வன்மையுடையது. துக்கத்தின் பிரதான தூதுவன் கண்ணீர். ஆனந்தத்தின் முதற் குழந்தை கண்ணீர்.

பேராசிரியர் முத்துசிவன் சொல்லுகிற மாதிரி, கண்ணீரே கற்பக விருக்ஷம், அது என்னென்ன செய்யும்?

கல்லைக் கனிவிக்கும்
காழ் மனத்தை நெகிழ்விக்கும்
சொல்லைக் குழைவிக்கும்
சூதை அகல்விக்கும்
அன்பைக் கட்டுவிக்கும்
ஆணவந்தை ஓட்டுவிக்கும்.

கண்ணீருக்கு ஆளாகாத ஜன்மங்கள்—அன்பிலோ, பாசத்திலோ, காதலிலோ, பக்தியிலோ பிணைக்கப்படாமல் போய்விடும்—ஜன்மங்கள்—மக்கள் உருவிலே நடமாடும் கற்பாறைகள். பசுமரத்தாணிக்கு வேர் விடும் பாறைகள் இருக்கின்றன, அதைவிட மென்மையானது கண்ணீர். அதற்கு உருகாதார் மனித ஜன்மமல்ல.

தொண்டன் காந்தி உயிர் நீத்த அன்று உலகம் கண்ணீர் வடித்தது. எவன் இறந்துபட்டதற்காக உலகமே கண்ணீரும் கம்பலையுமாக நிற்கிறதோ அவன்தான் மகாத்மா, உலகத்தின் கண்ணீர் மகாத்மா.

கோடையின் கடுமை - -
- - எங்கும் ஜலக் கஷ்டம்

எவ்விதமான ஜலப்ரச்னையையும் தீர்க்கவல்ல

மயர்ஸ்

ஆட்டோமாடிக் வாட்டர் ஸிஸ்டம்கள்



பல ஸைஸ்கள்

(ஜலக் கஷ்ட நிவாரண விடுதி)

வாட்டர் ஸப்ளை ஸ்பெஷலிஸ்ட்ஸ் லிமிடெட்

23/24, செக்கண்டு லேன் பீச், :: மதராஸ்-1.

199333



நீங்கள் எங்கிருந்தாலும்...

ஹிமாலயா புக்கெ ஸ்னோ

உபயோகியுங்கள்.

ஏனென்ருல் இது பிரத்தியேகமாக இந்தியாவின்
சீதோஷ்ணத்திற்கேற்ப தயாரிக்கப்பட்டது

சீதோஷ்ண நிலை எப்படி இருந்தாலும்—இந்தியாவில் நீங்கள் எங்கிருந்தாலும், ஹிமாலயா புக்கெ ஸ்னோ உங்கள் சருமத்தை அதிக மிருதுவாகவும், அழகாகவும் வைத்துக்கொள்கிறது. இதன் நறுமணத்தை நீங்கள் மிகவும் விரும்புவீர்கள்.

இன்னுமொரு நேர்த்தியான **இராஸ்மிக்** தயாரிப்பு

HBS. 6-X30 TM

இராஸ்மிக் கம். லிட். லண்டனுக்காக இந்தியாவில் தயாரித்தது.

பிரயாணக் குறிப்புகள்

சி. வி. ராமகிருஷ்ணன்

1. பிரயாணத்துக்கு முன்

ஏப்ரல், 1951. பெங்களூர் விஞ்ஞான ஆராய்ச்சிக் கூடத்தில் மும்முரமாக யோசனையில் ஆழ்ந்திருந்தேன். புதிதாகத் தயாரிக்கப்பட்ட திரவம் ஒன்று சோதனைக் குழாயில் அகப்பட்டுக் கொண்டிருந்தது. அதன் குணதிசயங்களைக் கண்டுபிடிப்பது தான் என் நோக்கம். ஆனால் யோசனையெல்லாம் எங்கோ செல்ல மேலும் கீழுமாகச் சோதனைக் குழாயை ஆட்டிக் கொண்டிருந்தேன்.

"ஸார்! தந்தி" என்ற வார்த்தைகள் என்னைத் திடுக்கிடச் செய்தன. "பாம்பென்றால் படையும் நடுங்கும்' என்ற பழமொழிக்குப் பதில் 'தந்தியென்றால் தவமுனியும் நடுங்குவான்' என்ற புது மொழியைச் சொல்லலாம்! என் மனம் 'அணுகுண்டு' வேகத்தில் எங்கெல்லாமோ பாய்ந்துசென்றது. சோதனைக் குழாய் கை நழுவிக் கீழே விழுந்தது! புதிய திரவமும் என்னிடமிருந்து விடுபட்டுப் புதுமையை நாடிப் பூமியை நோக்கிச் சுதந்திரமாய்ச் சென்றது. யாருடைய கடைசி யாத்திரையோ, நோய்வாய்ப் பட்டுள்ள சகோதரரா, வயது சென்ற தாயாரா, கவலையால் கதறிக் கொண்டிருக்கும் சகோதரியா, தெரியவில்லையே!" என்று பலவாறு கலங்கியதில் தந்தியை வாங்கிக் கொள்ளக்கூடத் தோன்றவில்லை. "என்ன ஸார்! எத்தனை நாழி காத்திருப்பது?" என்ற தந்திச் சேவகன் குரல் என் சிந்தனையைக் கலைத்தது. தந்தியை வாங்கிப் பிரித்தேன். அதற்குள் விஷயமறியும் அவாவுடன் ஒரு கும்பல் கூடிவிட்டது—என் வேலைக்காரன் சென்னு, நண்பன் சீனு, மற்றவர்கள் விவகாரங்களில் எப்பொழுதுமே தனி ஆர்வம் காட்டும் சில நண்பர்கள்! தந்தியைப் படித்ததும் மதுவனத்தை அழித்த வானரக் கூட்டத்தைச் சேர்ந்தவன்போல் சென்னுவின் தோள்களை உலுக்கிக்கொண்டு குஷியாக ஒரு குதி குதித்தேன்! எல்லாரும் "என்ன என்ன?" என்று பரபரப்புடன் விசாரிக்க ஆரம்பித்தார்கள்.

நான் சந்தோஷப்பட்டதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. இந்தியாவில் என் அறிவையும் யோக்கியதாம்சங்களையும் நேரில் அறிந்த மாபெரும் அறிஞர்கள் மாதம் ரூ. 300 சம்பளம் கொடுக்கத் தயங்குகிறார்கள். ஆனால் என் விஞ்ஞான ஆராய்ச்சியின் ஒரு சில முடிவுகளைமட்டுமே பத்திரிகைவாயிலாக அறிந்தபிரபல அமெரிக்க விஞ்ஞானியாகிய கிரீன் (Green) என்பவர் அமெரிக்காவில் தம்முடன் ஆராய்ச்சி செய்யும்படி என்னை அழைத்தால் ஆனந்தமில்லாமலாபோகும்? கரும்பு தின்னக் கூலியும் வேண்டுமா? என்பார்கள். இந்த விசேஷ வாய்ப்புடன் மாதம் ரூ. 1800 சம்பளம் வேறு! பணத்திற்கு பணம், அனுபவத்திற்கு அனுபவம், அறிவுக்கு அறிவு, வெளி நாடுகளைச் சுற்றிப் பார்க்க ஒரு சந்தர்ப்பம் வேறு! புதுத் திரவத்தைப்பற்றிய சிந்தனை ஒழிந்து, நான் செல்ல வேண்டிய புது உலகத்தைப்பற்றிய கற்பனை ஆரம்பித்தது. ஆனால் உட்கார்ந்து கற்பனை உலகில் இஷ்டம்போல் சஞ்சரிக்கச் சுற்றியிருந்த நண்பர்கள் விடவில்லை! விஷயமறிந்தவுடன் பலவந்தமாக என்னை ஹோட்டலில் ஒரு நல்ல பார்ட்டிக்கு இழுத்துச் சென்றுவிட்டார்கள். (என் செலவில்தான்!)

திரும்பி வருவதற்குள்ளேயே என் மதிப்பு எவ்வளவு உயர்ந்துவிட்டது என்று அறிந்தேன்! இல்லாவிட்டால் எங்கள் டிபார்ட்மெண்ட் தலைவர் என்னை நேரில் வாழ்த்துவதற்காக என் அறைக்கு வந்து காத்திருப்பாரா? "ராமகிருஷ்ணன்! 'கங்ராசுலேஷன்ஸ்!' நீ கெட்டிக்காரன் என்று எனக்கு எப்பொழுதுமே தெரியும்! எப்படியோ புரொபஸர் கிரீனைப் பிடித்துவிட்டாயே! நீ நல்ல அதிர்ஷ்டசாலி. திரும்பிவந்த பின் எங்களுடனேயே வேலை பார்க்கவேண்டும்" என்றார். மேலதிகாரியின் பாராட்டைக் கேட்டு எனக்கு உச்சி குளிர்ந்துவிட்டது! அயல் நாட்டார் நம்மை மதித்தால்தான் நம் நாட்டார் பிறகு மதிப்பார்கள் என்ற உண்மையும் 'பளிச்'சென்று புரிந்தது.

என்னுடைய அதிர்ஷ்டத்தில் உரிமையுடன் பங்கு கேட்டவர்களும் இல்லாமல் போகவில்லை. தன்னுடைய ஆசீர்வாதம் தான் என் வெற்றிக்குக் காரணம் என்று என் தாயார் சொல்லிக்கொண்டாள். "அந்த

நாளிலேயே உன் அப்பா பையன் ரொம்ப சுட்டி என்று சொல்லிக்கொண்டிருந்தார். பெரியவாள் வாக்கு வீண் போகாது. அவர் இருந்து சந்தோஷப்படக் கொடுத்து வைக்கவில்லை" என்றெல்லாம் அவள் அடுக்கியபொழுது எனக்குச் சிரிப்பு வந்தது. அதுவரையில் ஓரிடத்திலும் நிலைகொள்ளாத ஊர் சுற்றி என்று என்னை வைதுகொண்டிருந்தவள் இப்பொழுது நான் உலகம் சுற்றப் போவதைக் குறித்து மகிழ்வது ஆச்சரியம்தானே! "அப்பொழுதே உனக்குச் சுக்கிர திசை போடு போடென்று போடும் என்று சொல்லவில்லையா?" என்றார் என் தமையனார். "பானை பிடித்தவள் பாக்கியம்" என்று வற்புறுத்தினாள் என் மனைவி! தான் அனுப்பிய குங்குமப் பிரசாதத்தின் மகிமை என்று கருதினாள் என் மாமியார்! முன்பே நான் விமானத்தில் போவதாகத்தான் கண்ட கனவை எடுத்துரைத்தார் என் மாமனார்! எங்கள் பள்ளிக்கூட ஹெட்மாஸ்டரோ, எல்லாம் அந்த நாளில் அவர் கொடுத்த அஸ்திவாரந்தான் காரணமென்று நினைத்தார்! ஆக, யாருடைய புண்ணியமோ, மேல்நாடுகளுக்குச் செல்ல வேண்டும் என்று வெகு நாட்களாக இருந்த ஆவல் பூர்த்தியாகும் தருணம் வந்து விட்டது.

என் சொந்தப் பிரதாபமெல்லாம் ஒரு புறம் இருக்கட்டும். பிரயாண ஏற்பாடுகளுக்கு வருகிறேன். முன் பின் வெளிநாடுகளுக்குச் சென்றிராதவர்களுக்கு இந்தப் பூர்வாங்க ஏற்பாடுகள் ஒரு பெரிய தொல்லைதான். முதலாவதாக, வெளிநாடுகளுக்குச் செல்ல இந்திய சர்க்காரின் அனுமதி வேண்டும். இதைத்தான் பாஸ்போர்ட் என்கிறார்கள். இந்த அனுமதிச் சீட்டு ஐந்து வருஷங்களுக்குச் செல்லும். வெளிநாடுகளுக்குச் செல்லும் நோக்கத்தை ஹோம்டிபார்ட்மெண்டுக்கு அறிவித்து, பாஸ்போர்ட்டுக்காக மனுச் செய்து கொள்ளவேண்டும். கல்வி, உத்தியோகம் முதலியவை சம்பந்தமாகச் செல்வதாக இருந்தால் அதற்கு அத்தாட்சி காண்பிக்க வேண்டும். தவிர, அங்கே தங்குவதற்குப் போதுமான பணமோ வருமானமோ உண்டு என்பதற்கும் அத்தாட்சி கொடுக்க வேண்டும். பிறந்த ஊர், தேதி இவற்றுக்குத் தகுந்த அத்தாட்சிகளை விண்ணப்பத்தில் கொடுக்கவேண்டும். இது சம்பந்தமாகத்தாம் பட்ட தொல்லைகளை A. S. P. ஐயரவர்கள் "மேற்கு ஐரோப்பாவில் ஓர் இந்தியன்" என்ற தம்முடைய நூலில் ரஸமாக வர்ணித்திருக்கிறார். பிறந்த ஊர், தேதி சம்பந்தமான சர்டிபிகேட்டை அவர் பெறுவதற்குமுன் அவரைக் கேட்ட குறுக்குக் கேள்விகளைக் கேட்டு விட்டு அவருக்குத் தம் பிறப்பைப்பற்றியே சந்தேகம் வந்துவிட்டதாம்! ஹோம்டிபார்ட்மெண்டுக்கு மனுச் செய்ததும் மனுதாரைப் பற்றிப் போலீஸ் விசாரணை செய்கிறார்கள். குற்றவாளிகளும் சந்தேகத்துக்கு இடமான பேர்வழிகளும் வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்று விடுவதைத் தடுக்கத்தான் இந்த ஏற்பாடு. ஒரு வழியாக, 'பாஸ்போர்ட்டும்' என் கைக்கு வந்து சேர்ந்தது.

அடுத்தபடியாக, நாம் எந்த நாட்டுக்குப் போகவேண்டுமோ அந்த நாட்டுச்சர்க்காரின் அனுமதி வேண்டும். இதற்கு 'வீஸா' (Visa) என்று பெயர். வீஸா கிடைப்பதற்குப் பாஸ்போர்ட்டையும் காட்டி அந்த நாட்டுத் தூதர் (Embassy) காரியாலயத்துக்கு மனுச் செய்து கொள்ளவேண்டும், அங்கே கொஞ்சகாலம் வசிப்பதாக இருந்தால், உடல் நிலை சரியாக இருக்கிறது என்பதற்கு ஒரு 'ஹெல்த் ஸெர்டிபிகேட்'டை (Health Certificate) அவர்கள் சொல்லும் டாக்டரிடமிருந்து பெறவேண்டும். சில நாடுகளில் சுலபத்தில் வீஸா கொடுப்பதில்லை. அதிலும்—அரசியல் பிரசாரகர்கள் அல்லது வேவுகாரர்கள் என்று அவர்கள் சந்தேகித்தால் வீஸா கிடைப்பது கஷ்டம். ஆனால் கல்வி அல்லது உத்தியோகம் சம்பந்தமாகச் செல்பவர்களுக்கு அதிக கஷ்டம் இல்லை. அமெரிக்க தூதர் காரியாலயத்துக்கு வீஸாவுக்காக மனுச் செய்துகொண்டேன். ஹெல்த் ஸெர்டிபிகேட் வாங்குவதற்குள் போதும் போதும் என்று ஆகிவிட்டது. காலிலிருந்து தலை வரை என்னை அணுஅணுவாகப் பரிசோதித்து, ஒவ்வோர் உறுப்புக்கும் ஓர் குறை சொன்னார் டாக்டர்! ஒருவாறாக ஹெல்த் ஸெர்டிபிகேட்டையும் வீஸாவையும் பெற்றேன். ஹெல்த்-ஸெர்டிபிகேட்டை எக்ஸ்ரே (X-Ray) போட்டோவுடன் சேர்த்து, சீல் செய்த கவரில் கொடுக்கிறார்கள். நாம் இறங்குகின்ற துறைமுகத்தில் அதைக் காண்பிக்க வேண்டும்.

இவற்றையெல்லாம் பெறுவதற்குள் இந்தியாவுக்கு, கி. பி. நான்காம் நூற்றாண்டில் வந்த பிரபல சீன யாத்திரிகர் பாஹியானைப் பற்றி நான் பள்ளிக்கூட வகுப்புக்களில் படித்தது ஞாபகம் வந்தது. இந்தியாவின் பெருமைகளை அவர் வர்ணித்துக் கொண்டே போகையில், விசேஷமாக, இந்திய அரசாங்கத்தார் (குப்தர்கள்) அந்நியர்கள் இந்தியாவுக்கு வருவதையும் இந்தியர் அயல் நாடுக

ளுக்குப் போவதையும் ஒருவித கட்டுப்பாடு மில்லாமல் தாராளமாக அனுமதிப்பதை வாயாரப் புகழ்கிறார். இது விஷயமாகச் சீன அரசாங்கம் கண்டிப்பாக இருந்ததையும் வருத்தத்துடன் குறிப்பிடுகிறார். இப்பொழுது உலகத்தில் இருக்கும் சூழ்நிலையில் பாஹியின் காலத்து இந்தியா மாதிரி எல்லா நாடுகளும் இருக்கும் என்று எதிர்பார்ப்பது வீண். வெளிநாடுகளுக்குப் போகவேண்டு மென்றால் குறைந்தது மூன்று மாதங்களுக்கு முன் பாஸ்போர்ட், வீஸா முதலியவற்றுக் காக மனுச் செய்து கொள்வது நல்லது.

'தெய்வம் வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் கொடுக்கான்' என்பதுபோல் பண வசதி, பாஸ்போர்ட், வீஸா முதலியவற்றைப் பெற்ற பின்னரும் கப்பலில் சுலபமாக இடம் கிடைப்பதில்லை. ஏதாவது பிரயாண ஏஜெண்டுகளிடம் முன்னதாகவே பதிவு செய்துகொள்ள வேண்டும். இந்தியாவில் தாமஸ் குக் கம்பெனியும் அமெரிக்க எக்ஸ்பிரஸ் கம்பெனியும் முக்கிய பிரயாண ஏஜெண்டுகளாக வேலைசெய்கின்றன. இவற்றின் கிளைகள் உலகில் எல்லாப்பாகங்களிலும் இருக்கின்றன. நான் ஏப்ரல் மாதமே பதிவு செய்து கொண்டும் ஆகஸ்டுவரை கப்பலில் இடம் கிடைக்கவில்லை. காரணம், இங்கிலாந்தில் நூறு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடக்கும் 'பிரிட்டன் திருவிழா' (Festival of Britain) காரணமாக இங்கிலாந்து செல்பவர்களின் கூட்டம் அதிகம். அமெரிக்கா செல்ல இங்கிலாந்து வழியாகச் செல்வதுதான் சுருக்கமான வழி. இல்லாவிட்டால், உலகம் உருண்டை என்பதை ஞாபகம் வைத்துக் கொண்டு, கிழக்கிந்தியத் தீவுகள் வழியாக உலகைச் சுற்றிக் கொண்டுபோக வேண்டும்! ஸெப்டம்பர் முதல் தேதிக்குள் அமெரிக்கா போய்ச் சேரவேண்டுமே, இன்னும் கப்பலில் இடம் கிடைக்கவில்லையே என்று கவலைப் பட்டுக்கொண்டிருந்தேன். கொதிப்படைந்த மூளை கொஞ்சமாவது குளிரட்டும் என்று சுகமாக எண்ணெய் தேய்த்துக் குளிக்க ஆரம்பித்தேன். அமெரிக்கா சென்று விட்டால் அப்புறம் எண்ணெய்க் குளியேது? நான் ஸ்நான அறைக்குச் சென்று எண்ணெயைத் தலையில் வைத்துக் கொண்டதும் ராஜி பதறிக்கொண்டு ஒரு தந்தியைக் கொண்டு வந்து நீட்டினாள். 'பழம் நழுவிப் பாலில் விழுந்தது' என்பதுபோல் எனக்கு Fulbright Travel grant—அதாவது பிரயாணச் செலவு முழுவதும் அமெரிக்க சர்க்காரே கொடுப்பதாகவும் ஸ்ட்ராத்மோர் (Strathmore) என்ற கப்பலில் இடம் ரிஸர்வ் செய்திருப்பதாகவும் தந்தியில் கண்டிருந்தது. கப்பல் பம்பாயிலிருந்து புறப்பட இன்னும் ஐந்துநாட்களே இருந்தன. உடனே பம்பாய் புறப்படவேண்டியிருந்தது. (அமெரிக்காவைச் சேர்ந்த Fulright Foundation என்னும் ஸ்தாபனத்திலிருந்து கல்வி, ஆராய்ச்சி விஷயமாக அமெரிக்கா செல்லும் இந்தியர்களுக்குப் பிரயாணச் செலவுக்காகப் பணம் கொடுக்கிறார்கள்.)

நானும் கூட அமெரிக்காவுக்கு வருகிறேன் என்று கிளம்பிவிட்டாள் ராஜி! பாஸ்போர்ட், வீஸா முதலியன இல்லாமல் கிளம்ப முடியாது என்று அவளுக்கு ஞாபகப்படுத்த வேண்டியிருந்தது! பம்பாய் வரைக்குமாவது வருவேன் என்று சொன்னதற்குத் தடைசொல்ல எனக்கு ஒரு சாக்கும் அகப்படவில்லையாகையால் வேறு வழியின்றி அவளையும் அழைத்துக் கொண்டு பம்பாய்க்குப் புறப்பட்டேன்.

2. இந்தியாவின் தலைவாயில்

எங்களுடைய கப்பல் ஆகஸ்டு மாதம் 10-ஆந்தேதி பம்பாயிலிருந்து புறப்படவிருந்தது. மேல்நாடுகளுக்குச் செல்லும் கப்பல்களெல்லாம் பம்பாயிலிருந்து தான் புறப்படுகின்றன. (கீழ்நாடுகளுக்குச் செல்ல சென்னையும் கல்கத்தாவும் முக்கிய துறைமுகங்களாக விளங்குகின்றன) மேல் நாடுகளிலிருந்து இந்தியாவுக்கு வருபவர்கள் பம்பாயில் தான் வந்து இறங்கவேண்டுமாகையால் பம்பாய் துறைமுகம் இந்தியாவின் தலைவாயில் (Gate way of India) எனப்பிரசித்தி பெற்றுள்ளது (Fulbright travel grant) வாங்கிக்கொண்டு செல்பவர்கள் கப்பல் புறப்படுவதற்கு நான்கு நாட்கள் முன்பாகவே பம்பாயிலுள்ள அமெரிக்க சர்க்கார் காரியாலயத்துக்குச் சென்று, U. S. I. S Cultural Relations office-க்கு முன் ரிப்போர்ட் செய்துகொள்ளவேண்டும். ஆகையால் 7 ஆந்தேதி பம்பாயில் இறங்கியவுடன் நேராக U. S. I. S. காரியாலயத்துக்குச் சென்றேன். வந்து சேர்ந்து விட்டதை அறிவித்துவிட்டுப் பாஸ்போர்ட் வீஸா முதலியவற்றையும், சமர்ப்பித்துவிட்டுபத்தே நிமிஷங்களில் திரும்பிவிடலாம் என்ற எண்ணத்துடன் ராஜியையும் ஸ்டேஷனுக்கு எங்களை வரவேற்க வந்திருந்த சில நண்பர்களையும் டாக்ஸியிலேயே இருக்கச் சொல்லி விட்டு, உள்ளே சென்றேன். இரண்டரை மணிக்குக் காரியாலயத்தில் நுழைந்தவன்


"என் சருமத்தை லக்ஸ்
டாய்லட் சோப்பினால்தான்
பாதுகாத்துக்கொள்கிறேன்"
என்கிறார்
மங்களம்
LUX
LUX TOILET SOAP
இனிய மணத்துடன் கூடிய இந்த
வெண்மையானதும் சுத்தமானதுமான சோப்
உங்கள் சருமத்தை வசீகரமாகச் செய்யும்
சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்
L.T.S. 326-X30 TM

ஆறுமணி வரை திரும்ப முடியவில்லை! காரணம், travel grant வாங்கிச் செல்பவர்களுக்கு அமெரிக்கா பற்றிய சில விஷயங்களைக் கட்டாயமாக லெக்சர்கள் மூலம் வற்புறுத்திச் சொல்கிறார்கள்! கப்பலில் எப்படி நடந்துகொள்ளவேண்டும், அமெரிக்காவில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்வது போல் எடுத்துச் சொன்னார்கள்! இன்னும், அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கை உள்நாட்டுப் பழக்க வழக்கங்கள் எல்லாவற்றையும் விளக்கமாக எடுத்துரைத்தார்கள்! அமெரிக்க சர்க்காருக்கு எதிராகத் தாங்கள் சதி செய்யக் கூடாது என்பதும் அறிவிக்கப்பட்டது. இவற்றையெல்லாம் ஏற்கனவே அறிந்திருந்த எங்களுக்கு இந்த நீண்ட லெக்சர்கள் தலைவேதனையாக இருந்தன. தவிர, எனக்கு ரயிலில் இரண்டு நாட்களாகப் பிரயாணம் செய்த களைப்பும் வெளியே காத்திருந்தவர்களைப் பற்றிய கவலையும் வேறு. கடைசியாக நான் ஆறு மணிக்கு வெளியே வந்தபொழுது "இங்கேயே ஏதாவது ஆராய்ச்சி செய்யத் தொடங்கி விட்டாயா?" என்றுகிண்டலாகக்கேட்டார்கள் எனக்காகக் காத்திருந்த நண்பர்கள்! விஷயம் அன்றோடு நின்றாலும் பரவாயில்லையே! 8, 9 தேதிகளிலும் லெக்சர்கள் தொடர்ந்து நடந்தன! நல்லவேளை, கப்பல்புறப்படும் தினமாகிய 10-ஆந்தேதி காலை லெக்சர் ஒன்றும் இல்லை! அமெரிக்காவுக்குப் புறப்படுமுன் பம்பாயில் குஷாலாக நான்கு நாட்கள் சுற்றலாம், பழைய நண்பர்களையெல்லாம் பார்க்கலாம் என்று கோட்டை கட்டியதெல்லாம் வீணாயிற்று, சினிமா, பீச், ஹோட்டல், பிக்னிக் என்றெல்லாம் பலவாறு திட்டமிட்டுக் கொண்டிருந்த ராஜியும் ஏமாற்றம் அடைந்தாள்.

9 ஆந் தேதி மாலை அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் கம்பெனிக்குச் சென்று டிக்கட்டை வாங்கிக் கொண்டேன். கப்பலில் பணமாக ஒரு குறிப்பிட்ட தொகைதான் கொண்டுபோகலாம். நான் ரிஸர்வ் பாங்க் மூலம் ரூ. 1500-ஐ 300 டாலர்களாக (டாலர்தான் அமெரிக்க நாணயம்,) மாற்றிக்கொண்டேன். அதற்கு மேற்பட்ட தொகை கொண்டுபோவதற்கு ரிஸர்வ் பாங்கின் விசேஷ அனுமதி வேண்டும். இத் தொகையையும் பணமாகக் கொண்டுபோகக் கூடாது. பிரயாணிகள் செக்காக மாற்றிக்கொள்ள வேண்டும் (Traveller's cheques). டாலருக்கோ, பவுண்டுக்கோ 'செக்' வாங்கிக்கொண்டு பின்னால் அந்தந்த ஊரில் உள்ள கம்பெனிக் கிளைகளில் செக்கைப் பணமாக மாற்றிக்கொள்ளலாம். கைச் செலவுக்காக 10 பவுண்டை மாத்திரம் பணமாக வைத்துக் கொண்டேன். வேண்டுமானால், கப்பலிலேயும் செக்குகளை அவசியமானபொழுது பணமாக மாற்றிக்கொள்ளலாம். செக்குகளாக வைத்துக் கொள்வதால் திருட்டுப் போகும் சந்தர்ப்பம் குறைகிறது.

10 ஆந் தேதி காலை 9 மணிக்குப் பெட்டிகளுடன் துறைமுகத்துக்குப் போய்ச் சேர்ந்தேன். கப்பல் வரையில் ராஜியும் என் நண்பர்கள் சிலரும் வந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் கப்பலில் நுழைவதற்காகத் தலைக்கு ரூ 5 கொடுத்து, பாஸ் முன்னதாகவே வாங்கி வைத்திருந்தோம். ஹார்பருக்குள் நுழையும்பொழுதே பிள்ளையார் பூஜை! சாமான்களுக்குத் துறைமுக வரி ரூ. 5! (Port tax) பிறகு கப்பலில் ஏறுவதற்கு உடல்நிலை சரியாக இருக்கிறதா என்று பரிசோதிக்க வைத்தியப் பரீட்சைக்காக 'க்யூ' வில் காத்துக்கொண்டிருந்தேன். கூட்டம் அதிகமாகவும் நேரம் குறைவாகவும் இருந்ததால் டாக்டர்கள் அம்மை குத்திய சீட்டை மாத்திரம் பரிசீலித்துவிட்டு நாடியை மாத்திரம் பிடித்துப் பார்த்துவிட்டு அனுப்பிவிட்டார்கள், தாய் நாட்டையும் வீட்டையும் விட்டுவிட்டுப் போகிறோம் என்ற வருத்தத்தினால் ஒரு வேளை நாடித்துடிப்பு அதிகரித்திருக்குமோ என்ற ஐயம் போலும்!

சாமான்களை கஸ்டம்ஸ் ஹாலில் வைத்துவிட வேண்டும். விற்பனைக்கான சாமான்கள் ஏதாவது இருக்கின்றனவா என்று கஸ்டம்ஸ் அதிகாரிகள் சோதிக்கிறார்கள். சோதனை முடிந்தபின் சாமான்களை எடுத்துக்கொண்டு கப்பலுக்குள் செல்லலாம். செல்வதற்குமுன், பணமாக எவ்வளவு, செக்காக எவ்வளவு, தங்க வைர நகைகள் (ஏதாவது இருந்தால்) எவ்வளவு எடுத்துச் செல்கிறோம். என்ற விவரங்களை எழுதிக்கொடுக்க வேண்டும். நகைகள் என்று குறித்திருந்த இடத்தைக் காலியாகவிட எனக்கு மனமில்லை. மாமனார் பரிசாகிய வைர மோதிரத்தையாவது குறித்து வைக்கலாமென்றால் அதுதான் இன்றும் வாக்களிப்பு நிலையிலேயே இருந்து வருகிறது! இதை ராஜியிடம் சொன்னபொழுது, "நகை இல்லை என்று அவ்வளவு குறையாக இருந்தால் என் சங்கிலியைப் போட்டுக்கொண்டு போங்கள்! உங்கள் கழுத்துக்குப் 'பளிச்'சென்று தெரியும்!" என்றாள். [அவளைவிட நான் கொஞ்சம் நிறம் மட்டு என்பதை நாசுக்காக உணர்த்தினால்தான் அவளுக்குத் திருப்திபோலும்!] வெளிநாடுகளிலிருந்து தங்கமோ வைரமோ திரும்பும்பொழுது எடுத்துக் கொண்டு வருவதைத் தடுப்பதற்குத்தான் இந்த ஏற்பாடு என்று நினைக்கிறேன்.

ஒரு வழியாகத்துறைமுகத்தில் உள்ள பூர்வாங்க வேலைகளை முடித்துக்கொள்வதற்கு மணி 12 ஆகிவிட்டது. பிறகு கப்பலுக்குச் சென்றோம். கப்பல் என்னவோ, மூன்று மணிக்குத்தான் புறப்பட வேண்டும் இருந்தாலும் கப்பலைப் பார்க்கவேண்டும் என்ற அவா தூண்ட உள்ளே சென்றுவிட்

டோம். ஒரு விஷயம், கப்பலுக்குள் ஒரு பிரயாணி சென்றுவிட்டால் அவன் எக்காரணத்தைக்கொண்டும் கரைக்குத் திரும்பக்கூடாது. பாரத நாட்டின் புண்ணிய பூமியைவிட்டுப்போகிறோம் என்ற நினைவுடன் கப்பல் படிகளில் காலை வைத்தேன்.

கப்பல் பிரம்மாண்டமானது. எட்டு அடுக்குகள் இருக்கின்றன. என் அறை கீழே இருந்தது. I Class, Tourist Class என இருவகுப்புகள் இருக்கின்றன. Tourist Class-ல் அதிகம் பேர்பிரயாணம் செய்வதால் எல்லோருடனும் பழக, சந்தர்ப்பம் உண்டு. I Class-ல் கொழுத்த பணக்காரர்களும் ஏகாந்தமாக இருக்க விரும்புபவர்களுந்தான் செல்கிறார்கள். இரண்டரை மணிக்கு [அதாவது கப்பல் புறப்படுவதற்கு ½ மணிக்கு முன்] வழியனுப்ப வந்தவர்கள் எல்லாரும் இறங்கிவிட வேண்டும். என் மனைவியும் நண்பர்களும் சாவகாசமாக மூலை முடுக்கு விடாமல் கப்பலைச் சுற்றிப் பார்த்தார்கள். கப்பலில் வரி கிடையாதாகையால் சிகரெட் மிகவும் இலாபம். ஆகையால் சிகரெட் அன்பர்களான சில நண்பர்களுக்கு தாராளமாக ஊதுவதற்கு, சிகரெட் வாங்கிக்கொடுத்தேன். பிறகு எல்லாருமாகச் சேர்ந்து Verandah Cafe-க்குச் சென்று ஆளுக்கொரு cool drink ஆர்டர் செய்தோம். ஐந்து ரூபாய் நோட்டை நீட்டியதில் இரண்டு ஷில்லிங் சில்லறை கிடைத்தது. அதாவது ஐந்து cool drink-க்கு ரூ. 3-க்குமேல் விலை! அதற்குள் பிரயாணிகள் இறங்கவேண்டும் என்பதற்கு அறிகுறியாகச் சங்கு ஊதியது. என் நண்பர்கள் அவசர அவசரமாகப் பாதிப் பானத்தை அப்படியே வைத்துவிட்டு எழுந்தார்கள். ராஜி மாத்திரம், இவ்வளவு விலை கொடுத்து வாங்கிய ட்ரிங்கை விடமாட்டேனென்று சொல்லிக்கொண்டு முழுவதும்குடித்துவிட்டுச் சாவகாசமாக வெளியேறினாள்!

கப்பலைவிட்டு என் மனைவியும் நண்பர்களும் இறங்கிச் சென்றவுடன் நானும் மற்றப் பிரயாணிகளைப்போல் மேல் தளத்தில் நின்றுகொண்டிருந்தேன். அங்கிருந்து கரையில் என் நண்பர்களைப் பார்க்கமுடிந்தது. போய் வருகிறேன் என்று நான் கைக்குட்டையை அசைக்க, கரையிலிருந்தவர்கள் போய்வா என்று கைக்குட்டையை அசைத்தார்கள்? ஒரே கைக்குட்டை ஆட்டத்தில் யார் யாரைப் பார்த்து ஆட்டுகிறார்கள் என்பதுதான் தெரியவில்லை! இதற்குள் Gangway (கப்பலுக்குப்படி)ஐ அகற்றி, கப்பலைக் கரைக்கு இணைக்கும் கயிறுகளை ஒவ்வொன்றாக அவிழ்த்தார்கள். கப்பல் கொஞ்சம் நகர ஆரம்பித்தது புறப்படும்பொழுது இருந்த குஷி இப்பொழுது வீட்டையும் நாட்டையும் உற்ற மனைவியையும் விட்டுப்போவதில் இல்லை. போதாக்குறைக்கு ராஜி தன் கண்களைத் துடைத்துக்கொள்வதும் தெரிந்தது. பாவம்! கடலில் குதித்து நீந்தியாவது கரைக்குப் போய்விடலாமா என்று பார்த்தேன்! எனக்கு நீந்தத் தெரியாது என்பதுகூட அப்பொழுது மறந்துபோய்விட்டது! ஆனால், நான் அவசரத்தில் குதித்துவிடுவதற்குள் ராஜியும் மற்ற நண்பர்களும் எனக்காகக் காத்திராமல் திரும்பிச் செல்வது தெரிந்தது! உடனே வைராக்கியமும் திரும்பிவிட்டது! திரைகடலோடியும் திரவியம் தேடு என்ற முதுரையும் என் காதில் ஒலித்தது!

3. கப்பலிலே

கொஞ்சம் கொஞ்சமாகக் கரை மறைந்தது! பிறகு மேல் தளத்தை விட்டுக் கீழே இறங்கி, அவரவர்கள் காபினுக்குச் சென்றோம்.

என்னுடைய காபின் இருவர் இருப்பதற்கானது. என் கூட வந்தவனும் நம் ஊர்க்காரனாகப் போய்விட்டதில் எனக்குக் குஷியாகப் போய்விட்டது. ஒன்றுக்கு மேல் ஒன்றாக இரண்டு படுக்கைகள் இருக்கின்றன. [மெத்தை, கம்பளி எல்லாம் கப்பலிலே சப்ளை] நிலைக் கண்ணாடி, டிராயருடன் கூடிய மேஜை, பீரோ முதலியவையும் இருக்கின்றன. காபின் தண்ணீர் மட்டத்துக்கு அடியில் இருப்பதால் இரு குழாய்கள் மூலம் காற்று வருகின்றது. தண்ணீர்க் குழாய் ஒன்றும் Wash Basin ஒன்றும் இருக்கின்றன. குழாய் அருகே வசதியாகச் சோப், டம்ளர், துண்டு முதலியன வைக்கப்பட்டிருக்கின்றன.

கப்பலில் மாத்திரமல்ல, மேல் நாடுகளில் எங்கே சென்றாலும் இவ் வசதிகள் ஹோட்டல்களிலும் வாடகை வீடுகளிலும் சாதாரணமாக அளிக்கப்படுகின்றன. இது தெரியாத சிலர், பாவம் சிரமப்பட்டுப் படுக்கை கம்பளி முதலியவற்றைத் தூக்கிக்கொண்டு வந்திருப்பதைப் பார்த்துச் சிரிப்புத்தான் வந்தது.

காபினுக்கு அருகிலேயே கக்கூஸ் இருக்கிறது. [Commode system] சுத்திக்காக மேல்நாட்டார் காகிதத்தை உபயோகிக்கிறார்கள். நம்மவருக்கு அது அருவருப்பாக இருக்கும். நாங்கள் ஸ்நான அறைகளிலிருக்கும் ஜலத்தை உபயோகிக்க ஆரம்பித்தோம். தொட்டில் பழக்கத்தைத் திடீரென எப்படி மாற்ற முடியும்?

ஸ்நானத்துக்காகச் சிறு சிறு அறைகளாக ஒரு பெரிய ஹாலைத் தடுத்திருக்கிறார்கள். ஒவ்வொன்றிலும் ஷவர் இருக்கிறது. குளிர்ந்த நீர் வெந்நீர் இரண்டும் கிடைக்கின்றன. தொட்டியில் குளிக்க விரும்புபவர்களுக்குத் தனி அறைகள் இருக்கின்றன. 'கப்பலில் உப்பு நீர்தான் கிடைக்கும், குடிப்பதற்கு மாத்திரம் நல்ல ஜலம் கிடைப்பதே கஷ்டம்' என்று என்னைப் பயமுறுத்திய பிரகஸ்பதிகளை இந்த ஷவரின் கீழ் முழுக்கி எடுக்கலாம் என்று தோன்றியது, நல்ல தெளிந்த நீர் கொட்டுவதால் ஸ்நானம் செய்வது சுகமாகத்தான் இருக்கிறது.

காபின் ஸ்டுவர்டு முகத்தில் தான் நீங்கள் ஒவ்வொரு நாளும் விழிக்க வேண்டும். விடியற்

காலம் 5-மணிக்கே அவன் ஒரு Good-morning போட்டுக் கொண்டு கொஞ்சம் தேநீரையும் ஒரு பழத்தையும் கொண்டு வந்துவிடுவான். தேநீரில் நீங்கள் தான் பாலும் சர்க்கரையும் சேர்த்துக்கொள்ளவேண்டும். [டப்பாப் பாலும் சர்க்கரை மாத்திரையுந்தான்] மேல் நாட்டார் காலைக் கடன்களை முடிப்பதற்கு முன் படுக்கையிலேயே தேநீரை அருந்தும் வழக்கம் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். எனக்கு அப்பழக்கமில்லையென்றாலும் பணத்தைக் கொடுத்துவிட்டு என் பங்கை விடுவானேன் என்ற காரணத்தாலோ என்னவோ, நானும் அவர்கள் முறையைப் பின்பற்றலானேன்.

நாங்கள் சென்ற சமயம் ஆடிமாதக்கடைசி. ஆடிக்காற்று தன் முழுப் பலத்துடன் அரபிக் கடலில் வீசிக்கொண்டிருந்தது. நாம் ஆடிக்காற்று என்று குறிப்பிடுவதைத்தான் தென்மேற்குப் பருவக்காற்று என்று பூகோள பாஷையில் சொல்கிறார்கள். இக்காற்று அரபிக்கடலில் தென்மேற்கிலிருந்து வீசி இந்தியாவின் மேற்குக்கரைக்கு நல்ல மழையைக் கொடுக்கிறது. எங்கள் பெரிய கப்பல்கூட, பருவக்காற்று எழுப்பும் பிரம்மாண்ட அலைகளுக்கு முன் ஆட ஆரம்பித்தது.

கப்பலில் சாப்பிடும் வேளை போக மீதி நேரம் எப்படியாவது கழியவேண்டுமே? எத்தனை நேரம் தான் அலைகளைப் பார்த்துக் கொண்டு நிற்பது? அலைகள் என்றதும் ராஜியின் நினைவு வருகிறது. என்றாவது ஒருநாள் பீச்சுக்குப் போய் அலைகளைப் பார்த்துக் களிக்கும் இன்பத்துக்காக எத்தனை தவம் வேண்டுமானாலும் செய்யத் தயாராயிருப்பாள்! கப்பலைச் சுற்றி எங்குப் பார்த்தாலும் அலைகள், அலைகள், அலைகள். இவற்றைத் தவிர வேறு ஒன்றும் இல்லை என்ற நிலையில் அவை அலுத்துப் போயிருக்கும் என்று நினைக்கிறேன். ரிங் டென்னிஸ் விளையாட டெக்கில் வசதிகள் இருக்கின்றன. சாப்பிட்ட சாப்பாடு ஜீரணமாக வேண்டுமானால் டெக்கைச் சுற்றிச் சுற்றிப் போகலாம்! பத்துப் பிரதட்சிணம் செய்தால் ஒரு மைல்.

கப்பலில் முதல்நாள் காலைக் கடன்களை முடித்துக்கொண்டு கொஞ்சநேரம் ரிங்டென்னிஸ் ஆடினேன். பிறகு அலைகளைப் பார்த்துக்கொண்டு பலத்த யோசனையில் ஆழ்ந்தேன். அதுவும் அலுத்தவுடன் டெக்கைச்சுற்றி ஒருமுறை வந்தேன். பின் டெக்கில் என்போன்ற சோம்பேறிகளுக்கெனப் போடப்பட்டிருக்கும் சாய்வு நாற்காலி ஒன்றில் உட்கார்ந்தேன். கை கடிகாரத்தைப் பார்த்தால் மணி 8-20. இன்னும் காலை ஆகாரத்துக்கு மணி அடிக்கவில்லையே என்று நினைத்துக் கொண்டிருக்கும்பொழுதே கண கணவென்று சாப்பாட்டு மணி அடித்தது. அப்புறம் தான் மேற்கே போகப் போகக் கடிகாரத்தைப் பின் தள்ளி வைத்துக் கொள்ள வேண்டும் என்ற விஷயம் ஞாபகத்துக்கு வந்தது. பள்ளிக்கூடத்தில் கிரீன்விட்ச் நேரம், ஸ்தல நேரம், திட்டநேரம் என்றெல்லாம் பூகோள வாத்தியார் முட்டிக் கொண்டதும் பளிச்சென்று புரிந்தது!

சாப்பாட்டு அறையில் அவரவர்கள் இடத்தை ரிசர்வ் செய்து கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் நெருக்கடிதான்! கப்பலிலாவது இந்தியாவும் பாகிஸ்தானும் குலாவட்டும் என்ற எண்ணத்துடன் நானும் என் நண்பன் ரகுவும் இரு பாகிஸ்தானிகள் உட்கார்ந்திருந்த மேஜையில் உட்கார்ந்தோம். ஆனால் ஒரே ஒரு எச்சரிக்கை! நம்மவர்கள் பாகிஸ்தானி முஸ்லிம்கள் சாப்பிடும் மாமிசத்தின் அளவைக் கண்டு மூர்ச்சித்துவிடக்கூடாது!! அவர்கள் வாட்டசாட்டமாக இருப்பதில் வியப்பென்ன!

இன்னொரு விஷயம்: மேல்நாடு செல்லும் கப்பல்களில் பரிமாற வருபவர்கள் [servers] அநேகமாக வெள்ளையர்கள், நம்மைவிட மிக நாசுக்காக உடை அணிந்திருப்பார்கள். [Sir, Please] 'ஐயா, தயவுசெய்து,' என்று தான் பேச வேண்டும். 'டேய்! யாரங்கே' என்று நம் ஹோட்டல்களில் கத்துவதுபோலச் செய்தால் சாப்பாட்டு வாயில் மண் தான்.

'Menu'வைக் கையில் கொடுத்துவிடுகிறார்கள். அதிலிருந்து நமக்கு வேண்டியதைக்கொண்டு வரச் சொல்லலாம். முதல் item Mutton soup(மாமிசக் குழம்பு) அடுத்தது மீன். மூன்றாவது beef [பசு மாமிசம்] நான்காவது ஆடு. நான் ரகுவைப் பார்த்தேன். பாவம், பேயறைந்ததுபோல் உட்கார்ந்துவிட்டான்.

"என்னடா முழிக்கிறாய்? Corn flakes [அவல் போன்று செய்யப்பட்ட தானியம்] Vegetable Cutlet, வெந்த உருளைக்கிழங்கு, காப்பி இவை இருக்கின்றன, சாப்பிடலாம் என்றேன். நான் ஸ்டுவேர்டிடம் சொன்னதும் அவனும் அவற்றை மேஜைமீது கொண்டுவந்துவைத்தான். நான் பசி தாண்டச் சாப்பிட ஆரம்பித்தேன். ரகுவின் பங்கு அப்படியே இருந்தது. அவன் முகத்தில் ஈயாடவில்லை.

"ஏண்டா, அப்படியே உட்கார்ந்திருக்கிறாய்?" என்று கேட்டேன்.

"போடா, கட்லெட்டை மீனெண்ணெயில் பொரித்திருக்கிறார்களோ என்னவோ" என்றான் ரகு பரிதாபமாக. இதற்குள் அங்கே வந்த ஸ்டுவர்டு "காவோ, ஸாஹேப், நஹிதோ சிர் துகேகா" [சாப்பிடும் ஐயா, இல்லாவிட்டால் தலை வலிக்கும்] என்று அவனுக்குத் தெரிந்த அரைகுறை ஹிந்துஸ்தானியில் உரிமையுடன் உத்தரவிட்டான். "அப்ப நீ, அம்மை நீ........." என்றெல்லாம் ஆண்டவனைப் பாடியிருப்பதுபோலக் கப்பலில் ஸ்டுவர்டுதான் நம்மைக் கவனிக்கும் தாயார், மனைவி எல்லாம்!

கப்பலில் சாப்பாட்டு அறை. கத்தி, சட்டி, ஸ்பூன் முதலிய ஆயுதங்களை மேஜை மேல் காணலாம்!

சாப்பிடும்பொழுது பழக்கப்படாதவர்களுக்குக் கத்தியைக்கொண்டு வாய்க்கும் கைக்கும் சண்டைதான்! கத்தி, fork, ஸ்பூன் முதலியவற்றை உபயோகிக்க முதலிலேயே தெரிந்துகொள்வது நல்லது. ஆனல் இப்பொழுதெல்லாம் இந்தியக் கப்பல்களில் இந்தச் சிரமம் அவ்வளவாக இல்லை. நாங்கள் சென்றுகொண்டிருந்த கப்பல் ஆஸ்திரேலியக் கப்பலாகையால் பிரயாணிகளில் பெரும்பாலோர் வெள்ளையர்கள், அவர்களைப்போல் கொஞ்சமாவது வேஷம் போட்டாக வேண்டுமே! "ரோமாபுரியில் ரோமர்களைப்போல் நடந்து கொள்' என்று ஓர் ஆங்கிலப் பழமொழிகூட உண்டு. ரகுவுக்கு இது வேறு ஒரு பெரிய கஷ்டமாக இருந்தது. ஒரு வழியாகச் சாப்பிட்டு எழுந்தோம்.

திரும்பவும் டெக்கைச் சுற்ற ஆரம்பித்தோம். ஓர் அறையில் ஒரே கும்பலாக இருந்தது. பார்த்தால், குடிப்பதற்கெனப் பிரத்தியேக அறை! குடிப்பழக்கம் உள்ளவர்களுக்குக் கப்பல் பிரயாணம் குஷிதான். வேண்டுமளவுக்குக் குடியைப் போலக் குடிக்கலாம்! மது விலக்கினல் மனம் தளர்ந்திருக்கின்ற புட்டிபோடும் நண்பர்கள் சிலர் நினைவு வந்தது! அவர்கள் ஏடன்வரையாவது சென்று ஆசை தீரக் குடித்துவிட்டு வரலாம் என்ற யோசனை உதித்தது.

"அதோ பார்! அங்கே நெருப்புப் பிடித்துக் கொண்டுவிட்டது போலிருக்கிறதே, ஒரேபுகை" என்றுன் ரகு. நான் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன். அப்பாவி ரகு, பாவம், வீணுகப் பயந்து விட்டான்! அவன் பயத்தைத் தெளியவைக்க அவனை அந்த அறைக்கு அழைத்துச்சென்று காட்டினேன். வேறு ஒன்றுமில்லை சிகரெட் குடிப்பதற்கெனத் தனி இடம்!

பந்து விளையாடுவதற்கும் வசதி இருக்கிறது, நீந்தக் கற்றுக்கொள்வதற்கு என விசேஷ நீர்த் தொட்டிகளை அமைத்திருக்கிருர்கள். விளையாடலாம், டெக்கைச் சுற்றலாம், நீந்தலாம், குடிக்கலாம், புகைக்கலாம்—இன்னும் போதுபோக வில்லையென்றுல் இரவில் 'டான்ஸ்' ஆடலாம். புதிதாக வேண்டுமானல் கற்றுக் கொள்ளலாம் [பரதநாட்டியமல்ல, இங்கிலீஷ் டான்ஸ்] இதில் எந்த வகையிலும் பற்றில்லாமல் இருக்கும் என் போன்ற சோம்பேறிகளுக்கும் ஒரு வழி வேண்டு மல்லவா! போது போகவில்லையென்றுல் கற்பனை உலகில் சஞ்சரித்துக் கொண்டே ஹாய்யாக உட்கார்ந்திருப்பதற்கு ஜோரான சோபாக்களும் நாற்காலிகளும் போட்டு இடம் இருக்கிறது. இங்கேயே பத்திரிகைகள், நூல் நிலையம் முதலியன இருக்கின்றன. சீட்டு விளையாடுவதற்கும் சதுரங்க ஆட்டத்திற்கும் இங்கு வசதியுண்டு.

"அங்கே என்னமோ போர்டு போட்டிருக்கிறதே" என்று என் கவனத்தை இழுத்தான் ரகு. அங்கே சென்று பார்த்தோம். போட்டிப் பந்தயம் மாதிரி ஒன்று ஏற்பாடு செய்திருக்கிருர்கள். முந்திய தினத்திலிருந்து அன்றைய வரை அதாவது கடந்த ஒரு நாளில் கப்பல் எவ்வளவு மைல் வந்திருக்கிறதென்று சொல்லவேண்டும். பந்தயத்தில் பிரவேசிக்கப் பத்தணு கட்டணம். 12 மணிக்குச் சரியான தூரத்தைக் 'காப்டன்' அறிவிப்பார். சரியான விடை அறிவித்தவருக்கு வசூலான கட்டணத்தில் 90 சதவிகிதம். பாக்கி 10 சதவிகிதம் தர்மத்துக்காக. நானும் ரகுவும் ஒரு பிரைஸ் அடிக்கப் பார்த்தோம்! நம்முடைய அதிர்ஷடம்தான் தெரிந்தே இருக்கிறது!

இதற்குள் பகல் சாப்பாட்டுக்கு மணி அடித்து விட்டது. எங்களுக்குப் பசியே இல்லை. மணி 10 ஆகிவிட்டதே என்று சாப்பாட்டு அறைக்குப் போனேம். வீடா என்ன இஷ்டப்பட்ட பொழுது சாப்பிடுவதற்கு? திரும்பவும் மெனு கார்டில் [Menu Card] மீன், ஆடு, கோழி, பன்றி மாடு எல்லாம் காணப்பட்டன! மனிதன் தான் பாக்கி!! நாங்கள் சாப்பிடக்கூடியது என்ன என்று ஆராய்ந்து ரொட்டி, சாதம், காய் கறிக் குழம்பு [Vegetable Soup] Pudding முதலியவற்றைக் கொண்டுவரச் சொன்னேன். காய்கறிக் குழம்பில் என்ன காய்கறி என்று பார்த்தால் கோழி முட்டை! ஸ்டுவர்டைக் கேட்டால் இப்பொழுதுதான் எல்லாரும் முட்டை சாப்பிடுகிருர்களே என்றுன். Pudding என்பது வாயிலே கூட நுழையாத புதுப்புது பிரெஞ்சுப் பெயர்களுடன் கௌரவமாகத் தினந்தோறும் காட்சியளிக்கும் ரவா சொஜ்ஜி அல்லது ஜவ்வரிசிக் கூழ்!

சாப்பாட்டை முடித்துக் கொண்டு மூன்றுவது அடுக்குக்குச் சென்றேம். வரிசையாகப் போடப்பட்டிருந்த சாய்வு நாற்காலிகளில் சில பிரகிருதிகள் கம்பளிகளை இழுத்துப் போர்த்திக் கொண்டு சாய்ந்துகொண்டிருந்தார்கள். பாவம்—அவர்களால் கப்பல் ஆட்டத்தையும் குளிர்ந்த கடல் காற்றையும் தாங்கமுடியவில்லை. "இது என்ன, இப்படிக் கிழங்கள் மாதிரி படுத்துக் கொண்டு விட்டார்களே" என்று சிரித்தான் ரகு

'இன்று தானப்பா முதல் நாள். நாளைக்குள் நம்பாடு எப்படியோ! அதற்குள் அவசரப்பட்டுப் பேசாதே" என்று நான் வேடிக்கையாக எச்சரித்தேன்.

கப்பல் ஆட்டத்தினுல் முக்கால்வாசிப் பேருக்கு வயிற்றுக் குமட்டலும் தலைவலியும் வாந்தியும் வந்துவிடுகின்றன. கடல் வியாதி என்று சொல்வார்கள். கர்ப்பிணிகளுடைய மசக்கைக்கு ஒப்பிடலாம்!!!

ஒரு மூலையில் சலூன் காணப்பட்டது. காடு மாதிரி தலையை வளர்த்துக் கொண்டிருந்த ரகு உடனே அங்கு நுழைந்துவிட்டான். அங்கிருந்த ஆசாமி மின்சார ரேசர் [Razor] மூலம் வேலையைக் கிடுகிடுவென்று 5 நிமிஷங்களில் முரட்டுத்தனமாக முடித்துவிட்டு 7 ஷில்லிங் என்று கையை நீட்டினுன் [ரூ, 4—6—0]. பூர்வ ஜன்மத்துக் கடன்! வேறு என்ன செய்வது, பேசாமல் பணத்தைக் கொடுத்துவிட்டு முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு வந்தான் ரகு. ஊசியிலைக் காடுகளும் முட்புதர்களுமாகத் தலையில் எவ்வளவு அடர்ந்து வளர்ந்தாலும் சலூன் பக்கம் எட்டிப்பார்ப்பதில்லை என்று நான் புத்திசாலித்தனமாகத் தீர்மானம் செய்துகொண்டேன்! கப்பலைவிட்டு இறங்கியபின் ஒரு வழியாக இங்கிலாந்தில் கிராப் செய்துகொண்டால் போயிற்று! ஆனுல் அங்கே ‘ரேட்’ எப்படியோ தெரியாது! மொத்தமாக இந்தியாவிலேயே க்ஷவரம் செய்து கொண்டு வந்துவிடலாமென்றுல் இயற்கை ஒத்துழைத்தால்தானே!

பகலில் அரை வயிற்றுக்குச் சாப்பிட்டிருந்த சாப்பாடு ஜீரணமாகிவிட்டது. பசி வயிற்றைக் கிண்டியது, கடையைத் தேடிச் சென்றோம், அங்கே சாக்லேட்டைத்தவிர வேறு ஒன்றும் சாப்பிடும் பொருள் இல்லை. காமிரா முத்துமாலை இன்னும் என்னென்னவோ சாமான்கள் இருந்தன. ஆளுக்கு நான்கு சாக்லேட்டை வாங்கிக் கொண்டு வெளியேறினோம்.

விலை மதிப்புள்ள சாமான்கள், செக்குகள் முதலியவற்றைப் பந்தோபஸ்துக்காக [Purser] இடம் கொடுத்துவைக்கலாம். செக்குகளை வேண்டுமானுல் பணமாக மாற்றிக்கொள்ளலாம்.

திடீரென்று தன் மனைவிக்குக் கடிதம் எழுத வேண்டும், ‘கவர்’ [Cover] வேண்டும் என்று நச்சரிக்க ஆரம்பித்துவிட்டான் ரகு. கவர்கள், ஸ்டாம்புகள் முதலியன எங்கே கிடைக்கும் என்று விசாரிக்க [Information Bureau]வை நாடிச் சென்றோம். அங்கேயே ஸ்டாம்புகள் முதலியன கிடைத்தன. அங்கங்கே கப்பல் துறை முகத்தில் நிற்பதற்குப் பத்து நிமிஷங்கள் முன்னுல் கடிதத்தைத் தபாலில் சேர்த்துவிட்டால் கடிதம் ஏர்மெயில் மூலம் போய்ச் சேர்ந்துவிடும். அதற்கப்புறம் ரகுவுக்கு டெக்கில் ஏன் இருப்புக் கொள்கிறது! அறைக்குத் திரும்பப் போகலாம் என்றுன். “வந்தது வந்தோம் டெக்கைச் சுற்றிக் கொண்டேபோகலாம்” என்றேன்.

குழந்தைகளுக்கு விளையாடுவதற்கெனத் தனி அறை. ஆடும் குதிரை, சிறிய மோட்டார்கள், முதலிய கவர்ச்சிகரமான விளையாட்டுச் சாமான்கள் ஏராளமாக வைக்கப்பட்டிருக்கின்றன. குழந்தைகளுக் கேற்றுற்போல் சிறிய நாற்காலிகள், மேஜைகள், அலமாரிகள் முதலியன இருக்கின்றன. கப்பலில் அவர்கள் அங்குமிங்கும் அலையாமல் ஒரே ஹாலில் விளையாடுவதற்கும் இந்த ஹால் சௌகரியமாக இருக்கிறது. நாம் குழந்தையாக இருந்தபொழுது இப்படியெல்லாம் கப்பல் பிரயாணம் செய்யாமல் போய்விட்டோமே என்று ஏங்கினேன்! டீயைச் சாப்பிட்டுவிட்டு அறைக்கு வந்தோம் “தோய்க்க வேண்டிய துணிகளை என்ன செய்வது?” என்று கேட்டான் ரகு. நான் மணியை [Calling Bell] அழுத்தினேன். காபின் ஸ்டுவர்டு வந்தான். “எந்தத் துணிகளைத் தோய்க்க வேண்டும் சொல்லுங்கள். லாண்ட்ரியில் போட்டுவிட்டு வருகிறேன்” என்றுன். சலூன் விஷயத்தில் ரகு ஏமாந்தது போல் நான் ஏமாற விரும்பவில்லை! price list ஐ [வண்ணுன் கூலி விவரம்] வரவழைத்தேன். ஒரு ஷர்ட்டுக்கு ரூ 2—8—0, ஸூட்டுக்கு ரூ 5, ஸாக்ஸுக்கு 10 அணு அவ்வளவு தான்!] “மூட்டை கட்டி வைக்கிறோம், அப்புறம் வா” என்று காபின் ஸ்டுவர்டை முதலில் வெளியே அனுப்பிவிட்டோம்! ஓர் அறையில் துணிகளைத் தோய்த்துக் கொள்ள எல்லா வசதிகளும் இருக்கின்றன. மின்சாரத்தினுல் இயங்குகின்ற தோய்க்கும் தொட்டி, பிழியும் தொட்டி, இஸ்திரிப் பெட்டி, முதலியன இருக்கின்றன. அன்றன்றைய துணிகளை அழகாகத் தோய்த்து உடனேயே உலரச் செய்து இஸ்திரி போட்டுக்கொள்ளலாம். கப்பலில் அதைவிட வேறு வேலை தான் என்ன இருக்கிறது! இதிலாவது கொஞ்சம் பொழுது போகுமல்லவா!

கப்பலில் பிரயாணத்தின்பொழுது உபயோகத்துக்கென 4 காக்கி நிஜார்கள், 4 ட்ரௌசர், நல்ல ஸ்வெட்டர் ஒன்று அல்லது இரண்டு. தோய்க்கக் கூடிய ஷர்ட்டுகள் பனியன்கள் முதலியன எடுத்துக்கொண்டால் போதுமானது. இதைவிட்டுவிட்டு உயர்ந்த ஸூட்டாகவும் பூட்ஸாகவும் அணிந்து கொண்டால் அவஸ்தைப்பட வேண்டியதுதான்!

திரும்பவும் டெக்குக்குப் போக ரகுவை அழைத்தேன். அவனே பதில் பேசாமல் கைகழுவும் பேசினை [wash bassin] நாடிச் சென்றுன்! வேகமாக! என்ன, என்ன என்று கேட்டுக் கொண்டு நானும் அவனருகே சென்றேன். வேறு ஒன்றுமில்லை. கப்பல் புறப்பட்டதிலிருந்து சாப்பிட்ட உணவுப் பொருள்களெல்லாம் ஒன்றன்பின் ஒன்றுக க்யூ வரிசையில் வெளியே வந்துவிட்டன, அவ்வளவுதான்! பாவம் கிழங்கள் என்று மற்றவர்களைப் பரிகசித்த அவனுக்கே இப்பொழுது கப்பலின் ஆட்டம் ஆகவில்லை! “ஐயையோ! தலையை ஒரேயடியாகச் சுற்றுகிறதே” என்று அலறினுன். “நன்றுயிருக்கிறது நல்ல கிழமாக இருக்கிறுயே!” என்று

சொல்லிக் கொண்டே அவனைப் படுக்கையில் இருத்தினேன். டாக்டரை உடனே கூப்பிட்டு வந்தால்தான் ஆயிற்று என்றான். டாக்டரும் வந்தார், Sea-sickness [கப்பல் பிரயாணத்தால் வயிற்றுப் புரட்டல்] என்று வியாதியை மிக்க திறமையுடன் சட்டென்று diagnose செய்தார். Dramamine மாத்திரையும் ஆஸ்பிரின் மாத்திரையும் கொடுத்தார். 10 ஷில்லிங்குக்குப் பில்லும் தொடர்ந்தது! தலைசுற்றல் மயக்கத்தில் முடியாத வரை க்ஷேமந்தானே!

ரகுவை மெள்ள மேல் தளத்திற்கு அழைத்துச் சென்று 'ஈஸிசேர் ஆஸ்பத்திரியில்' அவனை ஒரு Patient ஆக 'அட்மிட்' செய்தேன். [Sickness க்குக் குளிர்ந்த காற்றுதான் சிறந்த மருந்து] இரவு சாப்பாட்டுக்கு நான் தனியாகவே சென்றேன். மறுபடியும் அதே ரொட்டி, உருளைக் கிழங்கு, pudding ஐஸ்க்ரீம் ஓர் ஆப்பிள்தான் அதிகப்படி! சாப்பிடும்பொழுது மணி ஏழு; ஆனால் இன்னும் பொழுதுசாயவில்லை. [இது என்ன கதை விடுகிறேன் என எண்ணுகிறீர்கள். கோடையில் வடக்கே செல்லச் செல்ல, சந்தியா காலம் அதிக நேரம் நீடித்திருக்கும். வடதுருவத்தினருகே விடியற்காலம்வரை சந்தியாகாலமாகவே இருப்பதால் சுமார் ஆறு மாதத்துக்கு அங்கு இரவே கிடையாது! குளிர்காலத்திலோ பகலே கிடையாது! ஒரு காலத்தில் இப்பிரதேசங்கள் தான் தேவலோகமாக இருந்திருக்க வேண்டும்!] சாப்பிட்டுவிட்டு நண்பனைக் காணச்சென்றேன். கப்பல் அரபிக்கடலைத் தாண்டும்வரை அவனுக்கு ஈஸிசேரைத் தவிர வேறு கதியில்லை என்று தோன்றியது! பல பிரதாபசிம்மர்கள் தங்கள் பெருமைகளை ஆனமட்டும் புகழ்ந்துகொண்டிருந்தார்கள்! நடுக்கடலில் அவர்கள் எவ்வளவு புகழ்ந்துகொண்டாலும் மெய்யும் பொய்யும் யார் கண்டார்கள்! ஒருத்தனாவது மகாராஜா பதவிக்குக் குறைந்தவனாகச் சொல்லிக்கொள்ளவில்லை; சிலர் இரவு நேரத்தைப் போக்க டான்ஸ் கற்றுக்கொள்ள ஆரம்பித்தார்கள்.

காபின் மிகவும் புழுக்கமாக இருந்ததால் நானும் மேல் தளத்திலேயே போய்ப் படுத்துக் கொண்டேன். தவிர, ஸீ சிக்னஸ் வருமுன் காப்பது நல்லதல்லவா!

(தொடரும்)

குழந்தைகளுக்கு
இன்றியமையாத
டானிக்

டோங்ரேயின் பாலாம்ருதம்

K. T. டோங்கரே அண் கோ., பம்பாய்-4.

மனமும் மணமும்

தி. சேஷாத்திரி

கோபாலய்யர் வீட்டுக்குள் நுழையும்போதே 'அடி, நம் லோகநாயகி அதிர்ஷ்டக்காரி தான்' என்று சொல்லிக்கொண்டே தான் நுழைந்தார்.

உடலையும் மீறியது மனம்! என்று சொல்வது எவ்வளவு தூரம் உண்மை என்று அவரைப் பார்த்தவர்கள் அப்பொழுது தெரிந்துகொள்ளலாம்.

சுமார் பன்னிரண்டு மைல் உக்ரமாக மேலேறும் வெயிலில் நடந்து வியர்த்த உடல்; அந்த வியர்வையில் ஒட்டியும், அவர் வேஷ்டிகளில் பரவியும் நிறத்தை மாற்ற முயலும் புழுதி; இரண்டும் அவர் அவர்தானா என்ற சந்தேகத்தை விளைவித்தன. புயலில் சிக்கிய கப்பல் பாய் கிழிந்து பலகை உடைந்து திரும்புவதுபோலத் திரும்பியிருந்தார். என்றாலும் முகத்தில்மட்டும் களைப்பின் குறிகளையே அழித்து எழும்பும் ஒரு இன்பத் தேஜஸ் வெளியேறிக்கொண்டிருந்தது.

கையில் விசிறியுடன் வெளியேறினாள், அவள் தர்மபத்தினி அவயாம்பாள். மூட்டையைக் கீழே இறக்கி வைத்துவிட்டு, கோபாலய்யர் விசிறியைக் கையில் வாங்கிக்கொண்டு பெஞ்சியின்மேல் உட்கார்ந்தார்.

"சரியான வரன். நல்ல அழகு; மன்மதன் தான். நல்ல லக்ஷணம்........."

"சொத்து சுகம் இருக்கிறதோ?"

"பயப்படாதே, சொல்கிறேன். நல்ல ஆற்றுப் பாய்ச்சலில் பத்து வேலி நிலம். கிராமத்தில் லக்ஷ்மி வாசம் செய்கிற வீடு. மாயவரம் டவுனில் வேறு ஒரு வீடு இருக்கிறது."

"அப்படியானால்......?"

"அப்படியானால் என்ன? நம்மிடம் ஒரு தம்பிடி கூடக் கேட்கமாட்டார். எல்லாம் அவரே செய்து கொள்கிறார்......"

"என்ன இரண்டாவது......!"

"ஆமாமடி ஆமாம். அதற்கெதற்கு இவ்வளவு பயப்படுகிறாய்? வயது சரியாக நாற்பதேதான் ஆகிறது. ஜாதகமே இதோ இருக்கிறது, எண்பது வயதுவரை சாகமாட்டார். ஆளைப் பார்த்தால் யாருமே மயங்கி விடுகிறார்கள். ஏதோ நம் அதிர்ஷ்டம் நம்முடைய லோகநாயகியைக் கல்யாணம் செய்துகொள்ளச் சம்மதித்திருக்கிறார்..."

அவர் மழைபோல் பொழிந்து கொண்டிருந்தார். மழையிலும் ஒருவிதப் புல் வாடி எரியுமாம்.

அவயாம்பாளும் இதைக் கேட்டுக் கொஞ்சம் வாடினாள். எரிவதற்குமுன் அந்தப் பொழிவிலிருந்து தப்பி, சமையலறைக்குச் சென்றுவிட்டாள். போகும்போதே– நேரம் ஆய்விட்டது. சமையல் தயாராயிருக்கிறது. ஸ்நானம் செய்துவிட்டு வாருங்கள் பாபம், நேற்று எப்பொழுது சாப்பிட்டதோ! என்று சொல்லிக்கொண்டே போனாள்.

நாளையே பெண் பார்க்க வருகிறார்—என்றார் கோபாலய்யர் எழுந்தவாறே.

"இளையாளுக்குப் பெண் பார்ப்பது வேறு"

"அவர் வேண்டாம் என்றுதான் சொன்னார். நான்தான் வாருங்கள், மறுநாளே நிச்சயதார்த்தத்தையும் செய்துவிடலாம் என்று சொன்னேன்."

"சரி"

2

மறுநாள் அவயாம்பாள் லோகநாயகிக்கு அலங்காரம் செய்துவிட்டாள். லோகநாயகி ஏழ்மையிலே பிறந்து ஏழையாகவே வளர்ந்தவள். ஏழ்மை மணத்துக்கும் குறுக்கே நிற்கும் என்று கண்டவள், பணக்காரப் புருஷன் வருகிறான் என்றவுடன் அவன் வயதை முற்றிலும் மறந்துவிட்டாள். தாயிடமும் "பயப்படாதே அம்மா நீ கஷ்டப்பட்டது போதும்" என்று ஆசுவாசம் செய்துவிட்டாள். அவளும் ஒருவாறு தன் துக்கத்தை மறந்து லோகநாயகிக்குத் தலைவாரிப் பின்னிவிட்டாள். இருக்கிற நகையை எடுத்துப் போட்டாள். ரொம்ப நாளாக உள்ளே வைத்திருந்த தன்னுடைய புடவையை எடுத்து மாம்பழ முடிவைத்து உடுத்திவிட்டாள். நெற்றியை அலம்பிவிட்டு ஒரு சாந்துப் பொட்டையும் இட்டுவிட்டாள். அப்பொழுது லோகநாயகியைப் பார்த்தாள். அப்படியே அவள் உள்ளம் நெகிழ்ந்தது. தாயின் முகக்களை உடைய அவள் நல்ல சிவப்பாயிருந்ததனால் அவள் யாரையும் ஒரு லோகநாயகனாக ஆக்கிவிடுவாள் போலிருந்தது, தாயுள்ளம் கோழையாயிற்று. திருஷ்டி கழித்துவிட்டுச் சமையலறைக்குச் சென்றாள்.

வேறு ஒன்றும் இல்லாவிட்டாலும் பெண்ணாவது நன்றாயிருக்கட்டுமே என்ற எண்ணம் அந்த நாற்பது வயது மிராசுதார் நாராயணசாமிக்கு.

அவருக்கு எவ்வளவோ வரன்கள் வந்திருந்தும் இந்த வரனைப் பார்த்தெடுத்ததற்கும் ஒரே காரணம் ஜாதகம் மிகஉயர்ந்த ஜாதகம் என்றதுதான். ஜாதகம் பார்த்தவர், இவள் மிக நல்ல இடத்தில் வாழ்க்கைப்பட வேண்டும் என்று சொன்னார். இதைவிட நல்ல இடம் என்ன? ஆகவேதான் நாராயணசாமி ஒப்புக்கொண்டார். பெண் நல்ல அழகும், நல்ல உடல் கட்டும், குணமும் பொருந்தியவளாக இருப்பாள் என்று கேள்விப் பட்டிருந்தார். எதற்கும் நேரில் பார்த்து முடிவு செய்வதாகச் சொல்லிவிட்டார்.

குறிப்பிட்ட மறுநாளே நாராயணசாமி தமக்கு ஒன்றுவிட்ட தங்கை, சிறிய தாயார் இவர்களுடன் வந்து சேர்ந்தார்.

கூடத்தில் பாய்விரிக்கப்பட்டது. எதிரே அவர்களே கொண்டு வந்திருந்த தட்டில் வெற்றிலை, பாக்கு, பழம் எல்லாம் வைத்தனர். சாக்கிலே தைத்த பட்டுப்பூப் போல் அவர்கள் அங்கே இருந்தது அந்த வீட்டுக்கே ஒவ்வாது இருந்தது. எங்கே பார்த்தாலும் ஏழ்மைத் தேவதை தன் அழகைப் பரப்பியிருந்தாள். அங்கங்கே ஒடிந்த தூண், தொங்கும் சரங்கள், பிரிந்த கூரை இதுவே நான்கு பக்கங்களிலும் மேலேயும் தோன்றிய தோற்றம். கீழேயோ பெருச்சாளிக்கும் வீட்டுக்காரர்களுக்கும் தினந் தோறும் நடக்கும் போட்டியின் அமர்க்களமாக விளங்கியது. பெருச்சாளி இரவே அறுத்துக்கொட்ட வீட்டுக்காரர்கள் மறுநாள் பகலில் அதை அடைத்துப் புது மண் போட்டு மெழுகி, சாணி போட்டுத் துடைத்து வைக்க, இந்தவிதமாக அவர்கள் இரு கூட்டங்களிடையேயும் உரிமைப் போராட்டம் நடந்து வந்திருக்கிறது என்று குண்டும் குழியுமாக இருந்த தரை எடுத்துக் காட்டிற்று. வேறு பெரிய பண்ணையார் வீட்டில் அழைத்துக் காட்டியிருக்கலாம். அதற்குக் கோபாலையரும் தயார் தான். ஆனால் அவயாம்பாள் தடுத்து விட்டாள். ஏழை என்றுதானே இவளை யாள் கொள்கிறார்கள். பிறகு என்ன பணமோகம்? அதிலும் வேஷம் வேறா? என்று அதட்டிவிட்டாள். அந்த அதட்டலில் "தான் ஏழைக்கும் இளையாளாக வாழ்க்கைப்பட நேர்ந்த வருத்தம்" தடித்து ஊதுவது நன்றாய்த் தெரிந்தது. கோபாலய்யர் பதில் பேசாமல் இங்கேயே ஏற்பாடு செய்துவிட்டார்.

அவயாம்பாள் உழைப்புச் செல்வம் நிறைந்திருந்ததைக் கொட்டிக் காட்டுவதில் குறைவைக்கவில்லை. நன்றாய்ப் பெருக்கி கரியும் சாணியும் போட்டு மெழுகி, தேய்கல் போட்டுத் தேய்த்து வைத்திருந்தாள். நன்றாய் மாக்கோலம் இட்டு அழகாக்கியிருந்தாள். அதைப் பார்க்கும்போது இவள் இருக்கும் இடத்தில் படாடோப ராணி இல்லாதுபோனாலும் மூதேவி கண்டிப்பாய் நெருங்கமாட்டாள் என்பது நிச்சயமாய்த் தெரிந்தது.

வந்து உட்கார்ந்தவர்கள் அதை ஒன்றையும் கவனிக்கவில்லை. நாராயணசாமி கணீர் என்ற குரலில் வரச்சொல்லுங்களேன்! என்றார். அவயாம்பாள் கேட்டாள். குரல் அவள் உள்ளே புகுந்து ஒரு திருகு திருகிற்று. இது என்ன எங்கேயாவது கேட்ட குரலா? இதயக் கேணியின் ஆழத்திலிருந்து மறதி என்னும் சேறு, காலம் என்னும் நீர் தூரம் எனினும் இடைவெளி எல்லாம் தாண்டி அறிமுகமானகுரல் கேட்டதுபோல் உணர்ந்தாள். மெதுவாகப் பெண்ணை மீண்டும் ஒரு முறை அலங்காரத்தைச் சரிபண்ணிவிட்டு அவளைச் சமையலறையில் இருந்து வெளியே அழைத்துவந்தாள். அவர்கள் எதிரே வந்தவுடன், 'போ அம்மா போய் நமஸ்காரம் செய்துவிட்டு வா' என்று சொன்னவள் மாப்பிள்ளை ஸ்தானத்தில் அமர்ந்திருந்த நாராயணசாமியைப் பார்த்தாள். நாராயணசாமி அதற்குள் ஒரு தடவை பெண்ணையும் தாயையும் பார்த்துவிட்டார். ஏதோ திடீர் என்று நீரில் பெரும் அலைபோலவும், பூமி எதிர்த்து எழும் ஊற்றுப் போலவும் எழுந்து உருண்டு பரவும் ஒரு எண்ணத்தின் பாரத்தால் தலை குனிந்திருந்தார். அதே சமயம்தான் அப

யம் அவரைப் பார்த்தது. 'ஆ' என்றது அவள உள்ளம். இதயம் ஒரு நிமிஷம் நின்று அடித்தது. உடல் வியர்த்தது. கால்கள் தள்ளாடின. உள்ளம் படபடத்தது. மூளை அவளைச் சமையலறைக்குச் செல்லத் தூண்டிற்று. அப்படியே சுவரைப் பிடித்துக்கொண்டு உள்ளே சென்றாள். சென்றவள் தன்னை மறந்தாள்.

3

அது பதினெட்டு வருஷத்துக்கு முந்தி நடந்தது. அவயம் அப்பொழுது பதினேழு வயதைத் தாண்டிக்கொண்டிருந்தாள். நல்ல அமைப்புக் கொண்ட உடல். பதினேழாவது வயதுக்கே ஒரு மந்திர சக்தி உண்டு. இரண்டும் சேர்ந்து அவள் நன்றாய்த் தான் இருந்தாள், முகப்பொலிவும் நன்றாய்த்தான் இருந்தது. ஆனால் நிறம்மட்டும் கறுப்பு; கறுப்பு என்றால் நல்ல கறுப்பு. அதனால் தான் அவள் மணம் பதினேழு வயது வரை தடங்கற்பட்டு வந்தது. கடைசியாக ஒரு பையன் வந்தான். அவன் ஏழை வீட்டில் வளர்ந்தவன். ஆகவே அவன் கண்டிப்பாய் மணந்து கொள்வான் என்று நினைத்த பெற்றோர் ஏமாந்தனர். அவள் இவ்வளவு கறுப்பா? என்று கேட்டவன் அங்கேயே 'வேண்டாம் இவள்!' என்று சொல்லிவிட்டான். வெளி அழகும் உள் அழகும் சேர்வது சிரமம். அவன் வெளித் தோற்றம் நன்றாயிருந்தது. உள்ளம் அந்தச் சமயம் அழுக்குக் குட்டை. அவயம் நல்ல குணம் உள்ளவன்தான் என்றாலும் வெளியழகு?

ஐந்தாறு பையன்கள் பார்த்துவிட்டுப் போனாலும் அவள் அவனை மட்டும் மறக்கவில்லை. ஆனால் அவனைப் பற்றிய பிந்திய சேதி ஒன்றும் அறிய மாட்டாள். அவள் உள்ளம் மாத்திரம் அடிக்கடி அவன் கற்பனைத் தோற்றத்தைச் சுற்றிக்கொண்டிருந்தது.

இன்றும் அதே மாதிரி இருக்கிறாள் அவள்! பதினேழு வருஷங்களில் எவ்வளவோ மாறிவிட்டது உலகம். பணக்காரனுக்கு இளையாளாக வாழ்க்கைப்பட்ட அவள் ஏழையானாள். கெட்ட குணம் படைத்த அவள் கணவன் குணம் மாறிற்று. ஒரு பெண்ணுக்குத் தாயானாள். இதே நாராயணசாமி ஒரு பணக்காரத் தந்தைக்குத் தத்துப் புத்திரனாகி, இன்று பணக்காரனாக ஆகி மீண்டும் இரண்டாம் மனைவி ஏற்க இவளிடையே வந்திருக்கிறான்!

அவள் தலை சுற்றிற்று!

தனக்குக் கணவனாக வர இருந்தவன் இன்று தன் மகளுக்குக் கணவனாக ஆவதா?

அவள் மனம் புரட்சி செய்தது; முடியாது! பல காரணங்களால் முடியாது. நான் அவனை மணந்திருந்தால் இன்று அவன் இவளுக்குத் தந்தையாயிருப்பான். தந்தைக்கும் மகளுக்கும் மணமா?

அவள் என்னென்னவோ யோசித்தாள்!

அவள் பெண் மற்றெல்லா வகையிலும் தாய்போல் தான் ஆனால் நிறம் மட்டும் தந்தையினுடையது. நல்ல கதுப்புக் கதுப்பாய்க் கன்னங்களும் அகன்று கருத்த விழிகளும் உள்ள

அந்தப் பெண் சிவப்பாயும் இருந்ததால் மன்மதன் கூட மனம் தடுமாறும் நிலையில் இருந்தாள். அவன் அன்று கேட்டதும் அதைத்தானே! இன்று சரி என்று சொல்லிவிடுவானே?

கூடாது சரி என்று அவன் சொன்னாலும் அவள் சம்மதிக்க மாட்டாள்!

அடி! அவர்கள் போய்விட்டார்கள்.

அவயம் தலை நிமிர்ந்தாள். அவள் கண்கள் சிவந்திருந்தன. முகம் உள்ளே நடக்கும் பேய்ப் போரின் ரத்தக் களமாயிருந்தது.

தன்னைச் சுதாரித்து எழுந்து நின்றாள்.

''ஏன்? என்ன சொன்னார்கள்?''

'போய்ப் பதில் எழுதுவதாகச் சொல்லிவிட்டார்'

''ஊம்'' அவள் என்ன கேட்பாள் மேலே? அவர் சொல்லிச் சென்றார்;

அவர் முதலில் மிகவும் சம்மதமாகத்தான் பேசினார். பெண்ணை மிகவும் பிடித்திருக்கிறது என்று சொன்னார். ஆனால் கடைசியில் உன்னைப் பற்றி விசாரித்தார். எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு, போய் வருகிறேன்'' என்று சொல்லி விட்டார்.

அவயம் சற்று நேரம் பதில் சொல்ல வில்லை.

கடைசியில் திடீர் என்று—லோகநாயகி எங்கே என்றாள்.

லோகா வந்தாள்.

லோகா உனக்கு மாப்பிள்ளைபிடித்திருக்கிறதா? என்றாள். லோகநாயகி இந்தப் பழக்கமிலலாத கேள்வியைக் கேட்டு ஆச்சரியத்தால் விழி மலர்த்தி—'என்ன அம்மா அப்படிக் கேட்கிறாய்!'

'சொல்லேன்!'

'நான் என்னத்தை அம்மா கண்டேன் நீங்க சொன்னால் கேட்கிறேன்.''

அவள் வேறு ஒன்றும் சொல்லமாட்டாள் என்று தெரியும். அவயம் தன் கணவரிடம் அவர்கள் வெகுதூரம் போய் விட்டார்களா? என்று கேட்டாள்.

'ஆம் காரில் போகிறவர்கள் அல்லவா? ஏன் எதற்காகக் கேட்கிறாய்?'

'ஒன்றுமில்லை; மறுபடியும் இங்கேயே கேட்டு விடலாம் என்று பார்த்தேன். சரி போகட்டும். பதில் எப்படி வந்தாலும் பரவாயில்லை."

பதில் வந்தது.

ஸ்ரீ கோபாலய்யருக்கு வணக்கம் நான் உங்கள் பெண்ணை மணக்க முடியாது. என் மனம் சம்மதியாது.

ஆனால் நீங்கள் பயப்படவேண்டாம். எனக்கு ஒன்றுவிட்ட தம்பி ஒருவன் இப்பொழுது I. A. S, எழுதியிருக்கிறான்; பதிலும் வந்துவிட்டது. சீக்கிரமே வேலை கிடைத்துவிடும். அவன் தங்கையும் தாயும்தான் அன்று வந்திருந்தார்கள். அவர்கள் பார்த்ததே போதும் என்று சொல்லிவிட்டான் அவன். ஆகவே தேதி முதலியன குறித்து எழுதுங்கள் பணச்செலவைப்பற்றி நீங்கள் கவலைப்படவேண்டாம்''



இதைக் கண்டதும் கோபாலய்யர் அதிசயப்பட்டார். காரணத்தைச் சொல்வதா சொல்லக் கூடாதா என்று அவயத்துக்கும் புரியவில்லை. இது என்ன ரஹஸியம்? என்று அவர் மனைவியைக் கேட்டார்.

அவள் தனக்குத் தெரிந்ததைச் சொல்லிவிட்டு, நான் அவர் என் பெண்ணை மணப்பதை விரும்பவில்லை, என்றாள்.

அவரும் அப்படியே தான் நினைத்திருக்கிறார். ஆனால் என்னிடம் ஏன் சொல்லவில்லை?

'எப்படிச் சொல்வது? சொன்னால் நீங்களும் தான் என்ன நினைப்பீர்கள்? என்று கேட்டாள் அவயம்.

"என்ன நினைப்பது? உன்னுடன் நான் இவ்வளவு நாள் பழகவில்லை? உன் குணம்கூடத் தெரியாத கேடனா நான்!"

'போகட்டும் போங்கள். எப்படியாவது லோகநாயகி நன்றாயிருந்தால் சரி"

அதே சமயம் லோகநாயகி ஒரு போட்டோவுடன் ஓடிவந்தாள்.

"அம்மா இந்தப் படத்தைப் பார்த்தாயா அம்மா? என்று அதைத் தன் தாய் கையில் கொடுத்தாள்.

எல்லாம் அது உன் அதிர்ஷ்ட ஆம்படையான் படம்தான்! என்றார் கடைசி வாக்கியத்தை அப்பொழுதே படித்த கோபாலய்யர். அதில் எழுதியிருந்தது: என்ன இருந்தாலும் லோகநாயகிக்குத் தனக்கு வர இருக்கும் கணவனைப் பற்றி அறிய ஆவலிருக்குமாதலால் அவன் போட்டோ ஒன்றை அனுப்பியிருக்கிறேன்!

"சரிதான்; கவரைப் பிரிக்கும் பொழுது படம் கீழே விழுந்திருக்கும்!" என்று சொல்லிக் கொண்டே அவயம் படத்தைத் தன் மகளிடம் கொடுத்தாள்.

அவளும் அதை நாணிக் கோணிக் கொண்டே வாங்கிக்கொண்டாள்.

பாக்கியம் பிரிந்து, தாய்தந்தை அறியாமலேயே லோகநாயகியின் அதிர்ஷ்டத்தில் அழகுக் கணவன் விழுந்திருந்தான்.

இண்டோ கமர்ஷியல் பாங்க் லிட்.

டைரக்டர்கள்

ஸர். A. ராமஸ்வாமி முதலியார், K. C. S. I. D. C. L. (Oxon.)
சேர்மன்.

ஸ்ரீ S. N. N. சங்கரலிங்க அய்யர்,
(டெப்டி சேர்மென்.)

,, T. R. வெங்கடராம சாஸ்திரியார், C. I. E.
,, A. M. M. முருகப்ப செட்டியார்,
,, R. விஸ்வநாத அய்யர், B.A., B.L.,
,, R. S. A. சங்கரய்யர்,
,, K. லக்ஷ்மணன்.

(சென்னை நகரத்திலுள்ள ஆபீஸ்கள்)

நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் ரோடு,
பெரியமேட், திருவல்லிக்கேணி, மயிலாப்பூர் & தியாகராயநகர்,

பிராஞ்சுகள்

அம்பாஸமுத்திரம்	புதுக்கோட்டை
ஆம்பூர் (N. A. Dt.)	ராமநாதபுரம்
சிதம்பரம்	சீர்காழி
கடலூர் N. T.	தஞ்சாவூர்
ஈரோடு	தென்காசி
காஞ்சீபுரம்	திருநெல்வேலி ஜங்ஷன்
காரைக்குடி	திருநெல்வேலி டவுன்
கும்பகோணம்	திருச்சிராப்பள்ளி
மதுரை	வேலூர்
மாருதேரு	விஜயபுரம்
மாயவரம்	விழுப்புரம் &
பாலக்காடு	விருதுநகர்

K. S. வைத்யநாதன்
அஸிஸ்டெண்ட் செக்ரடரி

பணமும் குணமும்

— எஸ். பி. ஹரிஹரன் —

விருப்பம்

மாதக் கடைசி. துணிக்கடைக் குமாஸ்தாவான பரமசிவத்தின் குடும்பத்திற்கு வறண்ட எண்ணெய்ப் பசையற்ற ரொட்டிதான் அன்றைய உணவு. இன்னும் இரண்டு நாட்களுக்கு இதே தான். மகன் சுந்தரத்தோடு அந்த விருப்பமற்ற சாப்பாட்டை சுவைத்துக் கொண்டிருந்த பரமசிவம் மனைவி மங்களத்தை நிமிர்ந்து பார்த்தார்.

"என்ன யோசனை? இன்னொரு ரொட்டி வேண்டுமா? வீட்டிலேயே இருக்கப் போகிற என்னைப் பற்றி என்ன கவலை. வேலை செய்யவேண்டிய நீங்கள் வயிறாரச் சாப்பிட வேண்டாமா?"

பரமசிவம் சிரித்தார். "அதற்கில்லை, மங்களம். நம் வீட்டிலே வறுமை, அண்டை அயல் வீடுகளில் தரித்திரம். எனக்கென்னவோ இந்தச் சுற்றுப்புறமே பிடிக்கவில்லை. என் மாமா வீட்டிற்குச் சென்று பணத்தால் சுகம் நிறைந்த அவ்வீட்டு வாழ்க்கையைக் கண்களாலாவது பார்த்துவிட்டு வரவேண்டும் என்று ஆசையாயிருக்கிறது........"

"போய்விட்டு வாருங்களேன். ஆனால் நான்கு நாட்களுக்கு மேல் தங்கக்கூடாது. எனக்கு இங்கே கஷ்டமாக இருக்கும்" என்று குறுக்கிட்டாள் மங்களம்.

"ஆமாம், இந்த மாதம் சம்பளம் வரட்டும். சுந்தரத்தோடு போய்விட்டு வருகிறேன். அவனும்தான் பாவம் நம் வயிற்றிலே பிறந்து என்ன சுகத்தைக் கண்டுவிட்டான்".

கடைக்கு நேரமாகிவிட்டதை உணர்ந்து பரபரப்புடன் வெளியே சென்றார், பரமசிவம். சுந்தரமோ தன் சென்னைப் பயணத்தைப் பற்றி நண்பர்களிடம் பறைசாற்றிக்கொள்ள ஓடினான்.

முதல் படி

இரண்டாம் தேதி காலை. பரமசிவம் சம்பளம் வாங்கிக் கொண்டு மாலை வண்டியில் ஏறி, இரவு சுமார் எட்டு மணிக்கு அவருடைய ஒன்றுவிட்ட மாமாவின் வீட்டை அடைந்தார். மாமா பாலசுந்தரம் அவரையும் சுந்தரத்தையும் எதிர்கொண்டழைத்து இரண்டு நிமிடம் பேசினார். உடனே தமக்கு வேலை இருப்பதாகவும் உள்ளே சாப்பிடலாம் என்றும் சொல்லி, சமையல்காரனிடம் அவர்களுக்கு உணவு படைக்கும்படி சொல்லிவிட்டுத் தம் அறையை நோக்கிச் சென்றார்.

தந்தையும் தனயனும் அவர்களுக்கு நேர் எதிரே தென்பட்ட அறையொன்றில் மூட்டை முடிச்சுகளை வைத்தனர். பாலசுந்தரத்தின் மனைவி ரேவதி காலில் செருப்போடு வந்தவள் அந்த அறைக்குள் நுழைந்து "அடடா, இது டிராயிங் ரூம் அல்லவா? அழகாக உடை உடுத்துச் சுத்தத்தையே விரும்பும் என் சிநேகிதிகள் எல்லோரும் இங்கேதான் உட்காருவது வழக்கம். அவர்கள் இதையெல்லாம் பார்த்தால் அவமானம்.

இதை வேறு எங்கேயாவது வையுங்கள்" என்றாள். இது கொஞ்சம் மனவருத்தம் ஏற்படுத்தினாலும் அவர்கள் இதைப் பொருட்படுத்தவில்லை. மூட்டைகளைத் தூக்கிக் கொண்டு டிராயிங் ரூமுக்குப் பின்புறமாக இருந்த அறைக்குச் சென்றனர். அவர்களைப் பின் தொடர்ந்த ரேவதி 'கொல்' என்று சிரித்தாள், "அது வேலைக்காரர்கள் அறை, அங்கே வைக்கவேண்டாம். வேறு எங்கேயாவது வையுங்கள்" என்றாள்.

சுந்தரம் முணுமுணுத்தான். "எங்கே வைப்பது என்று சொன்னாலும் தேவலையே. ஒவ்வொரு இடமும் அது இதற்கில்லை, இது அதற்காக இல்லை என்றால் என்னதான் செய்வது?"

பரமசிவம் மகனை முறைத்துப் பார்த்தார். நல்லவேளையாக இவர்கள் படும் சங்கடத்தைக் காணச் சகியாத ஒரு வேலையாள் மூட்டைகளை மாடிக்குக் கொண்டு சென்றான்.



பரமசிவம்

அடியெடுத்து வைத்தபோதே ஆரம்பித்த இந்தச் சங்கடம்சாப்பிடும்போதும் நீடித்தது. பளபளவென்று மின்னும் தட்டிலே அன்னம் படைக்கப்பட்டிருந்தது. அதைச் சாப்பிடுவதற்கென ஸ்பூன் என்ன, போர்க் என்ன, இப்படி எத்தனையோ? அவைகளால் சாப்பிட இயலாமல் தவித்தனர். அவர்கள் அவைகளைத் தூர வைத்துவிட்டுக் கையால் அள்ளிச் சாப்பிட்டபோது சமையல்காரன் கேலியாக நகைத்தான்.

கசப்பான இந்த அனுபவம் அவர்களுக்கு நெகிழ்ச்சியைத் தந்தாலும் அவர்கள் சிரமத்துடன் அதைப் பொறுத்துக்கொண்டனர். 'நாலு நாளில் இன்னும் ஒரு நாள்கூட ஆகவில்லையே!

சில அனுபவங்கள்

மறுநாள் காலை வழக்கத்திற்கு முன்னதாகவே எழுந்துவிட்டனர் பரமசிவமும் சுந்தரமும். அவசர அவசரமாகத் தோட்டத்திற்குச் சென்ற சுந்தரம் ஒவ்வொரு மரமாகப் பார்த்துக்கொண்டே வந்தான். அவன் தேடிய மரம் கிடைக்கவே அரை நொடியில் மரத்தில் ஏறி, தந்தைக்கு ஒன்றும் தனக்கு ஒன்றுமாகக் குச்சிகள் ஒடித்தான். கழிக்கப்பட்ட இலைகள் தரையில் கிடந்தன.

தோட்டக்கார முனியன் சப்தம் கேட்டு மரத்தடிக்கு வந்தவன் தரையில் கிடந்த இலைகளைப் பார்த்துக் கோபமடைந்தான். "என்னப்பா தம்பி. தோட்டம் பூராவும் குப்பை போடறியே. இப்பத்தான் பெருக்கினேன். பல் துலக்கக் குச்சிதானா வேணும்? அதைப் பட்டிக்காட்டோடே நிறுத்திக்கக் கூடாது! ப்ரஷ்ஷும் பேஸ்ட்டும இருக்குதே அப்பா" என்றான்.

சுந்தரம் வெட்கத்தோடு குழாயடியை அடைந்தான். குழாயைத் திருப்பவே அவன் சிரமப்பட நேர்ந்தது. அவனும் அவன் தந்தையும் ஒரு வழியாக வேலைக்காரர்களின் உதவியோடு குழாயைத் திறந்து பல் துலக்கி முடிந்ததும் 'டீ' சாப்பிடும் அறைக்குள் நுழைந்தனர்.

தும்பைப் பூவென மேஜையில் விரிக்கப்பட்டிருந்தது வெள்ளைத் துணி ஒன்று. அதில் சர்க்கரை, பால், டிகாக்ஷன் ஒவ்வொன்றும் தனித்தனியே வைக்கப்பட்டிருந்தன. தாயின் இனிய கைகளால் கலக்கப்பெற்ற டீயையே குடித்துப் பழகிய சுந்தரம் 'டீ' கலந்துகொள்ளத் தெரியாமல் விழித்தான். பரமசிவத்துக்குக் கொஞ்சம் பழக்கம் உண்டு. ஆனால், அவர் கலக்கும்போதும், சுந்தரம் சாப்பிடும்போதும் துணியில் கொஞ்சம் 'டீ' சிந்திவிட்டது. மிஸஸ் பாலசுந்தரம் கடுகடுப்போடு 'ப்ரூட்ஸ்' என்றாள். சமையலறையிலோ சமையல்காரன் தன் உதவியாளிடம் 'சுத்தப் பட்டிக்காடு" என்றான்.

இவற்றாலெல்லாம் மனவருத்தம் ஏற்பட்டாலும் சுந்தரத்திற்குப் பங்களா வாழ்க்கை

யில் ஆசை இருந்தது. ஆறு மணி முதல் பாலசுந்தரத்தைப் பார்க்க வரும் பிரமுகர்களும், மிஸஸ் பாலசுந்தரத்ததைப் பார்க்க வரும் சீமாட்டிகளுமாக வீடு கலகலப்போடு காணப்பட்டது. அவர்களுக்குக் காப்பியும், பலகாரமும் வழங்கப்படுவதும் வேலைக்காரர்கள் அங்குமிங்கும் நடமாடுவதும் சுந்தரத்திற்குத் திருவிழாக் காட்சியாக இருந்தது.

மணி பதினொன்றடித்துப் பன்னிரண்டும் ஆயிற்று. ஆனல் சாப்பாட்டைப் பற்றிய பேச்சே காணேம். பழையவமுதோ, காய்ந்த ரொட்டியோ எதுவானுலும் அம்மா பரிவோடு கூப்பிட்டுக் கொடுப்பாள். காலையில் 'டீ' சாப்பிட்டதுதான். பலகாரத்திற்குக் கூட அவன் கூப்பிடப்படவில்லை. பசி பொறுக்க முடியாத நிலையில் சுந்தரம் சமையலறைக்குச் சென்றுன்.

அங்கே அவன் கண்ட காட்சி......!

வீறிட்டலறவேண்டும் போல இருந்தது அவனுக்கு. நல்லவேளை, குரல் தொண்டையிலேயே அடங்கிவிட்டது. சமையல்காரன் ஆவி பறக்க ஒரு தவலை நிறையச் சோறும் அதற்கான கறிகுழம்பையும் டிரைவரிடம் கொடுத்துக்கொண்டிருந்தான். தோட்டத்தின் மூலையில் காத்துக்கொண்டிருந்த ஒரு பெண்ணிடம் அரை நொடியில் அவை அத்தனையும் மாறிற்று. அவள் டிரைவரின் மனைவி என்பதை ஊகிக்க முடிந்தது சுந்தரத்தால். மாமா, மாமியின் பணம் இப்படியா கொள்ளைபோக வேண்டும்? அப்பாவிடம் சொல்லி, மாமாவுக்கும் மாமிக்கும் இதைத் தெரியப்படுத்த வேண்டும் என்று நினைத்துக்கொண்டான் சுந்தரம்.

இதற்குள் சமையல்காரன் சுந்தரத்தைப் பார்த்துவிட்டான். "என்னப்பா பசிக்கிறதா? சாப்பாடு வேண்டுமா? உன் அப்பாவையும் கூப்பிடேன் சாப்பிடலாம்".

சுந்தரம் ஆமாம் என்னும் பாவனையில் தலையசைத்தான். "மாமா வரவில்லை! இந்த வீட்டில் சாப்பாட்டு நேரம் எப்போது?"

"எஜமானருக்கு ஓய்வு எப்போது கிடைக்கிறதோ அப்போது வருவார். சின்ன எஜமான் ஓட்டலில் சாப்பிட்டுக் கொள்வார். எஜமானி காலையிலேயே சாப்பிட்டாய்விட்டது. பெரிய மனிதர் வீடுகளில் சாப்பாட்டு நேரம் என்று ஒன்று உண்டா? அவரவர் வயிற்றை அவரவர் பார்த்துக்கொள்ள வேண்டியதுதான்."

"என்ன மாமி சாப்பிட்டுவிட்டாளா. கூழானல்கூட அப்பா சாப்பிடாமல் அம்மா சாப்பிடமாட்டாளே!"

சுந்தரத்துக்கு மாமாவின் வீட்டு நடவடிக்கைகள் வெறுப்பைத் தந்தன. "சீச்சீ, ஒருவர்க்கொருவர் பற்றுதலே கிடையாதா குடும்பத்தில்? பிள்ளை சாப்பிடுவது தாய்க்குத் தெரியாது. தாய் சாப்பிடுவது தந்தைக்குத் தெரியாது தந்தை சாப்பிடுவது தாய்க்குத் தெரியாது, — சமையல்காரன் டிரைவருக்கெனத் தனியாகச் சோறு வடித்துக் கொட்டுவது ஒருவர்க்கும் தெரியாது!!"

தந்தையிடம் விவரம் சொல்லி அவரையும் சாப்பிட அழைத்தான் சுந்தரம். உருளைக் கிழங்கு பரிமாறப்பட்டபோது அவனுக்குச் சிரிப்பாக இருந்தது. டிரைவர் கறியை எடுத்துக்கொண்டு போனபோது அதில் வெங்காய வாசனை வீசிற்று. ஆனல் இப்போதோ மருந்துக்குக் கூடக் காணேம். எஜமானையும்விட டிரைவருக்கு நல்ல சாப்பாடா?

இரவும் இதே கதிதான், யார் யார் வருகிருர்களோ அவரவர்களுக்குச் சாப்பாடு. படுக்கையும் அப்படியே. வேலைக்காரன் ஆறரை மணிக்கெல்லாம் படுக்கை விரித்து விட்டான். யார் யார் எவ்வெப்போது படுத்துக்கொள்கிருர்களோ?

மாமியும் மாமாவும் பேசிக்கொள்வதே கிடையாதா? பரிவோ அன்போ, அனுசரணையோ எதுவும் இல்லை. வெறும் இயந்திர கதியிலேயே எல்லாம் நடைபெறுகிறதே!

அவர் சொல்

முதல் நாள் பாடம் சுந்தரத்தை வேப்பங் குச்சி ஒடிப்பதினின்றும் தடுத்தது. பல் தேய்த்து முடிந்ததும் முதல் காரியமாக, சமையலறையை எட்டிப்பார்த்தான் சுந்தரம். நல்ல முதல்தரமான 'டீ'யைச் சமையல்காரன் குடித்துவிட்டு, மிகுந்த இலையில் நீரை ஊற்றி மேஜையில் கொண்டு வைப்பதை உணர்ந்தான்.

யந்திரகதியில் காலைச் சாப்பாடு முடிந்தது. கையலம்பிக்கொண்டு கூடத்தில் வந்தபோது கூடம் முழுமையும் கலாட்டாவாக இருந்தது. மிஸஸ் பாலசுந்தரம் எண்ணெய் தேய்த்துக்கொள்வதற்காகக் கழற்றிவைக்கப் பட்டிருந்த மூக்குப் பொட்டு காணமல் போய் விட்டதாம்.

மிஸஸ் பாலசுந்தரம் கத்திக்கொண்டிருந்தாள். "வேலைக்காரர்களையோ, சமையல்காரர்களையோ குற்றம் சொல்ல முடியாது. ஊரிலிருந்து வந்திருக்கிறதே பட்டிக்காட்டுப் பிணங்கள், அவைகள் தான் பதுக்கிவிட்டன." என்றாள் அவள்.

பாலசுந்தரம் மனைவியை அடக்கினார். "விருந்தினர்களை அவமானப்படுத்தக் கூடாது. சின்ன விஷயத்தைப் பெரிசாக்காதே, அவர்கள் போகிறவரை ஜாக்கிரதையாக இரேன்" என்றார்.

சுந்தரத்திற்குப் படாப்பழி கோபத்தைத் தந்தது. அதேசமயம் குற்றம் செய்யும் சமையல்காரனையும் வேலைக்காரர்களையும் பாராட்டுவதைக் கண்டபோது அவனுக்குச் சிரிப்பதா? அழுவதா? என்றே புரியவில்லை.



பாலசுந்தரம் மனைவி - ரேவதி

ஏறினால் குற்றம் இறங்கினால் அபராதம்

சுந்தரம் வாயிலில் சென்று அமர்ந்தான். இதற்குள் அவனுக்கும் அவன் தந்தைக்கும் பட்டண வாழ்க்கை சலித்துவிட்டது. எனவே அவர்களுக்கு உள்ளே இருக்கப் பிடிக்கவில்லை. சில நிமிடங்களுக்கெல்லாம் ஒரு கார் வந்தது. "ஏன் சார், பாலசுந்தரம் இருக்கிறாரா?" என்று கேட்டார் ஒருவர் காரிலிருந்தபடியே.

"ஓ இருக்காரே" என்று பதிலளித்தான் சுந்தரம்.

அவர் இறங்கி உள்ளே சென்றார். அரை மணி நேரம் கழித்து அவர் திரும்பிவந்த போது அவர் கூடவே வந்த பாலசுந்தரம் கார் மறையும் வரை காத்துக்கொண்டிருந்துவிட்டு, "ஏண்டா முட்டாள். யாராவது வந்தால் தீர விசாரிக்காமல் நான் இருக்கிறேன் என்று சொல்லிவிடுவதா? அதிகப்பிரசங்கி. உன்னால் எனக்கு இருபத்தைந்தாயிரம் ரூபாய் நஷ்டம்" என்று இரைந்தார்.

பரமசிவத்தின் முகத்தில் ஈ யாடவில்லை. நேரம் நியதிப்படி சென்றுகொண்டிருந்தது.

மறுபடியும் கார் வரும் ஓசை. பரமசிவம் பிள்ளை இந்தத் தரம் உஷாராக இருந்தார். இப்போதும் வந்தவர் முன்னவரைப் போலவே கேட்டார். "உங்கள் பெயர் என்ன" என்று கேட்டார் பிள்ளைவாள்.

"என் பெயர் சந்துரு. அவரால் எனக்கு ஒரு காரியம் ஆகவேண்டும்." என்றார் வந்தவர்.

சுந்தரம் யோசித்தான். அவரால் இவருக்குக் காரியம் ஆகவேண்டுமா? அப்படியானால் இவராலும் மாமாவுக்குச் சங்கடம் தான்...... அடுத்தவினாடியே அவன் அவர் இல்லையே. என்று பதில் கொடுத்துவிட்டான்.

பத்து நிமிடம் சென்றது. வெளியே மறுபடி வந்த பாலசுந்தரம் "என்னைத் தேடிக் கொண்டு சந்துரு என்ற பெயரோடு யாராவது வந்தாரா?" என்று கேட்டார்.

"ஓ வந்தார். நீங்கள் இல்லையென்று சொல்லிவிட்டேன்" என்று குதூகலத்தோடு பதிலளித்தான் சுந்தரம்.

வெளி வந்து விட்டது

சிவகாமியின் சபதம்

கல்கி ஆசிரியர் எழுதியது

இரண்டாம் பதிப்பு விலை ரூ. 15 0 0

எங்களிடம் கிடைக்கும் மற்ற புஸ்தகங்கள்

புத்தகம்	ஆசிரியர்	ரூ.	அ.	பை
சோலை மலை இளவரசி	கல்கி	3	8	0
மகுடபதி	,,	4	8	0
சாரதையின் தந்திரம்	,,	4	8	0
சங்கீத யோகம்	,,	5	0	0
பார்த்திபன் கனவு சுருக்கம்	,,	1	8	0
போரும் காதலும்	பொ. திருகூட சுந்தரம்	10	0	0
சத்தியாக்கிரகம்	,,	1	12	0
முத்தொள்ளாயிரம்	டி. கே. சி.	4	8	0
அரும்பிய முல்லை	தீபன்	3	8	0
சிறையில் தவம்	ராஜாஜி	4	0	0
ராஜாஜி உவமைகள் தொகுப்பு	சின்ன அண்ணமலை	1	8	0
கண்டறியாதனக் கண்டேன்	,,	2	0	0
சீனத்துச் சிங்காரி	,,	2	0	0
நான் கண்ட மகாத்மா	தி. சு. அவினாசிலிங்கம்	4	0	0
சத்தியமூர்த்தி பேசுகிறார்	சத்திய மூர்த்தி	4	8	0
அன்னா கரீனா (லியோ டால்ஸ்ட்டாய்)	மொழிபெயர்ப்பு, வெ. சந்தானம்	7	8	0
துன்பக்கேணி ஜெர்மன் நாவல் மொழிபெயர்ப்பு	எஸ். எஸ். மாரிசாமி	6	0	0
யுவதி	ஆர். வி.	5	8	0
பாரதி	சரச்சந்திரர்	6	0	0
கபாடபுரம்	புதுமைப்பித்தன்	3	0	0
பலி பீடம்	,,	3	0	0

(தபால் செலவு தனி)

இதர விபரங்களுக்கு

கமர்ஷியல் பிரிண்டிங் அண்ட் பப்ளிஷிங் ஹவுஸ்

16, அரண்மனைக்காரத்தெரு, சென்னை 1

தபால் பெட்டி நம்பர் 1569.

Prices Reduced

✸

SUPERBLEND POWDER

Rs. 2—12—0 per lb.



Retail Branches

285, China Bazaar Road, MADRAS.

71, Pondy Bazaar, T. NAGAR.

MEHTA'S SPECIALITIES

Well-known for their efficacy and Medicinal values

1. **SUNDARI ELIXIR**
   For all kinds of female irregularities in menses and a great uterine tonic.
2. ***PHOSPHORUS OIL***
   A great pain relieving oil ever prepared in annals of medicine.
3. ***MASTANA PILLS***
   Unique in the field, combining both Allopathic & Ayurvedic systems curing general debility, Rheumatic pains, Hay fever & what not.
4. ***DRAKHYASAVA WITH GOLD & MAKARDHWAJ***
   A great Blood Purifier & Digestive & Potential Tonic.

K. S. MEHTA & CO.

250, China Bazaar, MADRAS.

1952ல் என்ன நேர இருக்கிறது?

புத்தாண்டாகிய 1952ற்குள் ஏற்படக்கூடிய நன்மை தீமைகளை முன்கூட்டி அறிய விரும்பினால், ஒரு தபால் கார்டில் ஒரு புஷ்பத்தின் பெயரும், முழுவிலாசமும் அனுப்பிவையுங்கள். 12 மாதத்திற்குள் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், வியாபாரத்தில் வெற்றி, எந்த விதத்தில் பணம் கிடைக்கும், உத்தியோகம் எப்பொழுது கிடைக்கும், வழக்கில் வெற்றி, உத்தியோக மாற்றம் தேகாரோக்கியம், மனைவி மக்கள் சுகம், தேக அசௌக்கியம், தூர தேசப் பிரயாணம், பரீக்ஷையில் வெற்றி, கலியாணம், அதைப்பற்றிய பேச்சுகள், நிலபுலன்களின் மூலம் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், புதிய நட்பு, அதனால் உண்டாகும் பலன், சூதாட்டத்தின் மூலமாகவும், புலப்படாத இதர வழிகளினாலும் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்களையும், ஜோதிட முறைப்படி கணித்து அறிவிக்கப்படும். இதற்கு ரூ. 1—4—0 (வி. பி. மூலம் அனுப்பப்படும்). தபால் செலவு தனி.

இத்துடன் துரதிருஷ்டத்தை அதிருஷ்ட வழியில் செலுத்தும் உபாயங்களும் அனுப்பப்படும். இதனால் ஏற்படக்கூடிய இன்னல்களிலிருந்து இது தன்னைக் காப்பாற்றிக் கொள்ள உதவும். ஒரு முறை பரீக்ஷித்துப் பார்த்தால் எம்முடைய ஜோதிட அனுபவம் விளங்கும். பொய் என்று நிரூபித்தால் பணம் வாபஸ் செய்யப்படும்.

SHREE SWAMI SATYANARAIN JYOTISH ASHRAM

(c. k.) Nakodar. (p—b.)

"அட, பாவி, அவரால் எனக்குப் பெரிய காரியம் நடக்கவேண்டுமடா. இப்போது அவரை எங்கே என்று தேடுவேன்" என்று அலறினர் பாலசுந்தரம்.

"ஏறச்சொன்னல் எருதுக்குக் கோபம்; இறங்கச் சொன்னல் நொண்டிக்குக் கோபம்."

வெறுப்பு

மறுநாள் காலை ஏழரை மணி. பாலசுந்தரம் வேலைக்காரனைக் கூப்பிட்டார். 'டேய்! கையிலே பைசா இல்லை. பாங்கிக்குத் தான் போகவேண்டும். எட்டுமணிக்கு மேல் தானே பாங்கு. அம்மாவைக் கேட்டு ஐந்து ரூபாய் வாங்கிவா." என்ருர் அவர்.

வேலைக்காரன் தலையைச் சொறிந்து கொண்டு நின்ருன். "அவங்க இல்லைங்க; லேடீஸ் க்ளப்பிலே 'காம்ப்'பாம். வர பத்து நாள் ஆகுமாம். வேலை மேலே இருக்கற உங்களைத் தொந்தரவு செய்யக்கூடாதுன்னு ஏங்கிட்ட சொல்லிவிட்டுப் போனங்க" என்ருன்.

பாலசுந்தரம்

"சரி, சரி, காரியதரிசியைக் கேட்டுஇரண்டு ரூபாய் வாங்கிவா. செக் மாற்றியதும் தருவதாகச் சொல்." இது பாலசுந்தரம்.

சுந்தரத்துக்குத் தூக்கிவாரிப் போட்டது. பணம் நிறைய உண்டு. ஆனல், சமயத்திற்கு உதவாது. சாப்பாட்டில்தான் ஒருவர்க்கொருவர் விட்டேற்றியாக இருந்தார் கள் என்ருல் நீடித்த பிரிவைப் பற்றிக்கூடவா ஒருவரைப்பற்றி மற்றவர்க்குத் தெரியாது!

அன்றைக்குப் பரமசிவத்திற்கு ஒரு கடிதம் வந்தது. மங்களம்தான் எழுதியிருந்தாள். அவளுக்கு அவர் இல்லாத வாழ்வே பிடிக்கவில்லையாம். சுந்தரம் இல்லாத வீடு காடாக இருக்கிறதாம். உடனே புறப்பட்டு வரும்படி அழைத்திருந்தாள் அவள்.

சுந்தரம் உண்மையைப் புரிந்துகொண்டான். பணமும் குணமும் ஒன்று சேர்வதில்லை. பணமும் இதயமும் ஒருவரிடம் இருப்பது அரிது. பணம் வரும்போதே மனைவி, மக்கள், சுற்றம், பொருள்களிடம் கவலை எல்லாம் மறைகிறது."

"அப்பா இப்போதே போவோம்"

மகனை வாரியணைத்துக்கொண்டார் பரமசிவம். "ஆமாம் குழந்தை, எனக்குக்கூட இந்த வீடு பிடிக்கவில்லை. வா, மாமாவிடம் சொல்லிக்கொண்டு போவோம்" என்ருர் அவர்.

மாமாவிடம் சொல்லிக்கொண்டு வெளிப்பட்டபோது ஹாலில் விரிக்கப்பட்டிருந்த ரத்தினக் கம்பளம் தடுக்கிவிழுந்தான் சுந்தரம். அதனடியிலிருந்து 'மூக்குப்பொடு' வெளிப்பட்டது.

"அப்பா, அதோ மூக்குப்பொட்டு. வெளிவேஷமே தவிர சரியாகப் பெருக்குவதே கிடையாது, இல்லையா? கம்பளத்தைச் சுற்றிப் பெருக்கி, கம்பளத்தின் அடியிலேயே குப்பையைத் தள்ளிவிடுகிருர்கள். மூக்குப்பொட்டு குப்பையோடு குப்பையாக உள்ளே போய்விட்டது.' என்று துள்ளிக் குதித்தான் சுந்தரம்.

பாலசுந்தரம் முறைத்துப் பார்த்தார்.

ஏழை மனைவி

பரமசிவம் தெருத் திண்ணையில் உட்கார்திருந்தார். எடுத்துக்கொண்ட லீவில் ஒரு நாள் பாக்கி. அடுத்த வீட்டு, சுப்புரத்தினம் வெளியே வந்தார். "என்ன சார், நாலு நாட்களாகக் காணும்" என்று கேட்டார்.

"கொஞ்சம் பட்டணம்வரை போயிருந்தேன்."

"அதானே கேட்டேன். புகை போக்கியில் புகையே வெளிப்படவில்லை. மனைவியும் வந்திருந்தாளோ?"

அசட்டுச் சிரிப்புச் சிரித்தார் பரமசிவம். அவர் போனதும் உள்ளே நுழைந்த அவர் "என்ன மங்களம், நாலு நாளாகச் சாப்பிட வில்லையா?" என்று கேட்டார்.

மங்களம் தலையைக் குனிந்துகொண்டாள். "என்னவோ நீங்கள் இல்லாமல் சமைக்கவே பிடிக்கவில்லை. தோசை மாவு கொஞ்சம் இருந்தது. பழையதும் அதுவும் வயிற்றைச் சரிக்கட்டிவிட்டது" என்றாள் அவள்.

சுந்தரம் ஓடோடியும் சென்று தாயைக் கட்டிக் கொண்டான் வாஞ்சையோடு. "அம்மா, அவர்கள் எல்லாம் உணர்ச்சியற்ற ஜடங்கள், பொத்தல் பூஷணிக்காய்" என்று ஆரம்பித்து, தன் சென்னை அனுபவங்களைச் சொன்னான்.

மங்களம்

கடைசிப் படி

பரமசிவத்திற்கு இதற்குள் எதிர்பாராத அதிர்ஷ்டம் ஒன்று காத்துக்கிடந்தது. அவருடைய ஒன்றுவிட்ட பெரியப்பா ஒருவர் தம் திரண்ட செல்வத்தை யெல்லாம் பரமசிவத்திற்கு எழுதிவைத்திருந்தார். சுமார் ஒரு லக்ஷம் ரூபாய் பொறுமானமுள்ள சொத்து அது. வக்கில் ஒருவர் மூலம் பரமசிவம் இந்தச் செய்தியை அறிவதற்கும் சுந்தரம் விளையாட்டு முடிந்து திரும்புவதற்கும் சரியாக இருந்தது.

ஆனால் சுந்தரம் இந்தச் செய்தியைக் கேட்டுத் திடுக்கிட்டான். "அப்பா பணக்காரராய் விட்டாரா? அம்மாவும் அப்பாவும் இனி நெஞ்சில்லாதவர்களாக ஆகிவிடுவாரா? அம்மாவைப்பற்றி அப்பாவுக்குத் தெரியாது. அப்பாவைப்பற்றி அம்மாவுக்குத் தெரியாது. இருவரையும்பற்றி மகன் கவலைப்படமாட்டான். இனி வீடு பொத்தல் பூஷணிக்காய் தானா?"

அவனால் இந்த இடியைத் தாங்கவே இயலவில்லை.

இரவு!

பரமசிவம் பிள்ளையும் சுந்தரமும் பலவந்தமாகத் தூக்கத்தை வரவழைத்துக்கொண்டு தூங்கினர். திடீரென்று வீறிட்டலறினான் சுந்தரம்.

"என்ன அப்பா சுந்தரம்?" ஒரு பக்கம் தாய், மற்றொருபுறம் தந்தை.

"அம்மா." தாயின் மடியில் முகத்தைப் புதைத்துக்கொண்டான் சுந்தரம். "அம்மா நீ வெறும் அம்மாவாக இருக்கக்கூடாது. முன்புபோல அன்போடு இருக்கவேண்டும். பணம் வந்தால் அப்படி முடியாது. உனக்கும் இதயம் செத்துப்போகும். அப்பாவும், மனமற்றவர் ஆகிவிடுவார். பந்தம், பாசம், உறவு, மனிதத்தன்மை எல்லாமே போய் விடுமே!" என்றான் அவன்.

பரமசிவமும் ஏறக்குறைய அவன் கண்ட கனவையே கண்டார். பாலசுந்தரத்தின் வீட்டைப் போல ஆகிவிடுகிறது அவர் வீடும். இயந்திரகதியிலே நடக்கின்றன காரியங்கள்.

தந்தையின் உடம்பும், தனயனின் உடம்பும் வியர்வையால் நனைந்து கிடந்தன. தந்தை ஏழையின் இதயத்தோடு மகனின் தலையை வருடினார். "குழந்தாய், சொத்து நமக்கு வேண்டாம். தர்ம கைங்கர்யங்களுக்கு உபயோகப்படட்டும். நாம் மூவரும் பாசம் நிரம்பி வாழ்வது தான் அவசியம்." என்றார் அவர்.

அடுத்துக் கடந்த இரவின் பிற்பகுதி நிம்மதியான தூக்கத்தை அவர்களுக்குத் தந்தது.

பைத்தியம்

பத்திரிகைகள் கொட்டை எழுத்தில் பரமசிவத்தின் தாராள மனப்பான்மையைப் பிரசுரித்தன. ஸ்ரீமான் பாலசுந்தரம் அத்தகைய பத்திரிகை ஒன்றை எடுத்துக் கொண்டு, "இந்தப் பைத்தியம் செய்த கூத்தைப் பார். திரண்ட சொத்தைத் தர்மம் செய்துவிட்டது. புத்திஎன்பதேகிடையாது" என்று சொல்லிக்கொண்டே மனைவியின் அறையில் நுழைந்தார்.

அங்கே அவள் இல்லை. டில்லியில் நடந்த லேடீஸ் க்ளப் கூட்டம் ஒன்றில் 'பதி சேவை'யைப் பற்றி அவள் பேசிய பிரசங்கம் அதே பத்திரிகையில் வெளியாகியிருந்ததைப்பிறகு பார்த்தார் பாலசுந்தரம். பத்திரிகை அவள் பேச்சை' அனுபவபூர்வமாக அவள் கண்டறிந்த உண்மைகள் எனப் பாராட்டியிருந்தது.

ஆனால், அவள் டில்லிக்குச் சென்ற விவரமே அவருக்கு அப்போதுதான் தெரியும் என்பது அப் பத்திரிகையாளர்களுக்கு எப்படித் தெரியும்?

அதே சமயம் பரமசிவம் ஆனந்தக்கடலில் ஆழ்ந்திருந்தார். தர்ம கைங்கர்யங்களுக்கு அளித்த பணத்தின் நிர்வாகி என்ற முறையில் அவர் எடுத்துக்கொண்ட ஊதியம்—உழைப்புக்கூலி—அவர்கள் வாழ வழிசெய்து கொடுத்தது, இதயம் அவர்களிடையே மரத்துப்போகவில்லை. அறம் சாகவில்லை. அன்பு அழியவில்லை, மாறாக வளர்ந்தது. ●

பர்த் "ஸ்டேபிரைட்" எவர்ஸில்வர் ஸ்டீல் பாத்திரங்கள்

சுகாதாரத்திற்கு உகந்தவை

- ஒவ்வொரு குடும்பத்தின் தேவைகள் அனைத்திற்கும் அவசியமானது.
- கல்யாணங்களுக்கும் மற்றும் எல்லாவித விசேஷங்களுக்கும் சீர் வரிசையாகவும் வெகு மதியாகவும் கொடுப்பதற்கு மிகவும் கண்ணியமானவை.
- நீடித்த உழைப்பு, உறுதி, நம்பிக்கை, விலை மலிவு முதலிய சகல அம்சங்களுடன் மொத்தத்திலும் சில்லறையிலும் கிடைக்கும்.
- உபயோகத்தில் கறுக்காதவை, கைக்காதவை, உடையாதவை.

எம். ஏ. எதிராஜுலு நாயுடு

7/4, ஈவினிங் பஜார் (போன் 4108) மதராஸ்.

List of Prize winners of P. No. 6

72 Persons are awarded prizes in our Puzzle No. 6 (1st prize 34, 3rd prize 28 and 5th prize 10 persons) Full particulars are published in the Rainbow dated 10—4—52.

ரிஜிஸ்டர் நெ. 277

ரூபாய் 25,000 பரிசு

போட்டி நெ. 8

M/S. Premier Bank of India Ltd. Madrasல் சீல் செய்துவைக்கப் பட்டுள்ள எங்கள் சரியான விடை அவர்கள் அங்கீகாரத்தின் பேரில் பிரசுரிக்கப்படும். முற்றிலும் சரியான விடை அனுப்பு பவர்களுக்கு முதல் பரிசு ரூ 12 000. முதல் இரண்டு வரிசை சரியான விடைக்கு, இரண்டாம் பரிசு ரூ. 7000. முதல் ஒரு வரிசை சரியான விடைச்கு மூன்ரும் பரிசு ரூ. 3000. முதல் மூன்று நம்பர் சரியான விடைக்கு நான்காம் பரிசு ரூ. 2000/- முதல் இரண்டு நம்பர்கள் சரியான விடைக்கு 5-ம் பரிசு ரூ. 1000ம் அளிக்கப்படும். எங்கள் ஸீல் வைத்த விடைகள்படி எல்லாம் சரியாக இருக்கவேண்டும். வசூலுக்கு தக்கபடி பரிசுகள் மாற்றி பகிர்ந்து அளிக்கப்படும்.

AMBAL'S PUZZLES

KEY S. NO 6 13 TO 28=82

20	13	25	24
22	27	15	18
23	26	14	19
17	16	28	21

We hereby certify that the above is the solution in original deposited with us by Ambal's Puzzles No. 6 on 10/3/52 in a sealed cover which was opened in our presence to-day and that a copy of the above solution has been lodged with the Bank.

For The Premier Bank of India Ltd

V. Ramanathan 28/3/52

Agent, Madras

முடிவு தேதி 28—4—52 விடை 13—5—52

பிரவேசக் கட்டணம்:- கூபன் 1-க்கு ரூ. 1/- ... 6 கூபன் கொண்ட ஸெட் 1-க்கு ரூ. 5/-

118

விடைகள் கண்டுபிடிக்கும் விதம் :- 22 முதல் 37 வரையுள்ள எண்களைக் கொடுக்கப்பட்டிருச்கும் கட்டங்களில், மேலிருந்து கீழும், இடமிருந்து வலமும், குறுக்காகவும், எப்படிக் கூட்டிஞலும் 118 வரும்படியாக அமைக்கவேண்டும், ஒரு எண்ணை ஒரே தடவைதான் உபயோகிக்க வேண்டும். விதிகள் :- தனி வெள்ளைக் காகிதத்தில் தேவையான கட்ட ணத்துடன் எத்தனை கூப்பன்கள் வேண்டுமாஞலும் எழுதி அனுப்ப லாம். ஒவ்வொரு கூப்பனிலும் பெயர், விலாசம், எண்கள் எல்லாம் ஆங்கிலத்தில் விளக்கமாக எழுதப்படவேண்டும். பிரவேசக் கட்ட ணத்தை கிராஸ் செய்த போஸ்டல் ஆர்டர் மூலமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்பலாம். மணியார்டர் செய்த ரசீதை கூப்பன்களுடன் சேர்த்து அனுப்பவேண்டும்.- வசூலுக்குத் தகுந்தபடி, பரிசு பகிர்ந்து அளிக் கப்படும். போட்டி சம்பந்தமாக மானேஜர் தீர்ப்பே முடிவானதும் சட்டபூர்வமாய்க் கட்டுப் படுவதுமாகும். போட்டி முடிவு RAINBOW மாதமிருமுறை பத்திரிகையில் பிரசுரிக்கப் படும். அல்லது 4 அணு ஸ்டாம்பு அனுப்பிஞல் விடை அனுப்பப்படும்.

கூப்பன்கள் அனுப்பவேண்டிய விலாசம் :-

AMBAL PUZZLE No. 8

28 (7) Thandavaroya Gramani St., TONDIARPET, MADRAS-21.

ரிஜிஸ்டர் நெ. 277

ரூபாய் 25,000 பரிசு

போட்டி நெ. 9

சரியான விடை Premier Bank of India Ltd. Madras-ல் சீல் செய்துவைக்கப்பட்டுள்ளது. (மற்றவை மேலே கூறப்பட்டுள்ளதுபோல்.) முடிவு தேதி 13—5—52. விடை: 28—5—52

122

பிரவேசக் கட்டணம் கூபன் 1க்கு ரூ. 1/- 6 கூபன் கொண்ட ஸெட் 1க்கு ரூ. 5/-
விடைகள் கண்டுபிடிக்கும் விதம்:- 23 முதல் 38 வரையுள்ள எண்களை கொடுக்கப்பட்டுள்ள கட்டங்களில் எப்படிக் கூட்டிஞலும் 122 வரும் படி அமைக்கவேண்டும். ஒரு எண்ணை ஒரே தடவைதான் உபயோ கிக்கவேண்டும். மற்ற விபரங்கள் மேற்கூறியதுபோல்.

கூபன்கள் அனுப்பவேண்டிய விலாசம் :-

AMBAL PUZZLE No. 9

28 (7) Thandavaroya Gramani St., TONDIARPET, MADRAS-21

இனாம்! இனாம்!! இனாம்!!



எமது நெ. 501 கறுப்பு மயிர் தைலத்தை (ரிஜிஸ்டர்டு) உபயோகிப்பதன் மூலம் எல்லாவிதமான மயிரும் மைக்கறுப்பாக மாறி, பின்னர் எப்பொழுதுமே கறுப்பாக வளரும். இது மயிர்கள் உதிர்ந்து போவதைத் தடுத்து, மிகவும் நீண்டதாகவும், பிரகாசமாகவும், சுருண்டதாகவும், வளரச்செய்கிறது. புட்டி ஒன்று விலை ரூ. 1—15—0; 3 புட்டிகள் (பூரா முறை) ரூ 5—0—0.

இந்த அதிசயத் தைலத்தை எங்கும் பரப்ப, ஒவ்வொரு புட்டியுடனும் அழகிய பான்ஸி ரிஸ்ட்வாட்சும் மோதிரமும் (நியூ கோல்டு) அளிக்க நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். வாட்சின் அழகும், உறுதியும் 15 வருஷங்களுக்கு உத்தரவாதம். 3 புட்டிகள் வாங்குவோருக்கு 6 பான்ஸி ரிஸ்ட் வாட்சுகளும், 6 நியூ கோல்டு மோதிரங்களும் இனாம். அங்கீகரிக்காமல் போனால் பணம் வாபஸ்.

ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்.

AMRIT PHARMACY (c. k.)

JULLUNDUR CITY.

பிரிய சகோதரிகளே!

நான் ஓர் நர்ஸ் அல்ல, டாக்டரும் அல்ல. எனக்கு வைத்தியமும் தெரியாது. நானோ உங்களைப்போல் ஓர் குடித்தனப் பெண். எனது கல்யாணமான ஒரு வருடத்திற்குப் பின் துர்ப்பாக்கியத்தினால் லிகோரியாவும் (வெட்டை) சூதக வியாதியும் ஏற்பட்டு விட்டன மாதவிடாய் நின்று விட்டது. அவ்வாறு ஏற்பட்டாலும் மிகுந்த வேதனையுடன் சொற்பமாகவே வெளி வந்தது. வெள்ளை நீர் (ஸ்வேதப்ரதர்) அதிகம் வெளி வருவதால் தினம் தினம் மிகவும் பலவீனம் அதிகரித்துக் கொண்டு வந்தது. முகம் வெளுத்து விட்டது. வீட்டு வேலை செய்யவும் முடியவில்லை. எப்பொழுதும் தலை கிறுகிறுப்பு இருந்து வந்தது. இடுப்பு வலியும் ஏற்பட என் சரீரமே கெட்டு விட்டது. என் கணவர் நூற்றுக்கணக்கான ரூபாய் செலவு செய்து மருந்து வாங்கிக் கொடுத்தும் பலன் இல்லை. இரண்டு ஆண்டுகள் மிகுந்த துக்கத்துடன் ஓடி மறைந்தன. நல்ல காலமாக ஒரு நாள் ஓர் சந்நியாசி பிச்சைக்காக என் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தார். நான் பிச்சை போட வெளியில் வந்ததும் அவர் என் முகத்தைப் பார்த்து, "அம்மா, உனக்கு என்ன வியாதி? இந்த வயதிலேயே உன் முகம் பஞ்சு போன்று இருக்கிறதே?" என்றார். நான் முழு விருத்தாந்தங்களையும் கூறினேன். அவர் என் கணவரைக் கூப்பிட்டு ஓர் மருந்து சொன்னார். அம்மருந்தை 15 தினங்கள் சாப்பிட்டதும் என் முழு வியாதியும் தீர்ந்து விட்டது. ஆண்டவன் அருளால் இப்பொழுது நான் பல குழந்தைகளுக்குத் தாயாக இருந்து வருகிறேன். இம்மருந்தினால் நூற்றுக்கணக்கான பெண்களுக்கு நன்மைசெய்தும் வருகின்றேன். இந்த அற்புத மருந்தை இக்கொடிய ரோகத்தினால் வாடும் என் சகோதரிகளின் நன்மைக்காகவே அசல் விலைக்குக் கொடுத்து வருகிறேன். ஆண்டவன் எனக்குப் போதிய செல்வம் அளித்திருக்கிறார். இதன் மூலம் நான் லாபம் சம்பாதிக்க விரும்பவில்லை. ஒரு பெண்ணிற்கு 15 தின மருந்தின் அசல் விலை ரூ. 2—14—0 [ரூபாய் இரண்டு அணா பதினான்கு] தபால் செலவு தனி.

இத்துஷ்ட ரோகத்தினால் பீடிக்கப்பட்டவர்கள் உடனே எழுதுங்கள். என் கையால் மருந்து தயாரிக்கப்பட்டு வி. பி. பி. மூலம் அனுப்புகிறேன். தர்மத்தின் பொருட்டு அசல் விலைக்கே மருந்து கொடுக்கப்படுகிறது. அவசியம் கவனிக்க: இந்த ரோகத்திற்குத்தான் என்னிடம் மருந்து உண்டு. மற்ற வியாதியைப் பற்றிய மருந்திற்கு எழுதற்க.

Shrimathi. BIBI CHARAN PIARI

Sant Nagar (C. K.) Jullundur City

நவயௌவனமளித்து
ஆனந்தமயமான
ஆரோக்கியவாழ்க்கைக்கு
பண்டிட்
D. கோபாலாசார்லுவின்
ஜீவாம்ருதம்

ரத்தத்தை சுத்தீகரித்து தசைகளை புஷ்டியாக்கி நரம்புகளுக்கு வலுவூட்டி இளமைமுக வசீகர ஜ்வலிப்புடன் இல்வாழ்க்கையின் இன்பம் பெற ஜீவ சக்தியை அதிகரிக்கும் நம்பிக்கையான டானிக்.

ஜீவாம்ருதம்

ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட்
மதராஸ் 17.

199333
சென்னை-600 008



ரொக்கப்பரிசு ரூ. 1000

(அபூர்வ சக்தியுடையது)

மாய மோதிரம்

இந்த மோதிரம் மாயா ஜாலத்தாலும் மெஸ்மரிஸ சக்தியாலும் தயாரிக்கப்பட்டது. யாராவதொருவர் இம்மோதிரத்தை அணிந்துகொள்ளுங்கள்; உங்கள் காரியங்களில் வெற்றியோ, அல்லது உங்களிடம் பணிவோ ஏற்படச் செய்யும். உங்களை எல்லாவித ஆபத்துக்களிலிருந்தும் இது காப்பாற்றும். துர்த்தேவதைகள் உங்களிடம் அணுகா. இந்த மாய மோதிரத்தை அணிந்துகொண்டவர்களிடம் ஆண், பெண் அடங்கி நடப்பார்கள். இவர் பெயரைக் கேட்டாலே நடுங்குவர். காணாமற்போனவர்களைக் கண்டறியலாம். நீங்கள் காதலில் வெற்றியும், கோர்ட்டு வழக்குகளிலும் உத்தியோக உயர்விலும், அதிகப் பணம் சம்பாதிப்பதிலும் வெற்றியடைவீர்கள். சுருங்கச்சொன்னால் இம்மோதிரம் ஒரு பாதுகாப்பாளரைப் போன்றது. ஒருமுறை பரீக்ஷியுங்கள். முதல் இரவிலேயே பலன் காண்பீர்கள். இதன் விலை ரூ. 1—15—0. ஸ்பெஷல் ரூ. 3—0—0. ஸ்பெஷல் அதிக சக்திவாய்ந்தது ரூ. 3—15—0. தபாற்செலவு தனி. பலனில்லையென்றால் பணம் வாபஸ் செய்யப்படும்.

Principal, Bengal Mesmerism House (C. K)
JULLUNDUR CITY Ph

Edited & Published by N R Ramanujan & Printed by S Rangaswami
at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam

உங்களுடைய ஸிமெண்ட் தேவைக்கு



திடத்திலும்
தரத்திலும்
தேர்ந்தது

சங்கர்

I C

பிராண்ட்

சூலம் மார்க்
போர்ட்லண்ட் ஸிமெண்ட்

இந்தியா ஸிமெண்ட்ஸ் லிட்

தொழிற்சாலை:
தாழையூத்து, திருநெல்வேலி ஜில்லா.

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்:
11/12, ஸெகண்ட் லைன் பீச், மதராஸ்-1.

Cauveri Colour Press, Kumbakonam.